எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

# ஆசிரியம்

Aasiriyam (pedagogy)

ආසිරියම්



இதழ்

25–26

மே–யூன் –2013

ISSN 2021-9041

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

## வெளியிடப்படாத சுற்றறிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன

100/-

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




விலை: 400.00

## சேமமடு பொத்தகசாலை

யூ.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு–11
தொ.பே: 011–2472362 தொ.நு: 011–2448624
மின்னஞ்சல் : chemamadu@yahoo.com
இணையம் : www.chemamadu.com

மே-யூன் -2013 இதழ் 25-26

# உள்ளே...

■வெளியிடப்படாத சுற்றறிக்கைகள்.....
அன்பு ஜவஹர்ஷா - 5

■இலங்கையின் கல்வி மீதான பிரச்சினைகள்
க.கோமளேஸ்வரன் - 10

■21ஆம் நூற்றாண்டுக் கல்வி இலக்கு.....
ஏ.எல்.நௌபீர் - 15

■பிரத்தியேகக் கல்வியும் பாடசாலைக் கல்வியும்
எஸ்.என்.ஏ.அருஸ் - 22

■பிள்ளைகளின் கல்வி விருத்தியில் ....
க.பேர்ணாட் - 31

■தேர்ச்சி மையக் கலைத்திட்டமும் .....
கி.புண்ணியமூர்த்தி - 40

■ஆசிரியர்கள் : இணைந்து பணியாற்றுதல் ....
க.சுவர்ணராஜா - 46

■தெரிதாவின் கட்டுமானக் குலைப்பின் ....
சபா.ஜெயராசா - 54

■பயன்தரு கற்பித்தலில் வன்பொருள் ...
சு.பரமானந்தம் - 57

■நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்..
அன்பு ஜவஹர்ஷா - 65

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

தொடர்புகளுக்கு:

தெ.மதுசூதனன்

077 1381747 / 011 2366309/ 021 2227147

காசுபதி நடராஜா – 0777 333890
மர்சூம் மௌலானா– 077 4747235
அ.ஸ்ரீகாந்தலட்சுமி– 0777 286211

படைப்புகள் அனுப்ப :

*aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*

பணம் அனுப்ப :

**Chemamadu book centre - BOC Bank -**
A/C- NO :8081150

**Chemamadu book centre - COM Bank -**
A/C- NO:1120017031

ISSN 2021-9041

# ஆசிரியம்

இதழ்
25–26

**ஆசிரியர் :**

தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**

அ.ஸ்ரீகாந்தலட்சுமி

எம்.என்.மர்சூம் மௌலானா, காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**

பேரா.க.சின்னத்தம்பி, பேரா.சபா.ஜெயராசா

பேரா.சோ.சந்திரசேகரன், பேரா.எம்.ஏ.நு:மான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**

சுந்தரம் டிவகலாலா, ச.சுப்பிரமணியம்

சி.தண்டாயுதபாணி, அன்பு ஜவஹர்ஷா

வல்வை ந.அனந்தராஜ், த.மனோகரன்

**ஆலோசகர் குழு :**

பேரா.மா.கருணாநிதி, பேரா.மா.சின்னத்தம்பி

பேரா.மா.செல்வராஜா, முனைவர் த.கலாமணி

ஆய்வாளர்.தை.தனராஜ், முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்,

முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்,

செ.அருண்மொழி, சு.முரளிதரன், பொ.ஐங்கரநேசன்

**நிர்வாக ஆசிரியர் :**

சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**

வை.கோமளா

**Printed by: cbc prees**
Tel : 0777 345 666

தொடர்புகளுக்கு :

"Aasiriyam" 180/1/50 People's Park, Colombo -11,Tel: 011-2331475

E-mail : aasiriyam@gmail.com, Web:www.chemamadu.com/aasiriyam.aspx

## மூன்றாம் ஆண்டில் அடுத்த காலடி....!

நாம் கடந்த பல வருடங்களாக ஆசிரியத்துவம்சார் கல்விப் பணியில் பணியாற்றி வந்துள்ளோம். இந்த ஆக்க மரபில் ஓர் தொடர்ச்சியையும் பேணி வந்துள்ளோம். இதன் அடையாளமாகவே தற்போது "ஆசிரியம்" வெளிவந்து இரண்டாண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இந்தக் காலப்பரப்பில் நாம் பெற்ற பாடங்கள், அனுபவங்கள் பன்முகப் பரிமாணம் கொண்டவை. அவை கசப்பானவையும் கூட. இவற்றினூடு "ஆசிரியம்" மூன்றாம் ஆண்டில் புதுப் பொலிவுடன் காலடியெடுத்து வைக்கின்றது.

எவ்வாறாயினும் நமக்குள் "ஆசிரியம்" தொடர்ந்து வெளிவர வேண்டுமா? என்ற கேள்வி எழாமல் இல்லை. இதுவரை தமிழ்க் கல்விச் சூழல் தந்த உற்சாகமும், ஆதரவும் மட்டுமே இந்த இதழ் நீடித்து நிலைத்து வருவதற்கு போதுமாய் இருக்கவில்லை. மாறாக நம்மிடமிருந்த மற்றும் ஒரு சிலரிடம் இருந்த தனிநபர் ஆர்வம், தனிநபர் விருப்பம், நமக்குள்ள சமூக உணர்வு, நமக்குள்ள சமூகப் பொறுப்பு, இதழின் வருகையில் தொடர்ச்சி பேணல் முதலான காரணங்கள் தான் ஆசிரியத்தின் வருகையை உறுதிப்படுத்தி இருந்தன. மற்றும்படி வேறு காரணங்களைக் கூற முடியாமல் உள்ளது. ஆனால் ஆசிரியம் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்குப் பல காரணங்களைக் கூற முடியும். இதையும் மீறி நாம் முன்னர் குறிப்பிட்ட காரணங்கள் நம்மை வழிநடத்துவதால் தான் இப்போது "ஆசிரியம்" வெளிவருகின்றது.

இந்த இதழிலிருந்து "ஆசிரியம்" இரு மாத இதழாகத்தான் வெளிவரும். ஆகவே, இதழ் வடிவமைப்பிலும் அதன் அளவிலும் மாற்றங்களை உருவாக்கியுள்ளோம். சில பக்கங்களையும் அதிகரித்துள்ளோம். உள்ளடக்க விடயத்திலும் அதிகம் கவனம் குவிக்க உள்ளோம். மாற்றங்கள் நோக்கிய கவனக் குவிப்பும் நகர்வும்தான் ஆசிரியத்தின் இயங்கு விதியாக இனி அமையும். காலத்தின் தேவைக்கேற்ப நாம் மாற்றங்களை உட்புகுத்தி மேற்செல்ல வேண்டும். இது எதார்த்தமான நடைமுறையாகும்.

பொதுவாக நாம் சலிப்பூட்டும் சிந்தனை, சலிப்பூட்டும் எழுத்துநடை முதலானவற்றிலிருந்து விடுபட்டு செயற்படுவது முக்கியம். இந்தப் புரிதல் நமக்கு உண்டு. இந்தப் பண்பு வாசகர்களுக்கும் வேண்டும். எழுத்தாளர்களுக்கும் வேண்டும். எந்தவொரு ஆக்கமும் வாசிப்பவரின் இயல்புகளுக்கு ஏற்றவாறு பலபல ஆக்கங்களாக மாறிவிடுகின்றது. அவ்வாறு தோன்றும் விடயப்பரப்பானது பன்மையப் பொருள் விரிவாக்கம் கொண்டது. இதனால் வாசிப்பு என்பது ஆக்கத்தின் மீது சவால் விடுக்கும் நிலையாகின்றது. நவீன அறிவு வளர்ச்சி, நவீன சிந்தனை வளர்ச்சி அத்தகைய சவால் விடுத்தலை பன்மடங்காக்கி வருவதுடன் ஆழமாக்கிச் செல்வதற்குரிய அறிகை விசையையும் வழங்கி வருகின்றது. அந்நிலையானது வாசகர் எழுச்சிக்கு வழிகோலுகின்றது. ஆகவே

"ஆசிரியம்" இந்தச் செல்நெறிகளையும் விளங்கிக்கொண்டு தனது பயணத்தை மேற்றொடர வேண்டும்.

தற்போது நமக்குள்ள இன்னொரு பெரும் சவால், படைப்பவர்கள் அல்லது எழுதுபவர்கள் தமது எழுத்துவழி கட்டமைக்கும் அறிகைவிசைத் தொடர்பில் காத்திரமான சிந்தனை, கடுமையான உழைப்பு முதலானவற்றை வழங்க முடியாது இருப்பதுதான். இதனால் மாற்றங்களை உருவாக்கும் விமரிசன நோக்குக் கொண்ட உயிர்ப்பு மிகு படைப்புகள் வெளிவராமல் உள்ளன.

இன்னொருபுறம், நம்மிடையே புத்தாக்கமான சிந்தனைகளை, ஆய்வுகளை பகிர்ந்து கொள்வதற்கான புலமைத் தரிசனமும், சமூகநோக்கும் வரட்சி கொண்டுள்ளன. இவற்றை உள்வாங்கிய அறிஞர் குழாம் கல்வியியலாளர்கள் தாம் எங்கும் நிலைபேறாக்கம் அடைந்துள்ளனர். இவர்கள் தமக்குள்ள நிறுவனப்பலம், அதிகாரத் துஷ்பிரயோகம், ஆதிக்க மனப்பாங்கு முதலானவற்றுடன் கல்விச் செயற்பாடுகளை ஜனநாயக விரோத அசமத்துவ செயற்பாடுகளோடு ஒன்றிணைக்கின்றனர். இதனால் நாம் முகங்கொடுக்கும் எதிர்விளைவுகள் இன்னும் சிக்கலானவையாக உள்ளன. இவை குறித்தும் நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு விரிநிலை நோக்கிய சுதந்திர மனப்பாங்குடன் திறந்த உரையாடலுடன் சிந்தித்துச் செயலாற்றுவதற்கும் மாற்றங்களை உருவாக்குவதற்கும் "ஆசிரியம்" முழுமனதுடன் ஈடுபட தயாராக உள்ளது. இந்த மனப்பாங்கு ஆதிக்க அதிகார சக்திகளால் மாசுபடாமல் பார்த்துக்கொள்வது நமது பணிகளில் முதன்மையாக இருக்கும். புகழ்பெற்ற கல்வியாளர் ஜே.பி.நாயக் சொல்கிறார் கல்வி என்ற முக்கோணத்தின் மூன்று பக்கங்கள் அளவு, தரம், சமத்துவம். இவற்றில் ஒரு பக்கம் சரிந்தாலும் முக்கோணமே சிதைந்துவிடும். இந்த மூன்று சவால்களையும் ஒருசேர எதிர்கொண்டால்தான் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும். முக்கோணத்தின் சமத்துவப் பக்கம் நம்நாட்டில் சரிந்து கிடப்பதனால் எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் விழலுக்கிரைத்த நீராகி விடுகின்றன.

இன்று கல்வி உலகம் தழுவிய நுகர்ச்சிப் பண்டமாக மாற்றப்பட்டு வருகின்றது. உலகச் சந்தை என்ற கண்ணோட்டத்திலே கல்வி இயக்கப்படுகின்றது. இதனால் கற்றவர்கள் தமது நிலத்திலிருந்தும் தமது பண்பாட்டிலிருந்தும் பிடுங்கி எறியப்படுகிறார்கள். இந்த நடைமுறை தமிழ்ச்சூழலில் வலுவாக வேரூன்றி வருகின்றது. இதனை மாற்றியமைக்கும் வகையில் கல்வியின் மூலம் சக்தி வாய்ந்த சமுதாய உருவாக்கம் நிகழ்த்தப்பட வேண்டும்.

நாம் மாற்று ரீதியில் சிந்திக்கவும் செயற்படவும் உரிய களங்கள் நோக்கிய சொல் - செயல் இணைவுக்கான போராட்டம் பல முனைகளில் இருந்து தீவிரப் படுத்தப்பட வேண்டும். சுயத்துவம், சுயமரியாதை எங்கும் நிலைநிறுத்தப்படுவதை சாத்தியப்படுத்தும் கருத்தியல் வெளி உருவாக்கப்பட "ஆசிரியம்" தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளும். இதற்கேற்ப "ஆசிரியம்" கருத்தியல் சார்ந்த போராட்டத்தை, கருத்துருவாக்கப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

**தெ.மதுசூதனன்**

# வெளியிடப்படாத சுற்றறிக்கைகள் இடை நிறுத்தப்பட்டன

■ அன்பு ஜவஹர்ஷா

கல்வி அமைச்சின் 2010/38 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையையும், 2005/4ஆம் இலக்க சுற்றறிக்கையின் நியதிகளைச் செயல்படுத்துவதற்காக பொது ஆலோசனைக் குறிப்பு - 2 என்ற அறிவுறுத்தலையும் இடைநிறுத்தியே கல்வி அமைச்சின் செயலாளர் சகல கல்வி வலயங்களுக்கும் கடிதமொன்றை அனுப்பியுள்ளார். கல்வி அமைச்சினால் சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுவது, இரத்துச்செய்யப்படுவது, முரண்பாடுகள் தொடர்பாக ஆசிரியத்தில் பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. சுற்றறிக்கைகள் விளக்கமாகத்தானே வெளிவருகின்றன. இவற்றைப் பற்றி ஏன் எழுத வேண்டும்? என்ற கேள்விகள் கூட பலரால் எழுப்பப்பட்டு இருந்தன.

அரச சேவை தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு வெளியிடும் சுற்றறிக்கைகளுக்கும் கல்வி அமைச்சு வெளியிடும் சுற்றறிக்கைகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. 1994.10.06 திகதி தொடக்கம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை தொடர்பாக 2011.11.11ஆம் திகதி வெளியிடப்பட்ட 2011/30 ஆம் இலக்கச் சுற்றறிக்கை வரை நூற்றுக்கு மேற்பட்ட சுற்றறிக்கைகளும், விளக்கக் கடிதங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு வெளியிடப்படுகின்றமைக்குப் பிரதான காரணம் தெளிவற்ற தன்மையும், தவறுகளும் சுற்றறிக்கைகளில் இருக்கின்றமையாகும்.

95க்கும் மேற்பட்ட கல்வி வலயங்களும் 9 மாகாண கல்வித் திணைக்களங்களும் இவற்றைச் செயற்படுத்தும் போது ஆயிரக்கணக்கான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. உள்ளீர்ப்புகள், சம்பள மாற்றங்கள், பதவி உயர்வுகள் வலயத்துக்கு வலயம் மாறுபட்டதாக இருப்பதால் ஒரே தகைமையுள்ள, ஒரே திகதியில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு வெவ்வேறு விதமாக இவைகள் செய்யப்பட்டுள்ளன. இவை சரியாக இருந்தாலும் பிழையாக இருந்தாலும் ஒரு பகுதியினர் பாதிக்கப்பட்டே வருகின்றனர். இவை தொடர்பாக கல்விக் காரியாலயங்களோ பாதிக்கப்பட்டவர்களோ விடுக்கும் கோரிக்கைகளுக்கு தெளிவான பதில்கள் கிடைப்பது இல்லை. பரஸ்பரமான பதில்கள் கிடைத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

கட்டுரையாளர்
ஓய்வு பெற்ற அதிபர் ஆசிரியத்துவம் கல்வி சார்ந்து பல்வேறு கட்டுரைகளை தொடர்ந்து எழுதி வருபவர்.

இலங்கை ஆசிரியர் சேவை தொடர்பாக 95/7, 97/5, 98/8, 99/1 (i), 99/1(ii), 99/1 (iii), 2000/14, 2001/12, 2001/12(i), 2004/1, 2005/4, 2008/45, 2008/50, 2009/4, 2009/25, 2009/27, 2011/30 என்ற இலக்கங்கள் கொண்ட 18 பிரதான சுற்றறிக்கைகள் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன. இவைகள் இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு, பதவி உயர்வு செய்வது தொடர்பானவையாகும். மற்றைய சுற்றறிக்கைகளும் கடிதங்களும் அறிவுறுத்தல்களும் மேற்சொல்லப்பட்டவற்றை விளக்குவதற்காக வெளியிடப்பட்டவையாகும். இவ்வளவு சுற்றறிக்கைகள் வெளிவந்த பின்பும் பிரச்சினைகள் தொடர்வதால் 7 பின்னிணைப்புகளுடன் எட்டுப் பக்கங்களைக் கொண்ட 2010/38 இலக்கச் சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டது. அப்போதைய கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம்.குணசேகரவின் பெயரிடப்பட்டு தயாரிக்கப் பட்ட இந்தச் சுற்றறிக்கை பல முரண்பாடுகளுக்குத் தீர்வு தரக்கூடியதாக இருந்தாலும் ஒரு தொழிற்சங்க செயலாளர் வழக்குத் தொடுப்போம் என்று எதிர்த்தமையால் வெளியிடப்படவில்லை. இந்த வெளியிடப் படாத சுற்றறிக்கையையே தற்போதைய கல்வி அமைச்சின் செயலாளர் இடைநிறுத்தம் செய்துள்ளார். இச்சுற்றறிக்கையில் செயலாளர் கையொப்பம் இடாவிட்டால், 2011.01.07 எனத் திகதியிடப்பட்டு வலயப் பிரதிகளுக்கு நேரடியாக ஒவ்வொரு பக்கத்திலும் யாரோ முதலெலுத்து ஒப்பங்கள் இட்டுள்ளார்கள்.

கடத்தப்பட்டோ, அனுப்பப்பட்டோ எப்படியோ வலயங்களுக்கு இச்சுற்றறிக்கை சென்று இதன்படி உள்ளீர்ப்பு, பதவி உயர்வு, சம்பள மாற்றிய மைப்பு வழங்கப்பட்டுள்ளன. 26 மாதங்களுக்குப் பின்னரே இது கண்டுபிடிக் கப்பட்டு இப்போது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இன்று சுற்றறிக்கைகளோ, வரைபுகளோ இரகசியமானவை அல்ல. நிழற்படப் பிரதி, ஸ்கேன், தொலைநகல் போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகளால் சகலரும் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். பெரும்பாலானவர் களிடம் இவை இருக்கின்றன.

இதேபோல் 2005/4 இலக்கச் சுற்றறிக்கைக்கான பொது ஆலோசனைக் குறிப்பு - 2 என்பதும் கையொப்பம் இட்டு வெளியிடப்படாத ஒன்றாகும். இது தயாரிக்கப்பட்டு ஆலோசனைகளைப் பெறுவதற்காக மாகாண கல்விக் காரியாலயங்களுக்கு கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டது. ஒரு மாகாணம் இதை மொழிபெயர்த்து செயற்படுத்துமாறு வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் அனுப்பியதால் பலவித சிக்கல்கள் உண்டாகின. இவைகள் இரண்டும் தொடர்பாக கல்வி அமைச்சு புலனாய்வு பிரிவினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பட்டதாரி ஆசிரியர் சங்கச் செயலாளர் உட்பட பலரிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி சுற்றறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கும் ஆலோசனை குறிப்பு தயாரிக்கப்படுவதற்கும் பிரதான காரணம் பட்டதாரி ஆசிரியர்களுக்கான உள்ளீர்ப்பு, புள்ளி வழங்கல், பதவிஉயர்வு, சம்பள மாற்றியமைப்புகள் போன்ற விடயங்களில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள்

தெளிவில்லாத காரணத்தால் பலவிதமான முரண்பாடுகள் உண்டானமை யேயாகும்.



கல்வியமைச்சின் செயலாளரின் 2013.03.06 தினக் கடிதத்தால் இடைநிறுத்தம் செய்யப்பட்ட மேற்படி இரண்டு ஆவணங்களிலும் பெரும்பாலும் பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்சினைகளுக்கே தீர்வு காணப்பட்டு இருந்தது.

தொழிற்தகைமையற்ற பட்டதாரிகளுக்கு நிவாரணம் வழங்க வெளியிட்ட கல்வியமைச்சின் 2008/45ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு தவறான விளக்கங்கள் தந்து வெளியிடப்பட்ட 2010.04.01, 2010.07.21 திகதிகளைக் கொண்ட கடிதங்களும் இது தொடர்பாக வலயக் கல்விக் காரியாலயங்களுக்கு அனுப்பப்பட்ட சகல ஆலோசனைக் கடிதங்களும் 2010/38ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் இரத்துச் செய்யப்பட்டு இருந்தது. மேலே சொல்லப்பட்ட இரண்டு கடிதங்களாலும் உண்டான குளறுபடிகள் பற்றியும் முரண்பாடுகள் பற்றியும் அக்கடிதங்கள் வெளியிடப்பட்ட உடனேயே என்னால் ஊடகங்களில் விளக்கமாகத் தகவல்கள் தரப்பட்டு இருந்தது.

மேற்சொல்லப்பட்ட 2010/38ஆம் இலக்கச் சுற்றறிக்கையும் 2ஆம் இலக்கமிடப்பட்ட ஆலோசனைக் குறிப்பும் இரகசிய ஆவணங்கள் அல்ல. தொழிற்சங்கக் கலந்துரையாடல்களின் போது பேசப்பட்டதும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தபாலில் கல்வியமைச்சால் அனுப்பப்பட்ட வையுமாகும்.

கல்வி அமைச்சின் செயலாளர் கையொப்பம் இடாத சுற்றறிக்கை கயையும் ஆலோசனைக்கு அனுப்பப்பட்ட 2ஆம் இலக்கமிடப்பட்ட குறிப்பையும் எந்த கல்விக் காரியாலயமாவது செயற்படுத்தி இருந்தால் அதற்கு அனுமதியளித்து கையொப்பமிட்ட கல்விப் பணிப்பாளர்களுமேயாவர்.

சட்டபூர்வமாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் படியே செயல்படாத எத்தனை கல்வி வலயங்கள் இருக்கும். இந்நாட்டில் அங்கீகரிக்கப்படாத சுற்றறிக்கைகளின் படியும் செயற்பாடுகள் ஆலோசனைக் குறிப்புகள் படியும் செயற்பாடுகள் நடைபெற்றதாகக் கூறப்படுவது ஆச்சரியமான விடயமேயாகும்.

சில ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வியமைச்சு அதிகாரிகளின் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களின் செல்லப் பிள்ளையாக உள்ளமை திறந்த இரகசியமாகும். இவைகளின் தேவைகளின் படி சுற்றறிக்கைகள் வெளியிடப் படுவதும், இரத்துச் செய்யப்படுவதும் அடிக்கடி நடைபெறும் விடயங்களாகும். இச்சங்கங்கள் கல்வி அமைச்சிலும், வலயக் கல்விக் காரியாலயங்களிலும் தமது அரசியல் அதிகாரச் செல்வாக்கைப் பயன்படுத்தி காரியமாற்றி வருகின்றன. இச்செயற்பாடுகள் முழு ஆசிரியர் சேவைக்கும் பொருத்த மானதாக இருக்குமா என்பதை இச்சங்கங்கள் கவனிப்பதில்லை. தமது அங்கத் தவர்கள் ஒருபாலரினது கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் போதுமானது என்றே இவைகள் எண்ணுகின்றன.

8

முன்பந்திகளில் சொல்லப்பட்ட சிக்கல்கள் உட்பட புதிய பிரமாணக் குறிப்பு தாமதம், நிலுவை வழங்கும் திகதி மாற்றப்பட்டமை ஆகியவற்றுக்கான காரணம் ஆசிரியர் சங்கங்கள் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளும் கல்வி அமைச்சு அதிகாரிகளின் செயற்பாடுகளும்தான்.

பயிற்றப்பட்ட, பட்டதாரி ஆசிரியர் சங்கங்கள் மட்டுமல்ல சான்றிதழ்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சங்கங்களும் பிரச்சினைகளை தீர்க்காமல் மேலும் முரண்பாடுகளை வளர்த்து வருகின்றன. கலந்துரையாடல் களின் போது வழக்குப் போடுவதாகப் பயமுறுத்தியும் ஊடக அறிக்கைகளை விடுத்தும் ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகளைத் தாமதப் படுத்துகின்றன.

ஆசிரியர் தாபனப் பிரிவுக்கு பொறுப்பாக உள்ள சிரேஷ்ட உதவிச் செயலாளரும், உதவிச் செயலாளரும், கல்வியமைச்சின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக உள்ள மேலதிகச் செயலாளரும் இது தொடர்பான விடயங் களுக்கு முடிவு காண வேண்டியவர்களாவர். மேல் சொல்லப்பட்ட பொறுப்பான பதவிகளில் ஆசிரியர் சேவை தொடர்பாகவும், பிரமாணக் குறிப்பு நியதிகள் தொடர்பாகவும் விளக்கமுள்ளவர்கள் தொடர்ந்து இருப்பது இல்லை. இதன் காரணமாகவே வலயக் கல்விக் காரியாலயங்களில் இருந்து அனுப்பப்படும் கடிதங்களுக்கு கிடைக்கும் பதில்கள் முரண்பாடாக உள்ளன. அல்லது சுற்றறிக்கைகளோடு இயைந்து போகாமல் உள்ளன. அல்லது மாகாண அரச சேவை ஆணைக்குழுவுக்கு நடவடிக்கைக்காக திருப்பி அனுப்பப்படுகின்றன. இந்த இலட்சணத்தில் கடத்தப்பட்டதாக அல்லது கையளிக்கப்பட்டதாக கல்வி அமைச்சில் பேசிக் கொள்ளப்படும் மேற்படி இரண்டு ஆவணங்களில் உள்ள நல்ல விடயங்களை யாரும் கவனத்தில் கொள் வதாகத் தெரியவில்லை. இவைகளில் குறைகள் எதுவும் இருந்தால் அதை நீக்கிவிட்டு அல்லது திருத்தி அமுல்நடத்துவதே இன்றைய தேவையாகும்.

இவற்றைத் தயாரிக்கும் போது தனிப்பட்ட சங்கங்களுக்கோ, தனிப்பட்ட நபர்களுக்கோ முக்கியம் கொடுக்காமல் அவர்களின் தேவைகளை மட்டும் நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொள்ளாமல் முழு ஆசிரியர் சேவையின் நலனையும் முன்னிட்டுச் இச்செயற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும். கல்வியமைச்சு இணையத்தளத்தில் திருத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் புதிய பிரமாணக் குறிப்புக் காணப்படுகின்றது. அரச சேவை ஆணைக்குழு அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னரே இத்திருத்தங்கள் செய்யப்படு வதாகச் சொல்லப்படுகின்றது.

அமுல் நடத்தப்படும் திகதி 2008.07.01 ஆகவும், நிலுவை வழங்கப்படும் திகதி 2011.01.01 ஆகவும் இருப்பதால் தற்போது இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஆவணங்களின்படி 2005.01.01 தொடக்கம் கிடைக்க வேண்டிய நிலுவைகள் கிடைக்காமல் போகும்.

விசாரணையில் காட்டும் வேகத்தை இந்தச் செயற்பாடுகளிலும் கல்வியமைச்சு அதிகாரிகள் காட்ட வேண்டும். கடந்த ஏழு, எட்டு வருடங்களில் 15,000 தொடக்கம் 20,000 பேர் வரை ஓய்வு பெற்றுள் ளார்கள். இரத்துச் செய்யப்பட்டவையும் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டால் தான் இவர்களுக் குரிய நிவாரணம் கிடைக்கும். கல்வியமைச்சு அதிகாரிகள் மட்டுமல்ல ஆசிரியர் தொழில் சங்கங்களும் இந்த விடயத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.

•

பந்துல குணவர்தன கல்வியமைச்சர் பதவி வகிக்க முன்னர் கல்வியமைச் சராக இருந்த சுசில் பிரேமஜயந்த தொழில் சங்கங்களுடன் மிக சுமுகமாக உறவைப் பேணி வந்தார். தொடர்ந்து ஒரு வருட காலமாக ரிவிர என்ற வாரப்பத்திரிகையில் ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு கல்வி அமைச்சரின் சார்பில் பதில் அளிக்கப்பட்டு வந்தது. அத்தீர்வுகள் பெரும்பாலும் இரத்துச் செய்யப்பட்ட 2010/38 ஆம் இலக்க சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தன என்ற தகவலும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

தற்போது இடைநிறுத்தப்பட்ட இந்த ஆவணங்களின்படியும், கல்வி அமைச்சரால், ஆசிரியர்களின் பிரச்சனைகளுக்கு ஊடகங்களில் அளிக்கப் பட்ட தீர்வுகளின்படியுமே பல வலயங்கள் பட்டதாரி ஆசிரியங்களுக்கு புள்ளிகளை வழங்கி பதவி உயர்வுகளைச் செய்துள்ளன. மேல்சொல்லப்பட்ட ஆவணங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் ஆசிரியர்களிடம் மீள அறவீடு செய்ய வேண்டிய நிலை உண்டாகியுள்ளது. யார் யாரின் தவறுகளுக்கு அப்பாவி ஆசிரியர்கள் பலியாகி வருவதே கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாக்கத்தின் தலைப்பைப் பார்த்தவுடன் வெளியிடப்படாத சுற்றறிக்கைகளை எவ்வாறு இடை நிறுத்தலாம் என்று யாரும் கேட்டால் அதற்கு கல்வி அமைச்சு அதிகாரிகளே பதிலளிக்க வேண்டும்.

"கல்வி என்பது என்றும் வளர்ந்து கொண்டிருப்பது. சூழ்நிலை மாற்றங்களுடன் மாறிக்கொண்டிருக்க வேண்டியது. என்றும் இயங்கிக் கொண்டிருப்பது கல்வி. எனவே கல்விக்கு இறுதி இலக்கு என ஒன்றுமில்லை. வளர்ச்சிக்கு வழிவகுக்கும் கல்வி, வளர்ந்துவரும் கல்விக்கே வழிகாட்ட வேண்டும். செயல் அனுபவமூலம் பெறப்படும் அறிவே உண்மையானது. ஆகவே அறிவு என்பது வாழ்க்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டியங்குவதாகும். வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவதல்ல. வாழ்க்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை. தனியாளின் திறன்களை விருத்தி செய்து அவற்றிற்கேற்பச் சூழலைப் பயன்படுத்தி இயலுமானவற்றைப் பூரணப்படுத்திக் கொள்ள அவனுக்குதவுவதே கல்வி."

பேராசிரியர்.ச.முத்துலிங்கம்

10

# இலங்கையின் கல்வி மீதான பிரச்சினைகள்

■ க.கோமளேஸ்வரன்

இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து எமது நாட்டின் கல்வி மீதான சர்வதேசச் செல்வாக்கானது பல்வேறு பரிணாமங்களின் ஊடாக வளர்ச்சி பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. இதில் முக்கிய பங்காற்றுவது விஞ்ஞான தொழிநுட்ப வளர்ச்சியும், பொதுசன ஊடகங்களின் வளர்ச்சியு மாகும். சர்வதேசச் செல்வாக்கின் இயல்புகளை அறிஞர்கள் ஒரு நாட்டினால் மற்றுமொரு நாட்டின் மீது ஏற்படுத்தும் செல்வாக்கு, வலய அமைப்புகளினால் ஏற்படும் செல்வாக்கு, சர்வதேச அமைப்புகளினால் ஏற்படும் செல்வாக்கு என்றவாறு வகுக்கின்றனர். அபிவிருத்தியடைந்த நாடுகள் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளின் அறிவுசார் வாழ்க்கை மீதும் கல்வித் தத்துவங்கள் மற்றும் கல்வி முறைகள் மீதும் ஏற்படுத்தும் குடியேற்ற வாதத்திற்குப் பிற்பட்ட செல்வாக்கு "நவகுடியேற்ற வாதம்" என அறிஞர்கள் கூறுகின்றனர் *(Altbach)* இவ்வாறான பல்வேறு செல்வாக்கின் நிமித்தம் பரிணாமம் பெறும் இலங்கையின் கல்வி அமைப்பில் இன்றும் பல்வேறு விதமான கல்விப் பிரச்சினைகளை நாம் உணர முடிகின்றது.

கட்டுரையாளர்
மட்/புனித மிக்கேல் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார்

எமது நாட்டின் கல்வி அமைப்பில் காணப்படும் கல்விப் பிரச்சினைகளை கல்வி கற்க ஆரம்பித்தல் அல்லது கல்வி அமைப்பில் நுழைதல் தொடர்பான பிரச்சினை, உள்ளக மற்றும் வெளிவாரியான வினைத்திறன் தொடர்பான பிரச்சினை என்றவாறு நோக்க முடியும். *அட்டவணை 1ஐ* நோக்கும்போது 2000 ஆண்டு தொடக்கம் 2010 வரையான காலப்பகுதிகளில் அரச பாடசாலைகளின் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சியடைவதையும் தனியார் பாடசாலைகளின் எண்ணிக்கை வளர்ச்சி பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. அதேபோன்று அரச பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைவதையும் காணமுடிகின்றது. அரச பாடசாலை களின் மேற்படிப் போக்கானது அவற்றின் கல்வியில் உள்ள பண்புத்தரவீழ்ச்சியைச் சுட்டிக் காட்டுகின்றன. கல்வியின் பண்புத் தரத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் முக்கிய செல்வாக்கை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்று கல்விக்காக பாதீட்டின் ஊடாக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடாகும். உரு 1ஐ

நோக்கும் போது 2000 ஆண்டு தொடக்கம் 2010ஆம் ஆண்டு வரை கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியானது 2004 வரை குறைந்து பின்னர் 2007 வரை அதிகரித்து, 2010இல் மிகக்கூடுதலான வீழ்ச்சியை அடைகின்றது. யுனெஸ்கோ 2003 ஆம் ஆண்டு இஸ்லாமாபாத் தில் மேற்கொண்ட "அனைவருக்கும் கல்வி" என்னும் உடன்படிக்கையின் படி ஒரு நாடானது தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கு வீதத்தை கல்விக்காகப் படிப் படியாக ஒதுக்கவேண்டும். ஆனால் இலங்கையில் கல்விக்கு ஒதுக்கப்படும் நிதி மிகவும் குறைவாகவே உள்ளது. இது கல்வி மீது அரசு கொண்டுள்ள அக்கறையைக் கேள்விக் குறியாக்குகின்றது.


*அட்டவணை 1: இலங்கையில் பாடசாலைகளும் ஆசிரியர் மாணவர்களின் எண்ணிக்கையும்*

| | 2000 | 2005 | 2010 |
|---|---|---|---|
| பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை | 10, 615 | 10,461 | 10,502 |
| அரச பாடசாலைகள் | 9,976 | 9,723 | 9,685 |
| பிரிவெனாக்கள் | 561 | 653 | 719 |
| தனியார் பாடசாலைகள்* | 78 | 85 | 98 |
| அரச பாடசாலைகள் ஆசிரியர்களின் எண்ணிக்கை | 186,097 | 189,234 | 212,457 |
| மாணவர்களின் எண்ணிக்கை | 4,193,908 | 9,942,077 | 3,940,072 |

*Source: Sri Lanka Human Development Report 2012, UNDP Sri Lanka*

(*-சர்வதேசப் பாடசலைகள் இதனுள் உள்ளடக்கபடவில்லை)

*உரு 1: இலங்கையில் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதி: மொத்த உள்ளநாட்டு உற்பத்தி (GDP) இன் வீதம்*




*Source:* Central Bank of Sri Lanka, 2010

*அட்டவணை 2இன்* மீது கவனம் செலுத்தும்போது இலங்கையில் சராசரியாக ஒரு மாணவனுக்காகவும், ஒரு பாடசாலைக்காகவும் அரசு செலவிடும் தொகையில் மாகாணங்களுக்கிடையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதைக் காணமுடிகின்றது. இது கல்வி மீதான சமவாய்ப் பைப் பாதிப்பதாக உள்ளது. அதாவது நாட்டில் உள்ள அனைத்து பிரதேசங்களில் வாழும் மக்கள் அனைவருக்கும் கல்விக்கான வளங்கள் சம அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டு அவர்களுக்கான கல்வி வாய்ப்புக்கள் ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் பாதுகாக்கப்படுமானால் அது கல்வியில் சமவாய்ப்பை ஏற்படுத்துவதாகக் கருதப்படும். இதில் கிழக்கு மாகாணம் மிக மோசமான நிலையில் உள்ளதை உணர முடிகின்றது.

*அட்டவணை 2: மாகாண, மற்றும் தேசிய பாடசாலைகளுக்கும் அதன் மாணவர்களுக்கும் 2007 ஆம் ஆண்டில் ஒதுக்கபட்ட நிதி*

| மாகாணம் | மாணவர் எண்ணிக்கை | பாடசலை எண்ணிக்கை | ஒரு மாணவருக் கான மொத்தச் செலவு (ரூ) | ஒரு மாணவருக் கான மொத்தச் செலவு (மில்லியன் ரூ) |
|---|---|---|---|---|
| மேல்மாகாணம் | 681,617 | 1288 | 14,153 | 7.5 |
| மத்திய மாகணம் | 419,314 | 1413 | 16,195 | 4.8 |
| தென்மாகணம் | 354,714 | 1032 | 17,931 | 6.2 |
| வடமாகணம் | 244,888 | 881 | 16,341 | 4.5 |
| கிழக்கு மாகாணம் | **325,040** | **944** | **12,562** | **4.3** |
| வடமேல் மாகாணம் | 385,617 | 1187 | 17,239 | 5.6 |
| வடமத்திய மாகாணம் | 224,680 | 772 | 15,576 | 4.5 |
| ஊவா மகாணம் | 223,919 | 795 | 17,434 | 4.9 |
| சப்பிரகமுவா | 300,598 | 1076 | 16,129 | 4.5 |
| தேசிய பாடசாலை | 676,127 | 326 | 19,313 | 40.0 |
| இலங்கை | 3,836,514 | 9714 | 16,380 | 6.5 |

*Source:* The World Bank, 2011

2009 தொடக்கம் 2010 வரையில் பாடசாலைகளில் ஒவ்வொரு வகுப்பு மட்டங்களிலும் மாணவர்களின் பங்குபற்றலைப் பால்நிலை வேறுபாட்டின் ஊடாக நோக்கும் போது (அட்டவணை 3) இரு பாலாரினதும் பங்குபற்றல் வீதம் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் உயர் வகுப்பு வரை குறைந்துகொண்டு செல்வதையும் ஆண், பெண் இருபாலார்களுக்குமிடையில் பங்கு பற்றல் வீதத்தில் வேறுபாடுகள் இருப்பதையும் காண முடிகின்றது. இந்நிலைமைகள் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் உயர்வகுப்பு வரையில் மாணவர்களின்

இடைவிலகல் அதிகரிப்பதையும், இடைவிலகலில் பெண்பிள்ளைகளின் இடைவிலகல் வீதம் ஆண்களிலும் அதிகமாக உள்ளதையும் காணமுடிகின்றது. இந்நிலைமை கல்வியில் "பால் நிலை சமத்துவம்" காணப்படவில்லை எனவும், கல்வியில் இடைவிலகல் உள்ளதையும் கோடிட்டுக் காட்டு கின்றது. இது பாடசாலையின் உள்ளக வினைத்திறனில் உள்ள வீழ்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் ஆசிரியர்களின் கல்வித் தொழில் தகைமைகளும் தியாக உணர்வும் அன்றாட வாழ்க்கையுடனான கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடும் கற்பித்தல் முறைகளின் தரமும் பாடசாலையின் கல்வி வசதிகளும் வளங்களும் போன்ற காரணிகள் பாடசாலையின் உள்ளக வினைத்திறனைப் பாதிக்கும் வலுவான காரணிகளாகவும் கருதப்படுகின்றன.

*அட்டவணை 3: தரம் 1-13 வரையிலான தேறிய பங்கு பற்றல் வீதம், 2009-2010*

| பால் நிலை | தேறிய பங்கு பற்றல் வீதம் | | | |
|---|---|---|---|---|
| | ஆரம்பநிலை (தரம் 1-5) | கனிஸ்ட இடைநிலை தரம் (6-9) | சிரேஷ்ட இடைநிலை தரம் (10-11) | உயர்தரம் (தரம் 12-13) |
| ஆண் | 95.3 | 92.1 | 79.3 | 33.1 |
| பெண் | 95.3 | 93.0 | 81.9 | 45.9 |

*Source:* Department of Census and Statistics of Sri Lank, 2010

இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் "வெளிவாரியான வினைத்திறன்" என்ற அம்சமும் கல்விப் பிரச்சினைகளில் ஒன்றாக அமைகின்றது. ஒரு நாட்டின் கல்வி முறையில் வெளிவாரியான வினைத்திறன் என்பது, சமூகத் தேவைக்கும் கல்விக்கும் இடையிலான பொருத்தப்பாடாகும். கல்விக்கும் தொழில் வாய்ப்புக்கும் இடையிலான ஒவ்வாமையானது வெளிவாரியான வினைத்திறனை வலுவாகப் பாதிக்கின்றது. மாணவர்கள் உயர்கல்வி பெற்றும் கூட வேலையில்லாத் திண்டாட்டமும், அதனால் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் செயற்பாடுகளும் தற்காலத்தில் இடம்பெறுவது மேற்படி விடயத்தை உறுதிசெய்வதாக அமைகின்றது.

கல்வியின் அனைத்து மட்டங்களிலும் கொள்கையாக்கங்களில் முக்கிய பங்கெடுப்பது அரசாகும். ஆரம்பக் கல்வியிலிருந்து உயர்கல்விக்குச் செல்லும் போது கல்வியின் பண்புத்தர வீழ்ச்சி அதிகரித்துக்கொண்டு செல்வதைக் காணமுடிகிறது.

மேலும் கல்வியின் பண்புத் தரம் மற்றும் பொருத்தப்பாடு என்பவற்றை அதிகரிப்பதிலும், வேலைவாய்ப்புக்கு ஏற்றவாறு மாணவர்களைத் தயார்படுத்துவதிலும் இலங்கையின் கல்வி அமைப்பு தோல்வி கண்டுள்ளது என தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2003ஆம் ஆண்டு அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. நாட்டினுள் கல்வியின் பண்புத் தரமானது மாவட்டங்கள்

மற்றும் மாகாணங்களுக்கிடையிலும் வேறுபடுவதை உணரமுடிகின்றது. அதில் மலையகம் மற்றும் தொலை தூரப் பிரதேசங்களில் வாழும் பின்தங்கிய சமூகங்களின் நிலை மோசமாக வுள்ளதைத் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

விசேட அளவீட்டு முறைகளினூடாக முதலில் அரசாங்கம் நாட்டின் பின்தங்கிய கல்வி வாய்ப்புக்களைப் பெறும் குழுக்களான விசேட தேவையுடைய பிள்ளைகள், விசேட கல்வி வசதிகள் தேவையான பிள்ளைகள், சீர்குலைந்த குடும்ப நிலைமைகளிலுள்ள பிள்ளைகள் அல்லது ஏழ்மையான சூழலிலிருந்து வரும் பிள்ளைகள் போன்றோர் களின் கல்வித் தேவைகள் பற்றி தகவல்களைப் பெற்று, பகுத்தாராய்ந்து அதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்தல் முக்கியமான தொன்றாகும். விசேட தேவையுடைய பிள்ளைகளை சாதாரண வகுப் புக்களில் வைத்துக் கற்பிக்கும் "உட்படுத்தல் கல்வி" என்ற அம்சம் தற்போது அறிமுகப்படுத் தப்பட்டுள்ளது. ஆயினும் இது இன்னமும் கொள்கையளவிலேயே உள்ளது யாவரும் அறிந்ததே. அரசாங்கம் இதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை பாடசாலை களில் போதிய அளவு மேம்படுத்தாமையே காரணமாகும்.

இவ்வாறான பிள்ளைகளின் கல்வியை முறைசார் கல்வி அமைப்புக்கும் மேலாக முறைசாராக் கல்வி அமைப்பினூடாகவும் கல்வி வாய்ப்புக்களை விரிவுபடுத்துவது கல்வி அமைச்சின் முக்கிய பணியாகும். மேலும் இத்துறை களுக்கு பௌதீக வள வசதிகள் மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர் வசதிகள் போன்றவற்றை போதுமான அளவு ஒதுக்கீடு செய்து அவற்றை ஊக்குவிக்க வேண்டும்.

கல்வி அமைச்சும் உயர்கல்வி அமைச்சும் ஒன்றிணைந்து தேசிய மட்டத்தில் கல்வி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை உடன் ஆராய்ந்து தீர்வு காணுவதற்கான தேசிய வலையமைப்பொன்றை ஏற்படுத்தி அதனூடாக தீர்வுகளை துரிதப்படுத்துவதன் மூலம் உலகின் தொழிற்சந்தைக்கும் போட்டிப் பொருளாதாரத்திற்கும் பொருத்தமான கல்வி அமைப்பொன்றை வளர்த்தெடுக்க முடியும். இதில் விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், மற்றும் தகவல் தொழிநுட்பம் போன்ற பாடங்களில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு அதற்கு பயிற்சிபெற்ற ஆசிரியர்களை போதுமான அளவு ஒதுக்கீடு செய்வது மிக முக்கியமென இனங்காணப்பட்டுள்ளது. ஏனெனில் தமது உயர்கல்வியில் கணிதம் விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்காத பெரும்பாலான ஆசிரியர்கள் இப்பாடங்களைக் கற்பிப்பதனால் நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் கல்வியின் பண்புத் தரவீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

# 21ஆம் நூற்றாண்டுக் கல்வி இலக்கு: எதார்த்தமும் இருப்பும் மீள்நோக்கு

■ ஏ.எல்.நௌபீர்

பல மட்டத்திலும் இலங்கையின் கல்வி முறைமை மீதான பலத்த விமர்சனம் மிக நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. அண்மைக் காலம் முதல் கல்வி முறைமை மீதான விமர்சனம் பல கட்டுரைகளாக பத்திரிகைகளிலும், இணையத் தளங்களிலும், புத்தக வடிவிலும் பிரசுரமாகிய வண்ணமுள்ளன. இவற்றால் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மாற்றங்கள் ஏற்பட்டதா? யார் கண்ணிலும்பட்டுள்ளதா? கல்வித் துறைசார் ஆளுமைகளால் கணக்கிலெடுக்கப் பட்டுள்ளதா? எல்லா விதமான தவறுகளும் இலங்கையில் கல்வி முகாமைத்துவம், கல்வி உளவியல், கல்விக் கல்லூரி டிப்லோமாதாரிகளால் புரியப்படுவதுதான் எமது கல்வி முறைமீதான பலமான அதிர்வை ஏற்படுத்துகின்றது. அவர்களின் பட்டங்களை வீட்டிலே வைத்துவிட்டு பிரம்புகளை மட்டுமே கையில் எடுத்துக் கொண்டு பாடசாலைக்குள் நுழைந்து விடுவதாக நடுநிலைமையாகச் சிந்திக்கும் மக்கள் அங்கலாய்க்கிறார்கள். கற்பது தங்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக மட்டுமே நடந்து கொள்வது தங்கள் மனம் போன போக்கிலேதான். கல்வி உளவியல், கல்விச் சமூகவியல், கல்வி தத்துவவியல் எல்லாமே எதற்காக? பிரயோகிக்க முடியாத கல்வி இறந்துகிடக்கும் பிணப் பிண்டத்தை ஒத்ததாகவல்லவா இருக்கிறது.

அண்மையில் சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியும் பாராளுமன்ற கல்வி மீளமைத்தற் தெரிவுக் குழுவின் பிரதிநிதியுமான பேராசிரியர் சுசந்த லியனகே அவர்களால் "குற்றச் செயல்களை உருவாக்கும் கல்வி" *(Educating to create morons)* என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அக் கட்டுரையில் ஒரு படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஒரு பெரிய புத்தகம் விரிக்கப்பட்டுள்ளது. அதில் கல்வி முறைமை *(Education System)* என எழுதப்பட்டுள்ளது. அந்தப் புத்தகத்திற்குள் நன்றாக உடுத்திக்கொண்ட மாணவர்கள் உள்ளே நுளைகிறார்கள் அவர்கள் வெளியில்வரும் போது கழுதைகள் போன்று வெளியாகிக் கொண்டிருக்கிறார்கள். குறித்த கட்டுரையும் இப்படத்தை சித்தரிப்பதாகவே எழுதப்பட்டிருந்தது.

கட்டுரையாளர்
சமூகவியல் கல்வியியல் துறையில் ஆர்வமும் ஆய்வும் மேற்கொண்டு வருபவர்.

அண்மையில் ஒரு ஆங்கில வாராந்தப் பத்திரிகைக்கு செவ்வி வழங்கிய மனிதவள அபிவிருத்தி அமைச்சர் டி.யூ.குணசேகர அவர்களும் இது ஒரு சிறந்த கல்வித் திட்டமில்லை என்றும், இதனால் எமது இளைஞர்களுக்கு வருமானமீட்டவும், வாழவும் முடியாது என்றும், உடனடியாக இக்கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். கடந்த 2012ல் கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவிலே கலந்து கொண்டு உரைநிகழ்த்திய முன்னாள் பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க அவர்களும் எமது கல்விமுறைமை அதிகமான வழிப்பறிக்காரர்களையும், போதைக்கு அடிமையானவர்களையும், பாதாளக் கோஷ்டிக்காரர்களையும், குடும்ப வன்முறையாளர்களையும், ஏமாற்றும் பொய்பேசும் அரசியல்வாதிக ளையும் உருவாக்கி விட்டுள்ளதாகக் கூறியதுடன், இவர்களுக்கு கடந்த பல வருடமாக கல்விச் சான்றிதழ்களை வழங்கிய நானும் ஒரு வகையில் குற்ற உணர்வுடன் இருப்பதாகக் கூறியுள்ளதுடன் விரைவில் எமது கல்வி முறைமையில் மாற்றம் வேண்டும் என்று பேசியுள்ளார்.

உண்மையில் எமது பாடசாலைகளில் என்ன நடக்கிறது? மாணவர்கள் வகுப்பறையிலே அமர்ந்து குறிப்புக்களை எழுதுவதும், பின்னர் தனியார் போதனை வகுப்புக்களில் கலந்துகொள்வதும், *(Tuition classes)*, பரீட்சைக்கு நெட்டுருச் செய்வதும், சிறந்த பரீட்சைப் பெறுபேற்றைப் பெறுவதற்கு முயற்சிப்பதுமே நடைபெறுகின்றன. மாறாக எந்த மாணவனாலோ, ஆசிரியராலோ, பெற்றோராலோ சிறந்த வாழ்க்கை முறைமை வேண்டும் என்று முயற்சித்தது கிடையாது.

பேராசிரியர் லியனகே அவர்கள் இலங்கைப் பல்கலைகழகங்களிலும் இதுவேதான் நடைபெறுவதாகக் கூறுகின்றார். பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்களிடம் குறிப்புக்களைப் பெற்றும், அவற்றை நெட்டுருச் செய்து பரீட்சைகளில் அப்பிவிடுவதுமே நடைபெறுவதாகக் கூறி நாம் உற்பத்தி செய்யும் கல்வித் தரம் உள்ள பட்டங்களால் தொழில் சந்தையில் முகங்காட்ட முடியாதிருப்பதாகவும், தொழிற்சந்தை அவற்றை நீண்டகாலமாகவே நிராகரித்து வருவதாகவும் விமர்சிக்கின்றார்.

**தேகாரோக்கியமான கல்வி (*wholesome Education*)**

போரசிரியர் லியனகே அவர்களின் கூற்றுப்படி பிரபல்யமான பாடசாலை களில் *(Popular Schools)* கல்வி கற்ற மாணவர்கள் பட்டம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தொழிற் சந்தையில் நல்ல தொழிலொன்றைப் பெற முடிகிறது. ஆனால் பாடசாலைகள் எமக்கு குறிப்பெடுத்தலையும், பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறலையுமே எமக்குச் சொல்லித் தந்தது. எமது முழுப் பாடசாலைக் கலைத் திட்டமுமே குறிப்பெடுத்தலும், சிறந்த பெறுபேற்றை நாடும் கல்வி முறைமையாக வேயுள்ளது. *(Note Taking Grades Seeking Education)* எமது பாடசாலைகள் தொடர்ந்தும் கடந்த காலத்தை மறந்தே பயணிக்கின்றன. ஆரோக்கிய மான கல்வி, மறைக்கலைத் திட்டம், மேலதிக கலைத்திட்டச்

செயற்பாடுகள், இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக எமது மாணவர்களுக்கு புத்தகக் கல்வி தவிர மேலுள்ள எதிலும் உத்தியோகபூர்வமாக ஈடுபடுவதற்கான நேரம் கிடைப்பதில்லை. கணிசமான பாடசாலை களில் விளையாட்டுத் திடல்கூட இல்லை என்பது புதிரான விடயமாகும். பரீட்சை எழுதும் அபரிமிதமான கற்பிதத்திலேயே மாணவர்கள் புத்தகப்பையைச் சுமந்து வருகிறார்கள். பரீட்சையில் நல்ல பெறுபேறு கிட்டினால் முழுவாழ்க்கையிலும் வெற்றி பெற்றதாக சமூகமும், மாணவர்களும் பிழையாக உருவகப்படுத்திக் கொள்ளும் துர்ப்பாக்கியம் எமது கல்வியில் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

ஆரம்பக் கல்வியில் 5ம் தர புலமைப் பரிசிலுக்கும், இடை நிலையில் சா/த த்தில் சிறந்த பெறுபேறு பெற்று கணித, விஞ்ஞானத் துறைகளில் கால்பதிக்க வேண்டும் என்றும். உயர்தரத்தில் பல்கலைக் கழகம் என்ற பலத்த போட்டியை வென்றுகொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலேயே மாணவர்கள் ஆட்டுவிக்கப்படுகிறார்கள். அதிகமான மாணவர்கள் தங்கள் எவ்வித விருப்பமும் இன்றி பெற்றோராலும், ஆசிரியராலும் தள்ளப்பட்டு *(push)* விருப்பமில்லாத துறைகளுக்குள் தங்களின் படிப்பை மேற்கொள்வதும் எமது கல்வி முறைமை மீது சுட்டுவிரலை நீட்டும் செயற்பாடாகவே உள்ளது.

**இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வி இலக்குகள்.**

21ம் நூற்றாண்டுக்குள் நுளையும் மாணவச் செல்வங்களுக்கு முன்னைய அறிவு, திறன், மனப்பாங்கு மட்டும் போதாது பின்வரும் மறைக்க கலைத்திட்டச் செயற்பாடுகளிலும் அவர்கள் சிறந்து விளங்க வேண்டும்.

* சிறந்த தொடர்புகொள்ளும் ஆற்றல்

  (வாசிப்பு, எழுத்து, பேச்சு, கிரகித்தல்)

* சுயமாகக் கற்றலுக்கான சமூகத்திறன்

  (ஒழுக்கம், நேர்ச் சிந்தனை நடத்தை, *(Positive attitude)*, பொறுப்புக் கூறும் திறன் *(Responsibility)*

* குழுச் செயற்பாடுகள் கூடிக் கற்கும் ஆற்றல், வலையமைப்பு அறிவு.

* மாற்றங்களை உள்வாங்கும் ஆற்றல்.

* சிந்திக்கும் ஆற்றல். (பிரச்சினை தீர்த்தல், விமர்சனம், தர்க்கம், எண்ணறி ஆற்றல்)

* அறிவுப் பயண முயற்சியாண்மை. (சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் ஆற்றல்)

* டிஜிட்டல் அறிவு.

### எமது கல்வி வேண்டி நிற்கும் மாற்றம்

இலங்கையின் பிரபல்யமான பாடசாலைகள் உட்பட எல்லாப் பாடசாலைகளும் 21ம் நூற்றாண்டின் சமூக மாற்றத்தை எதிர்கொள்வதற்கான கல்வித்திட்டத்திற்குள் தங்கள் செயற்பாடுகளை மாற்றியமைக்க வேண்டும். மாற்றம் தனிப்பட்ட, பிராந்திய ரீதியாக, மொழி ரீதியாக இல்லாது பாரிய நிறுவனமயப்பட்டதாக எழவேண்டும். குறிப்பிட்ட பகுதியளவில் நிகழும் மாற்றம் எந்தவிதமான பலனையும் ஏற்படுத்த வாய்ப்பில்லை. அமெரிக்கக் கல்வியியலாளர் ஸ்டீபன் கொன்வே *(Stephen Convey)* இம்மாற்றம் பற்றிக் கூறும்போது ஏழு முக்கிய பண்புகளைக் கூறுகின்றார். அவர் நாம் மாற்றத்தை நோக்கிப் பயணிக்கும் போது அடிப்படையிலிருந்து சிந்திக்க வேண்டும் என்கின் றார். சமூகத் தளத்திலுள்ள சிவில் நிறுவனங்களான கோயில்கள், பன்சலைகள், மஸ்ஜித்கள் முன்வந்து புதிய மாற்றங்களை உள்வாங்க வேண்டும். அவை தமது பழைய பல்லவிகளை உடன் நிறுத்திவிட வேண்டும். நாங்கள் இதை இந்த வழியில்தான் எப்போதும் செய்கிறோம் *(We have always done it this way)* என்ற மனோநிலை மாற வேண்டும்.

கடந்த காலத்தை மையமாக வைத்து எதிர்காலத்தைத் திட்டமிட வேண்டும். பிரபல்யமான பாடசாலைகளும் அவற்றின் கடந்த 50, 100 வருட பணி பற்றி பின்நோக்கிப் பார்க்க வேண்டும். இது நிகழ் காலத்தைத் திட்டமிடவும், செயற்படவும் உதவும். இன்று எல்லாப் பாடசாலையுமே மறைக் கலைத்திட்டத்தை *(hidden Curriculum)* இழந்ததாகவே காணப்படுகின்றன. குறிப்பாக கல்வி அமைச்சின் பாடசாலைத் தரப்படுத்தலில் அது பெற்ற பெறுபேற்றின் நிலை உட்படுத்தப்பட்டதாக உள்ளதுடன் மறைக் கலைத்திட்டச் செயற்பாடுகளை அவை உள்வாங்கவில்லை. பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் கூட வெறும் கடமைக்காகவே நடைபெறுகின்றன. இந்த விளையாட்டுக்களால் என்ன பயன் அவற்றைவிடப் பாடங்களை நடாத்தலாம் அல்லவா பரீட்சையில் நல்ல பெறுபேறு கிடைக்கும் என்று பெற்றோர் மத்தியிலும் கதையாடல்கள் உண்டு. இன்றைய குறிப்பெழுதும், பெறுபேற்றை மையப்படுத்திய, தனியார் போதனைத் தளத்தைக் கொண்ட எமது கல்வி முறைமையில் *(Note taking- grades seeking private tuition based education system)* மறைக் கலைத் திட்டம் மங்கிவிட்டதாகவே உள்ளது.

### பாடசாலைகளுக்கு நோக்கு அவசியம் (*Vision*)

ஒரு நல்ல நோக்குள்ள மனிதன் என்றும் எங்களால் நினைவு கூரப்படு கிறான். நோக்கற்ற மனிதனுக்கு சமூகத்தில் எந்தப் பெறுமானமும் இல்லை. நோக்கு எம்மைத் தூர நோக்குடன் (*Farsightedness*) செயற்படத் தூண்டுவதுடன், குறுகிய நோக்கை (*Nearsightedness*) இல்லாது ஒழிக்கும் செயற்பாடாகவும் இருக்கிறது. சிறந்த நோக்கு இடையூறுகளை இல்லாது ஒழிப்பதுடன், இரண்டு விடயத்தையும் கண்காணிக்கும் தன்மை கொண்டதாக இருக்கும் அத்துடன் இலக்கை அடைய உறுதுணையாக அமையும்.

எந்த விடயத்தையும் புதிய கோணத்தில், அணுகுமுறையில், புதிய மாதிரியில் செய்வதற்கான மனோபாவம் வேண்டும். முன்னைய மாதிரிகளைத் தழுவிப் பணி செய்யும் (*Imitate*) மனோநிலை முற்றாகக் கைவிடப்பட வேண்டும். புதிய மாதிரிகளை உள்வாங்கி மாற்றத்தை நிருபணமாக்கும் தலைமைத்துவம் உருவாக்க வேண்டும். இவ்வகைப் பணி மூலம் சமூகத்திற்குத் தேவையான கல்வி எது என்பது புலனாகும். உலக தொழிற் சந்தை மாற்றம், பக்கத்தில் நடைபெறும் ஜனநாயக மாற்றம் என்பன புலப்படக் கூடியதாக எமது கல்வி முறைமை அமைய நோக்கு அவசியப்படுகிறது.

இவ்வாறான நோக்கு பற்றி கல்வி அமைச்சோ, தேசிய கல்வி நிறுவகமோ கூறுவதை நமது பாடசாலைகள் புரிந்துகொள்வதில்லை. அல்லது புரிந்து செயற்படும் வண்ணம் அவை கூறப்படுவதில்லை. இன்று பாடசாலைகளால் அதிகம் நிதிமோசடிகள் இடம்பெறுகின்றன. அவற்றை முடிவுறுத்த இன்னும் எமது கல்வித்துறையால் முடியவில்லையா? பாடசாலை மேம்பாட்டு சுற்றுநிருபத்தில் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவர் அதிபர் என்பதுடன் பொருளாளர் ஆசிரியராக இருக்கவேண்டும் என்றும் செயலாளர் பெற்றோரிலிருந்து தெரிவு செய்யப்படலாம் என்பதுடன் செயலாளரையும் பாடசாலை ஆசிரியரிலிருந்தும் தெரியமுடியும் என்று சொல்லும் சுற்றுநிருபத்தால் எவ்வாறு ஊழல்களை ஒழிக்க முடியும்? ஒரு பாடசாலைக்கு நோக்கு (*vision*), பணி(*mission*), விழுமியங்கள்(*values*) இருந்தால்தான் அதனால் சமூக உந்துதலுடன் உரிய இலக்கை எட்ட முடியும். எந்தவொரு சமூகத்தையும் பாரியளவில் மாற்றமுறச் செய்யும் சக்தி பாடசாலை களுக்கு உண்டு. சமூகம் எங்கே (*where*)செல்கிறது என்ற வினாவுக்கான விடையாக குறித்த பாடசாலையின் நோக்கு அமையும். நாமும் உலகும் எதிர்கொள்ளும் புதிய மாற்றங்களை பாடசாலைகளும் உள்வாங்கிய தாகப் பயணிக்க வேண்டும்.

விழுமியம் (*values*) என்ற கூற்று சமூகத்தின் இன்றைய இருப்பு என்ன (*what*) என்ற வினாவுக்கு விடையாக இருக்கும். பாடசாலை சமூகத்திற்கு எதனை வெளியிடுகிறது என்பதை அதன் விழுமியம் வெளிப்படுத்தும். மாணவர் நடத்தை மாதிரிகள், மாணவர் இலக்குப் பயணம், (*Goals*) போன்றவை உலகின் தற்போதைய நிலமைகளுடன் ஒத்ததாக அமைய வேண்டும்.

பணிக்கூற்றும் (*mission statement*) முக்கியமானதாகும். இது குறித்த சமூகத்தின் இருப்புபற்றி விளக்கும் பாடசாலைகள் ஏன்? (*Why*) என்ற வினாவுக்கு விடையாக இது அமையும். இது பாடசாலையின் திசை மாறாமைக்கு அவசியம் உதவும். பாடசாலையின் எல்லா நகர்வு களிலும் குறித்த வினாக்களின் செல்வாக்குடனேயே நகரும். எங்கே என்ற வினா நோக்கை விளக்குகின்றது. (*Where are we headed?*) என்ன என்ற வினா பெறுமதியை விளக்குகின்றது (*what are we becoming?*) ஏன் என்ற வினா பணியை விளக்குகிறது. எப்படி என்ற வினா இலக்கை (*goals*) விளக்குகிறது. (*how do we get there?*)

பாடசாலையைப் பொறுத்தமட்டில் முக்கிய வினா எங்கே *(where?)* என்பதாகும். இதுவே நோக்குடன் தொடர்பான வினாவாகும். நோக்கில்லாத மனிதன் தடுமாறுகிறான். நிறுவனங்களின் நிலைமையும் அதுவேதான். நோக்கினாலேயே ஏனைய விழுமியம், பணி, இலக்கு எல்லாமே எய்தப்படுகிறது. தெளிவான இலக்கு, சிறப்பாக வடிவமைக் கப்பட்ட திட்டம், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், சிறந்த தொடர்பாடற் திறமைமிக்க ஆளணி, என்பன சமூக இருப்பின் தளத்தில் பாடசாலை பயணிக்க உதவும். கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்கள், அரசியல் நிலைமைகள், பொருளாதார மட்டம், ஜனநாயக மாற்றங்கள், சமூகச் சூழல், பழைய மாணவர்களின் செயற்பாடுகள், பெற்றோர் நடத்தைகள் என்பவற்றை உள்வாங்க மறுக்கும் பாடசாலைகள் வரலாற்றில் சமூக அடைவுகளை ஒருபோதுமே சந்திக்க முடியாது போகும். ஆக எல்லாப் பாடசாலைகளுமே தங்களுக்கான நோக்குக் கூற்றைத் தயாரித்துச் செயற்படல் இன்றியமையாததாகும்.

**பாடசாலைகளுக்கு நோக்கு, பணி, விழுமியம் ஆகியவற்றின் முக்கியத்துவம்**

நோக்குக் கூற்றை நிலைபேறாகக் கொண்டு செயற்படும் பொறுப்பு அதிபரையே சாரும். அதற்காக அவர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழுவைப் பயன்படுத்தலாம். பெறுமான, பணிக் கூற்றுக்கள் குறித்த ஆசிரியர் குளாத்துடன் சம்மந்தப்பட்டதாகும். அவர்களால் தான் இவை அபிவிருத்தி பெறும். இதற்காக அவர்கள் பாடசாலை மாணவர்களைக் குழுக்களாகப் பயன்படுத்தலாம். நோக்கு அதிபராலும் அடுத்த கூற்றுக்கள் பாடசாலை வளாகத்தாலும் வளர்ச்சி பெற வேண்டும். இதனால் சமூகத்தில் மாற்றம் நிகழ முடியும்.

தெளிவான நோக்குடன் அதிபர் செயற்படும் போது மாணவர்கள், ஆசிரியர் குழாம், பாடசாலைச் சூழல் என்பனவற்றால் பணி, விழுமியம் என்பன ஏற்பட்டு சமூகம் சீர்பெறும். நோக்குபற்றி அடிக்கடி நினைவுகூரும் அதிபரால் பெறுமானம், பணிக்குழு அபிவிருத்தி என்பவற்றை இலகுவில் ஏற்படுத்த முடியும். இதில் மாணவர் நடத்தை மாறிகளிலும் சாத்தியமான மாற்றங்கள் ஏற்படுவதுடன், மகிழ்ச்சிகர மான கற்றற் சூழல் நிரூபணமாகும். 50 அல்லது 100 வருடங்களைக் கடந்த பாடசாலைகள் எமது நாட்டில் காணப்பட்டாலும் அவற்றில் பெற்றோர், பழைய மாணவர் ஈடுபாடு இறுக்கமாக கொண்ட பாட சாலைகள் அதிகம் சாதித்து வருகின்றன.

"ஒரே நோக்கத்திற்காக இணைபவர்களின் கட்டுமான, கலாசார பல்வகைமை எவ்வளவு முக்கியமோ, அதேபோல் அவர்கள் பகைமை இல்லாது செயற்படும்போது அவர்களுக்கான குறுகிய நோக்கங்கள் தவிர்ந்த நன்மைகள் பெரிதாக இருக்கும்". *(லிவைஸ் கோசர், அமெரிக்கச் சமூகவியலாளர்)*

இக் கூற்றின் பெறுமதியை எமது நாட்டின் எல்லாப் பிரஜைகளும் உள்வாங்க வேண்டும். எமது நாடு பல்கலாசார விழுமியங்கள் கொண்ட தாகையால் இக்கூற்று எமக்கு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. பழைய

மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், அவர்களின் வாதங் களை முன்வைத்து வேறுபடுவதால் முழு மொத் இலக்கும் பாதிப்புக் குள்ளாகும். வரலாற்று, கலாசார, இன பொருளாதார அடிப்படையில் ஏற்படும் வேறுபாடுகள் மொத்த சமூகத்தையும் பாதிக்கும் அபாயம் உள்ளது. சேர்ந்து வாழாத சமூகத்திலும் *(Heterogeneous Group)* பார்க்க. ஒரேதேவையுடைய சேர்ந்து வாழும் சமூகம்*(Homogeneous Group)* அடிப்படையில் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டிருக்காது இணைந்த தன்மை எதிலும் இருக்கும்.



**இலங்கைக் கல்வி மாற்றுக்கள்**

அதிக பெறுபேறுகளைத் தேடும் எமது பாடசாலைகளால் அதிக மனித உருவாக்கம் பற்றி சிந்திக்க முடிவதில்லை. இன்றைய மாணவர் களிற்குள்ளிருந்தே எமக்கான ஆசிரிய ஆளுமைகளும் தோற்றம் பெறுவதால் அவர்களாலும் சாதிக்க முடிவதில்லை. பணி, விழுமியம், பாடசாலைச் சமூகத்திலிருந்துதான் கட்டியெழுப்பப்பட வேண்டும். மாணவர் , ஆசிரியர்களின் ஒத்திசைவை நோக்கிய நகர்வு அதிகமான பாடசாலைகளில் இல்லை. மிதமிஞ்சிய அரசியல் செல்வாக்கும், அரசியல் தலைமைகளின் தனிப்பட்ட உறவும் நிறைந்தவராக அதிபர் இருந்தாலே பாடசாலையை கல்வித் திணைக்களம் பொறுப்புக் கொடுக்கின்றன. எமது அதிபர்களிடம் கல்வித் தகைமை மிகையாக இருந்தாலும் அரசியல் செல்வாக்கு இல்லாவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாது.

எமது தற்போதைய கல்வி முறை பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை 20ம் நூற்றாண்டு மாதிரிகளைத் தான் கொண்டிருக் கின்றன. ஐரோப்பிய ,அமெரிக்க மாதிரிகளைப் போல் 21ம் நூற்றாண் டுக் கல்வி மாதிரிகளை இன்னும் எமது கல்வி முறைமை உள்வாங்க வில்லை. அரச பாடசாலைகளை வெளிநாட்டு அரசுகளிடமோ, நிறுவனங்களிடமோ ஒப்படைப்பதன் மூலம் சிறப்பான பாடசாலைச் செயற்பாடுகளை எதிர்பார்ககலாம். இவை எமக்கான புதிய மாற்றுக்க ளாக இருக்கலாம். இலங்கையில் சருவதேசப் பாடசாலைகளின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளதாக அறிய முடிகிறது. அவை தனியான நோக்கு, பணி, விழுமியம் என்பனவற்றைக் கொண்டு சிறந்த நிருவாகக் கட்டமைப்பைப் பதிவளித்து வருவதாக உள்ளது. இனிவரும் காலங்களில் அரச பாடசாலை களால் சிறந்த மனித ஆளுமைகளை உருவாக்க முடியாதா என்ற வினா எம்மத்தியில் பலமாக உள்ளது. கல்வித் துறைமீதான ஆளுமைகள் இதுவிடயத்தில் புதுமையாகச் சிந்திக்காத வரை மாற்றுக் கல்வி மாதிரிகள் எம்மத்தியில் உருவாகும் வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளது. எமது கல்வி எப்போது எமக்கு முன்னால் நெஞ்சை நிமிர்த்தி, கையை உயர்த்தி எமக்கு வானம் தொட்டுவிடும் தூரம்தான் என்பதைச் சொல்லித் தருமோ தெரியாது.

22

# பிரத்தியேகக் கல்வியும் பாடசாலைக் கல்வியும்

■ எஸ்.என்.ஏ.அரூஸ்

இன்றைய கல்வி உலகில் பெற்றோரும் கல்விச் சமூகமும் பாடசாலைக் கல்வியில் நம்பிக்கை இழந்து தனியார் போதனா நிலையங்களையும் தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களையும் நம்பி, அவர்களிடமே பிள்ளைகளின் கல்வி தங்கியுள்ளது என எண்ணி தனியார் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். அவ்வாறாயின், பாடசாலைக் கல்வி முறை இன்றைய தொழில்நுட்ப, தகவல் தொழில்நுட்ப உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கச் சிறந்ததா? எனும் கேள்விக்கான விடை பற்றி எம்மைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. அவ்வாறாயின், நாம் பாடசாலையின் கடமை பொறுப்பு, வகிபங்கு, தனியார் போதனா நிலையங்களின் கடமை, பொறுப்பு வகிபங்கு பற்றி அறிதல் வேண்டும். இவை பற்றி இன்று கல்வியியலாளர்கள், கல்விச் சமூகவியல் அதீதமாகச் சிந்தித்து வருகிறது.

**பாடசாலைக் கல்வி :**

பாடசாலைக் கல்வி முறையில் சுமார் 40 இலட்சம் மாணவர்கள் பங்குபற்றுகின்றனர். பாடசாலைகளின் நோக்கம் சிறந்த பிரஜைகளை வளர்த்தெடுக்கவும் நவீன பொருளாதார முறைகளுக்கேற்ற தொழிற் திறன்களைப் பெற்றுக் கொடுப்பதும் ஆகும். இவ்வாற்றல்களைச் செய்யும் பாடசாலை சமுதாயத்தின் ஓர் உபதொகுதி என கல்விச் சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இந்நிறுவனம் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களையும் தேவைகளையும் நிறைவு செய்வதற்காகக் கருமமாற்றும் சமூகத்தின் இன்றியமையாத ஒரு நிறுவனமாகும். இன்னொரு வகையில் சமுதாயத்தினை சமூகமயமாக்கும் ஒரு தொழில் நிறுவனமாகும். இதனாலேயே இதில் தொழில் செய்யும் ஆசிரியர்களை அறிவுத் தொழிலாளி என உயர்த்திப் பேசப்படுகிறது. அவ்வாறாயின், பாடசாலைச் சமுதாய அங்கத்தவர்களைச் சமூக அங்கத்தவர்களாக மாற்றும் செயல்முறையில் ஈடுபடும் உயிருள்ள உயிரியல் நிறுவனமாகும்.

கட்டுரையாளர்
முதுநிலை
விரிவுரையாளராக,
அட்டாளைச்சேனை
தேசிய கல்வியியல்
கல்லூரியில்,
பணிபுரிகின்றார்

ஆர்.ஐ. கொலின்வூட் சமுதாயத்தைப் பின்வருமாறு வரையறுக் கின்றார். "ஒரு குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற குறித்த பொதுச் சமூக முறையைச் சேர்ந்த சிறுவர்களையும் வளர்ந்தோரையும் சமூகமயமாக்கமடைந்த,

சமூகமயமாக்கமடையாத அனைவரையும் குறிப்பதாகும். அவ்வாறாயின், "சமூகம்" என்பது முற்குறிப்பிட்ட பரந்த சமுதாயத்தில் சமூக விழுமியங்கள், பொறுப்புக்கள், கடமைகள் ஆகியன தொடர்பாகப் பூரண விளக்கத்தைக் கொண்ட சமூக உணர்வினைக் கொண்ட பிரிவினராகும். அவ்வாறாயின், இத்தகைய பூரண விளக்கமுடைய சமூக உணர் கல்வியூடாகவே தோற்றுவிக்க முடியும். இதனைத் தற்காலத்தில் செயன்முறைப்படுத்தி வருவது பாடசாலையா? தனியார் கல்வி நிறுவனமா?

கல்விச் சமூகவியல் ஆய்வின்படி கல்வி என்பது பிள்ளையை அப்பால் கொண்டு செல்லுதல் அல்லது வெளிக்கொணருதல் எனப் பொருள்படும். அவ்வாறாயின், மாணவனின் அறிவுதிறன், மனப்பாங்கு தனியாள்திறன், சமூகத்திறன் என்பவற்றை வெளிக்கொணர்ந்து வளர்க்கும் செயல்முறையாகும். கல்வியின் தனியாள் சமூகநோக்கம், நல்ல ஆளுமை, விவேகம், சுயமான சுதந்திரம் மிக்க தனிமனிதனை உருவாக்குவதே ஆகும். இதன் குறிகாட்டி கல்வி பெற்றவன் சிறந்த உள நல வளர்ச்சி பெற்றவனாக இருப்பான். இதனை ஒரு மனிதனிடம் இரண்டு முறையில் காணலாம்.

* ஆழமான அறிவு
* விளக்கம்
* இவ்விரண்டினையும் கல்வியின்மூலம் பெற்றவனைத் தான் கல்விமான் எனக் கூறப்படும்.

இன்று எம்மில் யாரையாவது கல்விமான் எனக் குறிப்பிடுவதாயின் அவர் வைத்துள்ள பட்டங்களை மட்டும் வைத்து மதிப்பிடுவதில்லை. மாறாக அவர் வைத்துள்ள பட்டம் மூலம் பெற்றுள்ள அறிவில் தெளிவுடையவரும் அதனைச் சமூக நலன் கருதி பிரயோகிக்கவும் கூடியதாகவும் இருப்பவரே அறிவுடையவர் என்று அல்லது கல்விமான் என்று கூறப்படும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாட்டைப் பிரத்தியேகக் கல்வியா? பாடசாலைக் கல்வியா? வழங்கும் என்பதில் பலமான கேள்வி அண்மைக்காலமாக எழுப்பப்பட்டு வருகிறது.

பாடசாலைக் கல்வியின் அடிப்படைப் பண்புகளாகப் பின்வருவன வலியுறுத்தப்படுகிறது.

* உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தல்
* சகித்துக் கொள்ளல்
* நன்றி கூறல்
* பாராட்டுதல்
* ஏற்றுக்கொள்ளல்
* பிறர் உணர்வைத் தான் பெறுதல்
* திறந்த கலந்துரையாடல்



இவற்றை வழங்குவதில் பிரத்தியேகக் கல்வி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பு என்ன என்பது பற்றி பெற்றோர் சிந்திக்க வேண்டும். இத்தகைய

இயல்புடைய கல்வி முறை, முறைசாரா வழிகளில் இன்று பெற முடிகிறது. அதனால் இன்று கல்வி வாழ்க்கை நீடித்த கல்வி என மாற்றப்பட்டுச் செயற்பட்டு வருகின்றது. அதனுள் முறைசாரா முறையில் உள்ளடங்கும் கல்வி போதனா முறைதான் பிரத்தியேக வகுப்புக்கள் ஆகும்.

**பிரத்தியேகக் கல்வி போதனை:**

உலகமயமாதல் நிகழ்வினால் பெரும் சவாலுக்குள்ளாகியுள்ள பாடசாலைக் கல்வி, பிரத்தியேகக் கல்வி போதனைகளினால் பெரும் அச்சுறுத் தல்களுக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றது. இதனை நிழல் கல்வி எனவும் குறிப்பிடப்படும். *Tuition* என்பது தனிநபர்களால் அல்லது குழுக்களால் பாடசாலை நேரத்துக்குப் பின்னர் அல்லது முன்னர் மாணவர்களிடம் கட்டணம் பெற்றுக்கொண்டு வழங்கப்படும் பிரத்தியேகக் கல்வியூட்டலைக் குறிப்பிடும். இந்தப் போக்கு இந்தியா, ஐரோப்பா, வடஅமெரிக்கா, கொரியா போன்ற நாடுகளிலும் பெருமளவு வியாபித்துள்ளது. இன்று அதிகளவான மாணவர்கள் முன்பள்ளி முதல் தரம் 13 வரையிலான பாடசாலை மாணவர்கள் ரியூஷன் என்றும் கருத்தரங்குகள், மீட்டல் வகுப்புகள், பேப்பர் கிளாஸ் என அனேக மாணவர்களைக் காணமுடியும். இதனால் மாணவர்கள் சுயமாகச் சிந்தித்துப் படிப்பதற்குக் கூட நேரம் இல்லை. இதற்குச் செலவு செய்ய முடியுமான பெற்றோர்களாக அனைத்தையும் இழந்து மாறிவருவதை யும் அவதானிக்க முடிகிறது. இன்று எம் மத்தியில் நடைபெறும் இப்பிரத்தி யேக வகுப்பு பின்வருமாறும் வகைப்படுத்தப்படுகிறது.

* தனிப்பட்ட வகுப்புக்கள்
* குழு வகுப்புக்கள்
* நவீன வசதியுடன் நடைபெறும் தனிப்பட்ட, குழு வகுப்புக்கள்

இத்தகைய பிரத்தியேகக் கல்வியைப் பின்வருவோர் நாடுகின்றனர்.

* குறைந்த அடைவை உடையவர்கள்.
* தமது சமவயதினர் பெற்றுள்ள கல்வியை விட உயர்ந்த கல்வி பெறவேண்டும் எனும் எண்ணம் உள்ளோர்.

இப்போதனைகளை வழங்குபவர்களை *Tutors* என அழைப்பர். இதன் வரலாறு பழமையானது. அறிவுலகில் முதன் முதலில் அறிவைப் பணத்துக்கு விற்க முனைந்தவர்கள் கிரேக்க மெய்யியலாளர்களான சோபிஸ்ட் *(Sophist)* எனும் குழுவாகும். இவர்கள் அக்காலத்தில், இப்போது குறிப்பிடப்படும் "பேராசிரியர்" என்போருக்கு ஒப்பானவர்கள் என மதிக்கப்பட்டனர். இவர்களது போதனைகளை அக்காலத்தைய இளைஞர்கள் கற்க முனைந்தமையால் கல்வியானது தனிப்பட்டவர்கள் தரும் கட்டணத்துக்கேற்ற போதனை முறையாக மாறியது. இதன்படி "சோபிஸ்ட்டுகள்" பிரத்தியேகச் செயற்திறனை யும் உயர்ந்த மனவளத்தையும் யார் பெற்றுக்கொள்ள விரும்புகிறார்களோ

அவர்களுக்குக் கற்பித்து அவர்களிடம் இருந்து பணம் பெற்றனர். இத்திறமை சோபிஸ்ட்டுகளின் தனித்திறமை என கி.மு. 5ஆம் நூற்றாண்டில் மதிக்கப்பட்டது. கிரேக்க வரலாற்றில் இம்முறையினை இல்லாமல் செய்ய அக்காலத்தில் உலக தத்துவஞானி சோக்கிரடீஸ் இளைஞர்களையும் பொதுமக்களையும் தேடிச்சென்று இலவச அறிவுரை வழங்கினார்.

கல்வி வரலாற்றில் பிரத்தியேக தனியார் கல்வி தோன்றியதற்கான காரணங்களைக் கல்வி சமூகவியலாளர்கள் பின்வருமாறு பட்டியல் படுத்துகின்றனர்.

* பரீட்சை மையக்கல்வி.
* ஆசிரியர்கள் வருமானத்தை அதிகரித்தல்.
* காலத்துக்குத் தேவையான கல்வியைப் பெறல்.
* உலகச் சந்தையில் புதிய கற்கைகளின் வருகை.
* பாடசாலை - கற்றல் - கற்பித்தலில் நம்பிக்கையின்மை.
* பாடசாலை கற்பித்தலைச் சரியாகப் பெற்றோர், ஆசிரியர் புரியாமை.
* பாடசாலையில் பாடத்திட்டம் பூர்த்தி செய்யப்படாமை.

இக்காரணங்கள் ஒவ்வொன்றும் அரசு, அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலைகள், கல்வி அதிகாரிகள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயமாகும். இச்சிந்தனையின் விளைவு எம்மில் நோயாகத் தோன்றியுள்ள பரீட்சை மையக்கல்வியாகும். இதனால் இன்று இலங்கையின் கல்வித்துறையில் இரண்டு உந்து சக்திகள் செல்வாக்குச் செலுத்துகின்றது என அடையாளப் படுத்துகின்றனர் கல்விச் சமூகவியலாளர்கள்.

* பொதுப் பரீட்சைகள் மீது மக்கள் கொண்டுள்ள அபரீதமான கரிசனையும் பரீட்சை மையப் போதனையும்.
* இதன் காரணமாகச் செல்வாக்கடைந்துள்ள பிரத்தியேக வகுப்புக்கள்.

தேசியகல்வி ஆணைக்குழு (2010) தனியார் வகுப்புகளுக்குச் செல்வதற்கான காரணம் பற்றி தரம் 10 மாணவர்களில் 2378 பேர் ஆய்வு செய்யப்பட்டனர். அதற்கான காரணங்கள் பின்வரும் வீத அடிப்படையில் கண்டறியப்பட்டது. 68% வீதத்தினர் பொதுப் பரீட்சையின் வினாவிடைகளைக் கலந்துரையாடச் செல்வதாகவும் 53% வீதத்தினர் போதுமான பாடப் பயிற்சிகள் பாடசாலைகளில் வழங்கப்படுவதில்லை எனவும் மேலும் 53% முழுப்பாடத்தில் எல்லா அலகுகளும் பாடசாலையில் முடிக்கப்படுவதில்லை எனவும் 29% எவ்வாறு வினாக்களுக்கு விடை அளிப்பதெனத் தனியார் கல்வி போதனை விளக்குவதாகவும் 23% பாடசாலையில் புறக் கீர்த்திய செயற்பாடுகளால் விட்டுப் போன பாடங்களை முடிப்பதற்கெனவும் மேலும் 10% பெற்றோரின் உந்துதலால் வருவதாகவும் குறிப்பிடுகின்றனர். 7% சந்தோசமான பொழுதுபோக்கு

பிரத்தியேக வகுப்பு எனவும் 6% வகுப்பாசிரியர்களால் வகுப்புக்கள் சமூகமளிக்க வேண்டாம் என்ற காரணத்தினாலும் 3%சக மாணவர்கள் தனியார் வகுப்புகளுக்குச் செல்வதால் நாங்களும் செல்கிறோம் என ஆய்வு கண்டறிந்துள்ளது.

இத்தகைய விருப்பங்களுக்குக் காரணம், இன்று கல்வி உலகிலும் வேலை உலகிலும் பரீட்சை முடிவுகளைத் தான் பார்க்கின்றார்களே தவிர வாழ்க்கைத் தேர்ச்சிக்கும் தொழில் திறமைக்கும் ஏற்றவகையில் மாணவர்கள் உள்ளார்களா என்பது நோக்கப்படுவது இல்லை. உதாரணமாக 5ஆம் தரப் புலமைப் பரீட்சை சித்தி, O/L, A/L, பல்கலைக்கழகத் தேர்வு என்பவற்றில் அதி உயர் சித்தியடைவோரை மட்டும் பெரும் புலமையாளர்களாகப் பார்ப்பது பழக்கமாகியும் சமூக அந்தஸ்து எனவும் கருதுவதால் பிரத்தியேக போதனை தொடர்ந்து பிரசித்தம் பெற்று நடைபெற்று வருகின்றது.

மேற்கூறிய காரணங்களால் பிரத்தியேக வகுப்பு நடைபெறு வதாகக் கண்டறிந்தபோதிலும் இவை அனைத்தும் பாடசாலைக் கல்வியில் விடப்படும் தவறுகளாலேயே நடந்தேறுகின்றது என்பது கருதுகோள். இன்று மருத்துவத் துறையில் அரச வைத்தியசாலைகளை விடவும், நோயாளர்கள் ஏன் தனியார் வைத்தியசாலைகளுக்குச் செல்கின்றனர் என்பதும் இத்தகைய பிரச்சினை போன்றது எனச் சுட்டிக்காட்டலாம்.

இருப்பினும் இத்தகைய பிரத்தியேகக் கற்றலின் மூலம் நன்மையும் இருக்கவே செய்கின்றன. தெளிவான விளக்கம் பெறல், விரும்பிய பாடத்தை விரும்பிய ஆசிரியர்களிடம் கற்கலாம், அதன் மூலம் அடைவு மட்டத்தை அதிகரிக்கலாம். ஓய்வு நேரத்தைப் பயனுள்ளதாக்கலாம். நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் எதிர்பார்க்கை வினாக்கள் குறிப்புக்கள் பெறலாம், மாணவர்கள் தனிப்பட்ட முறையில் கவனிக்கப்படல், பாடசாலைக்குச் சென்று கல்வியைப் பெற முடியாத மாணவர்களாலும் கல்வியைத் தொடரமுடியும் எனும் வாய்ப்புக்கள் பிரத்தியேகக் கல்வி போதனைகளில் உண்டு. இத்தகைய முயற்சிகள் எல்லாவற்றையும் கவனிக்கும்போது பாடப்புள்ளிகளை அதிகரித்து பரீட்சை மையமானதும் சான்றிதழ் கல்வி மைய சமூகத்தை உருவாக்கும் தொடர்ச்சியான செயற்பாடு என இதைக் கூறலாம்.

இதனாலேயே இன்றைய காலகட்டத்தில் உருவாகும் பட்டதாரிகள் "பட்டம்பெற்ற பட்டதாரிகளாக உருவாகின்றார்களே தவிர பட்டம் பெற்ற தொழிற்திறன் பெற்ற புத்தி ஜீவிகளாக உருவாவதில்லை" என்ற மனம் நொந்த செய்தியும் உண்டு. இதனாலேயே தற்காலக் கல்விச் செய்தியின் படி இலங்கை, கென்யா, கியூபா போன்ற நாடுகளில் இன்று டிப்ளோமா நோய் அல்லது சான்றிதழ் பெறும் நோய் பரவியுள்ளது. இந்நாடுகளில் வேலை வாய்ப்புக்களை நாடுவோர் சிறந்த கல்வியையன்றி சிறந்த சான்றிதழ்களையே நாடுகின்றனர். இதனால் இந்நாடுகளில் உள்ள கல்வி நிலையங்கள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் கலாசாரம் ஒன்று உருவாகியுள்ளது. அதனாலேயே தற்கால

பாடசாலைகளும் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதையே தமது கடமை எனவும் கொள்ள நேரிடுகின்றது. இன்று பாடசாலைகளின் கல்வி அடைவுகளை அளக்கும் கருவியாக O/L, A/L, பல்கலைக்கழக மாணவர் தேர்வு எண்ணிக்கை, 5ஆம் தரப் புலமைப் பரீட்சைத் தேர்வு மாணவர்களின் எண்ணிக்கையையே கல்வி வலயங்களும் கல்வி அதிகாரிகளும் மதிப்பீடு செய்து வருகின்றனர். இதுவும் இன்றைய கல்வி உலகில் கவலை தரும் செய்தியாகும்.

இவற்றுக்கும் அப்பால் பிரத்தியேக வகுப்புக்களினால் மாணவர் கட்கும் பாடசாலைகளுக்கும் தீமையும் அதிகம் ஏற்படுகின்றது. இது பற்றி பெற்றோர், ஆசிரியர் சிந்திக்க முன்வருதல் வேண்டும். பாடசாலையில் மாணவர் வரவு குறைவடைதல், செய்முறையினூடாகப் பாடங்களில் அனுபவம் பெறமுடியாத நிலை, பெற்றோரின் கற்பித்தல் சுமை அதிகரிப்பு. மாணவர்கட்கு ஓய்வு குறைவு, விடுமுறை தினங்களை மாணவர்கள், பெற்றோர்கள் மகிழ்ச்சியாகக் கழிக்க முடியாமை, பாடசாலைக் கல்வி மீதான நம்பிக்கை குறைவடைதல், பிரத்தியேக வகுப்புக்களில் கற்கும் மாணவர்களால் பாடசாலையில் ஏனைய மாணவர்கட்குக் கற்றல் இடையூறு ஏற்படல், பெற்றோரும் பிள்ளைகளும் பிரத்தியேக வகுப்பு ஆசிரியரில் நாட்டம் கொள்ளல், பாடசாலை ஆசிரியர்கள் தரம் குறைவு என மாணவர்கள் நினைப்ப தால் ஆசிரியர்கள் கற்பிப்பதில் சோர்வு அடைதல், வசதி படைத்த பிள்ளைகள் அதிகம் நன்மை பெறல், வறிய பிள்ளைகள் பாதிக்கப்படல், ஒத்த வயதுக்குழு, ஏனைய வயதுக் குழுக்களி டையே ஒழுக்கம் சீர்கேடு, காதல், அன்பு, ஏற்பட்டு கலாச்சார சீர்கேடு ஏற்பட வழிவகுத்தல். இன்னும் ஆசிரியர், பெற்றோர், மாணவர்கட்குக் கற்றல், கற்பித்தல் சுமை அதிகரித்து மன அழுத்தம் ஏற்படும். மனப்பாங்கு பண்பு விருத்தி தடைப்படும்.

மேலும், பிரத்தியேக வகுப்பில் அறிவு விருத்தி மட்டுமே நோக்காகக் கொள்வதால் திறன், மனப்பாங்கு விழுமிய விருத்திக்கு வாய்ப்பில்லாத நிலை, சுயமாகச் சிந்திக்க மாணவர்கட்குச் சந்தர்ப்பம் கிட்டுவதில்லை என்பன பல. இத்தீமையின் உச்சகட்டம் கற்றலுக்குப் பாடசாலை ஆசிரியர் அவசியமில்லை என்பது மேலோங்கி ஆசிரியர்கட்கு, பாடசாலைகளுக்கு மாணவர்களும் பெற் றோரும் மதிப்பளிக்காத நிலையும் தோன்றியுள்ளது. இது தவிர மாணவர்கள் எந்த நேரமும் பிரத்தியேகக் கல்வி என்று 24 மணி நேரமும் செலவு செய்வதால் சிறந்த கல்விக்கு அவசியமான சீரான ஆன்மா, உள்ளம், உடல் என்பன இல்லாமல் செய்யப்பட்டும் தேகாரோக்கியம், உடற்பயிற்சியும் இன்றி மன அழுத்தத்துக்கும், மனநோய்க்கும் உட்பட்டு, சீரழிந்த மாணவ சமூகமும் சீரழிந்த பெற்றோர் சமூகமும் உருவாகியுள்ளது. இதன் இன்னொரு படி மாணவர்களிடம் அழகுணர்வு இல்லாமல் செய்யப்பட்டு பெற்றோர் - பிள்ளை பிளவு, ஆசிரியர் - மாணவர் பிளவு என்பனவும் சமூகம் சந்தித்து வருகின்றது. இதனால் கல்வியின் உண்மையான நோக்கம் நிறைந்த பிள்ளைகளாகவன்றி, மனநோயினா லும் கவலையினாலும் பாதிக்கப்பட்ட மாணவர்களையே சமூகம் சுமந்து வருகின்றது என்ற கவலையான செய்தியும் இதில் உண்டு.

இருந்தபோதிலும் பாடசாலைக் கல்வி பற்றிய விமர்சனங்களும் இன்று எழுத்துருவில் இடம்பெற்றுள்ளதையும் சுட்டிக் காட்டியேயாக வேண்டும். பாடசாலையற்ற சமூகம் எனும் *(De-school)* நூலில் பாடசாலைகள் - மாணவர்களின் சுயசிந்தனை வளர்ச்சியைத் தடைசெய்கின்றன என்றும் அவர்களுடைய படைப்பாற்றல்களை வளர்ப்பதற்கான ஏற்பாடுகள் எவையும் பாடசாலையில் இல்லை எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. அதேவரிசையில், 1976களில் பாடசாலைக் கல்வியை ஒட்டுமொத்தமாக எதிர்க்கும் இயக்கங்களும் சிந்தனைகளும் நூல்களும் எழுந்தன. அச்சிந்தனையில் சில கல்வியியலாளர்கள் நாட்டுப்பற்றுடைய, கீழ்ப்படிவுள்ள பிரஜைகளை உருவாக்குவது பாடசாலைக் கல்வியின் பிரதான நோக்கம் என்பதை எதிர்க்கின்றனர். இது பெரியவர்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் நோக்கமேயன்றி கல்வி சார்ந்த நோக்கமல்ல என்கின்றனர்.

மேலும், கண்மூடித்தனமான கேள்விக்கிடமற்ற தேசாபிமானத்தை வளர்க்க முனைவது ஆட்சியாளர்களுக்கே பயன்படக்கூடிய பண்புகள் எனவும் இதனால் ஜனநாயகப் பாங்கான சுய சிந்தனையும் எதையும் நுணுகி நோக்கும் போக்குடைய ஜனநாயகப் பிரஜைகளை வளர்த்தெடுக்க முடியாது என்பதும் மற்றொரு சாரார் விமர்சனமாகும். இதனை இன்னும் ஒரு படி மேல் சென்று ஒழுக்கவியலின்படி பார்த்தால் ஒழுக்கம் என்பது ஏலவே தீர்மானிக்கப்பட்ட தேர்வுகளில் அல்ல. எமது தேர்வுகளிலேயே ஒழுக்கவியல் தங்கியுள்ளது என்கிறது ஒழுக்க மெய்யியல் கல்வித்தத்துவம். அவ்வாறாயின் கல்வியின் முடிவும் மனிதனை அவனது சுய விருப்பப்படி விட்டுவிட்டு, அவன் செயற்பாடுகளையும் சிந்தனையையும் எதிர்பார்ப்பதே சிறந்தது. இதற்கு அரச பாடசாலைகளும் ஆசிரியர்களும் சீர்திருத்தத்துக்குட்பட வேண்டிய தேவை, அவசியம் உணரப்படுகிறது.

மார்க்சிய விமர்சனத்தின்படி பாடசாலை முறையானது சமூக வகுப்பு வேறுபாடுகளை மறு உற்பத்தி செய்ய உதவுகிறது எனவும் எனவே இதில் யாருக்கும் சமமான கல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில், சமூக அமைப்பில் செல்வாக்குச் செலுத்தும் உயர் வகுப்பினர் எப்படியேனும் தமக்கென வசதியான பாடசாலையை அமைத்துக் கொள்வதனால் இது ஏற்படுகின்றது என்கின்றனர்.

**பரிந்துரைகள்:**

எனவே, பிரத்தியேகக் கல்வி, பாடசாலைக் கல்வி தொடர்பாக அரசும் கல்விக் கொள்கைகளும் கவனமெடுத்தல் வேண்டும் என்று அவசியமாகியுள்ளது. குறிப்பாகப் பாடசாலைக் கல்வியை மேம்படுத்தும் வகையில் தொடர்ச்சியாகக் கல்விக் கொள்கைகளே அடிக்கடி சீர்படுத்தப்படுகிறதே தவிர, கல்வியை மாணவர்களிடத்தில் உற்பத்தி செய்கின்ற ஆசிரியர்களின் நலன் விடயங்களில் எந்தச் சீர்திருத்தமும் செய்வதாக இல்லை. குறிப்பாக ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துதல், அவர்களுக்கான வாழ்க்கை

# UNIQUE

**EDUCATION• TECHNOLOGY •INNOVATION**

www.edume.lk

உங்கள் கணனிமயமான எதிர்காலத்திற்கு எமது வழிகாட்டல்

SUCCESS INTERNATIONAL INSTITUTE

**183. New Chetty Street, Colombo 13.**
**Email: uniquemedia@edume.lk**

ROYAL ACADEMY

GRADE 5 TO G.C.E O/L & A/L
ALL SUBJECTS IN
THREE MEDIUMS & OTHER COURSES



12 & 16, Sangamitha Mawatha,
Colombo- 13. Tel: 0112441981

வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முனைதல் முக்கியமாகும். இன்று கல்வியை உற்பத்தி செய்கின்ற ஏனைய பிரிவினரோடு ஒப்பிடுகின்றபோது ஆசிரியர் களின் சம்பளம் மிகக் குறைவாகும். இதனாலேயே ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்புக்கள் பற்றியும் ஏனைய தொழில் நடவடிக்கை பற்றியும் சிந்தித்து, செயற்பட்டும் வருகின்றனர். இதற்கு மாற்றீடு செய்யும்போது அவர்களது முழுக்கவனமும் பாடசாலை கற்றல், கற்பித்தல் பற்றித் திரும்ப வாய்ப்புண்டு.

மேலும், ஆசிரியர்கட்கு, பல்கலைக்கழக, கல்விக் கல்லூரி விரிவுரையாளர் கட்கு இருப்பது போன்று தமது தொழில்வாண்மையை விருத்தி செய்ய *B.Ed., PGDE, SPNPGDE, M.Ed.* கற்க இலவசப் புலமைப் பரிசில் திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும். இன்று எம் நாட்டில் உள்ள பாடசாலை ஆசிரியர்களில் முன்பள்ளி, ஆரம்பக் கல்வி கற்பித்துக்கொடுக்க முன்பள்ளி, ஆரம்பக்கல்வி தொடர்பான ஆரம்பக்கல்வி பட்டப்படிப்பு பட்டம் பெற்றோர் எத்தனை பேர் உள்ளனர் என்பது கேள்விக்குறி, மேலைத்தேய நாடுகளில் முன்பள்ளி பற்றிய பட்டம் இல்லாமல் சிறு பிள்ளைகளுக்குக் கற்பிப்பது என்பது இயலாத காரியமாகும்.

இன்னும் கல்வி அதிகாரிகள் பாடசாலை மேற்பார்வையின்போது அதிகாரம் படைத்த அதிகாரிபோல் நடந்துகொள்வதை விடுத்து கற்றல் - கற்பித்தல் நண்பனாக மேற்பார்வை செய்ய முன்வர வேண்டும். மேற்பார்வை செய்ய முன்வருபவர்கள் நவீன கற்பித்தல் உபகரணம், நவீன கற்பித்தல் சிந்தனை கொண்டு ஆசிரியர்களை வழிப்படுத்த முனைய வேண்டும்.

இது தவிர பாடசாலை பற்றிய நல்ல விழிப்புணர்வுகளைப் பெற்றோர் மத்தியில் செயற்படுத்தி தொடர்ச்சியான பங்களிப்பை சிந்தனை ரீதியாகப் பெற முயலுதல் வேண்டும். ஆசிரியர்களாக ஆட்சேர்ப்புச் செய்யும்போது ஆசிரியத் தொழிலுக்கு உண்மையான விருப்பம் உள்ள கல்விப் புலத்தோடு பட்டம் பெற்றவர்களை இணைக்க முன்வருதல் சிறப்பு. இது தவிர மதிப்பீட்டு முறைகளில் எழுத்துப் பரீட்சைகளை மாத்திரம் கொண்டு மாணவர்களின் திறமையை அளவிடாது ஏனைய செயல்முறைப் பரீட்சைகளை ஆசிரியர்கள் மாணவர்களை எதிர்காலத்தில் ஆற்றல் மிக்கவனாக மிளிர்வதற்குச் செயற் படுத்த முன்வர வேண்டும். இந்த நோக்கில் மதிப்பிட்டு புள்ளிகள் இட முன்வர வேண்டும். இவற்றைச் செயற்படுத்தும் முகமாகவே SBA மதிப்பீட்டு முறை, 5E கற்பித்தல் முறை அறிமுகப்படுத்திய போதிலும் இன்னும் இதன் முக்கியத்து வத்தை விளங்காத ஆசிரியர்களும் உள்ளனர் என்பது மனவேதனையாகும். இதற்கு ஆசிரியர்கள் மட்டும் காரணமல்ல. இது பற்றிப் பயிற்சிக் கருத்தரங்கு செய்கின்ற வளவாளர்கள் போதிய அதுபற்றிய கல்வியறிவு, தன்னில் அதை மீட்டிப் பார்க்காமை என்பன தெரியாமல் செயற்படுத்துகின்றனர். இன்னும் சொன்னால் கொடுப்பனவுகளுக்காக ஆசிரியர்கள் முன்நின்று அவர்களுக்குத் தெரிந்த விடயங்களை மட்டும் கூறி நேரம் கடத்துகின்ற செயற்பாடுகள் இல்லாமல் செய்யப்பட்டு, கல்விப் புலத்தில் உள்ள கல்வி பற்றி உயர்பட்டம் பெற்றவர்களை இதற்காக இணைத்துச் செயற்படுத்த முன்வர வேண்டும்.

இதற்கும், அப்பால் ஒவ்வொரு பாடசாலை ஆசிரியரும் தனது கற்பித்தலைத் தனது பூரண விருப்பத்துடன், ஏலவே தயார் செய்தலுடன், தானும் ஆய்வு செய்து, தமக்கும் இது விளங்குமா? என்ற தன்னை அறிந்து, கற்பித்தல் உபகரணம் கொண்டு சென்று மகிழ்ச்சிகரமாகக் கற்பிக்க முன்வர வேண்டும். இதனைத் திறன்படச் செயற்படுத்த கணினி, தகவல் தொழில்நுட்பம் தெரிந்து மகிழ்ச்சிகரமாகக் கற்பிக்க ஆசிரியர்கள் முன்வர வேண்டும். இதைவிடுத்து இதற்குத் தயார் இல்லாதவர்கள் கல்விப் புலத்தில் இருந்து விலகி வேறு துறைகட்குத் தமது பங்களிப்பைச் செலுத்துவது சிறந்தது.

எனவே, பாடசாலைக் கல்வியைச் சீர்திருத்துவதன் மூலம் தனியார் கல்வியின் செல்வாக்கை மாணவர்களிடமும் பெற்றோர்களிட மும் இழக்கச் செய்யலாம். அதன் மூலம் எதிர்காலச் சந்ததியையாவது தொழிற்திறன்கள் நிறைந்த, சவாலுள்ள தொழிற்சந்தையில் முகங்கொடுக்கும் ஆற்றல் உள்ளவர் களாகவும் மனநிறைவும் அழகுணர்வும் விரக்தியுமற்ற மனித சமூகத்தை உருவாக்கலாம்.

*14ம் பக்கத் தொடர்ச்சி...*

கல்வி அமைப்பில் முன்னெடுக்கப்படும் அனைத்துக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் பண்புத் தரம், அவற்றின் முகாமை என்பனவற்றில் அரசு கூடிய அக்கறை செலுத்த வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் நிறைவேற்றப் பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் தோல்விக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களின் பண்புத்தரவீழ்ச்சி காரணமாக அமைந்துள்ளமை சுட்டிக் காட்டப்படுகிறது. இவை தேசிய மட்டம், மாகாண மட்டங்கள், மாவட்ட மட்டங்கள், வலய மட்டங்கள், மற்றும் பின்தங்கிய பிரதேசம் என்றவாறு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் போது சமூக வேறுபாடுகளின்றி நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோளானது எல்லாச் சமூகங்களிலும் சிறந்த விளைதிறனுடன் நிறைவேற்றப்படும் என்பது திண்ணம்.

கல்வியை நாடுபூராகவும் முன்னெடுப்பதற்கான செலவீனத்தை முன்னமே கல்வி அமைச்சு சமூகப் பங்கு பற்றலுடன் திட்டமிடுவதன் மூலமும் தனியார் நிறுவனங்களுடன் கூட்டிணைந்து செயற்படுவதன் மூலமும் நாட்டின் கல்வியை மேம்படுத்த முடியும். மேலும் கல்விச் செயற்பாடுகளின் பின்னூட்டல் ஒன்றைக் கல்வி அமைச்சும் பாரளுமன்றமும் பெறும் வகையிலான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவன் மூலம் கல்வி தொடர்பான முறைப்பாடுகளை உடனடியாகத் தீர்க்கமுடியும்.

# பிள்ளைகளின் கல்வி விருத்தியில் பெற்றோரியம் ஒரு மறைமுக வளம்

■ க.பேர்ணாட்

பிள்ளைகளின் உடல், உளம், சமூகத்தொடர்பு, மனவெழுச்சி, பண்பாடு, ஒழுக்கம், ஆன்மீகம் என்பவற்றில் பிள்ளையானது பொருத்தமான மாற்றத்தை அல்லது விருத்தியை பெறும்போது அப்பிள்ளையினது வாழ்க்கை பூரண ஆளுமைக்குள் இட்டுச் செல்லப்படுகின்றது எனலாம்.

பிள்ளையினது விருத்தியில் மரபும் சூழலும் பெரும் பங்கு வகிக்கின்றது என்பது உளவியல் ஆய்வுகளின் முடிவாகும். அதிலும் பிள்ளையின் பிரசவத்திற்கு முந்திய சூழலும் பிள்ளையின் பிறப்பிற்கு பின்னதான சூழலும் பிள்ளையின் விருத்தியில் மாபெரும் செல்வாக்கினைச் செலுத்துகின்றது. ஆகவே பிள்ளைகளின் விருத்திக்கான சூழலில் பெற்றோர்கள் காட்டவேண்டிய பங்கு மகத்தானதாகும்.

இக்கட்டுரையானது பிள்ளைகளின் கல்விவிருத்தியில் பெற்றோரியத்திற்குரிய பங்கினை நோக்குவதாக அமைகின்றது. இன்று எழுந்துள்ள சவால்மிகு கலைத்திட்டச்செயற்பாடுகள், போட்டிமிகு கல்விச்சூழல், பெற்றோர்களது உதவியைப் பெரிதும் நாடுகின்ற ஆசிரியர்களின் போக்கு, பாடசாலைகளினால் மட்டும் தனித்து நின்று செயலாற்ற முடியாத நிலை, நாளுக்கு நாள் விரிவடைந்துவிடும் பிள்ளைகளின் பொருத்த மற்ற நடத்தை வெளிப்பாடுகள், தொழில்நுட்ப சாதனங்களில் பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ள அதீத கவர்ச்சி, நாட்டம், போன்றவை உள்ளடங்கிய சூழலில் பிள்ளைகளின் கல்விவிருத்தியில் பெற்றோர்கள் எவ்வாறு ஒரு மறைமுக வளமாக செயற்பட வேண்டும் என்பதை முடிந்தளவுக்கு கலந்துரையாடுவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

கட்டுரையாளர்
வவுனியா தேசிய
கல்வியியற்
கல்லூரியில்
பீடாதிபதியாகப்
பணிபுரிகின்றார்.

**பெற்றோரியம்**

பெற்றோரியம் தனித்து பிள்ளைகளின் உடல் நலனைக் கவனித்தல், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தல், அரவணைத்தல், அன்புக் காட்டல் என்று தொடங்கி இன்று பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட ஒரு செயற்பாடாகவும் ஒரு கலையாகவும் ஒரு விஞ்ஞானமாகவும் விரிவடைந்துள்ளது எனலாம்.

பிள்ளையானது எதிர்காலத்தில் நற்பிரசையாகவும், தன்னம் பிக்கையும் உறுதிப்பாடும் கொண்ட பூரண ஆளுமைமிகு மனிதனாக வும் மிளிர்வதற்கு பிள்ளை மீதான பெற்றோர்களின் கவனிப்பு ஒருவகை மூலதனமாக அமைகின்றது. பொதுவாக பெற்றோரியம் ஐந்து இலக்குகளை அடிப்படையாகக் கொண்டது எனலாம். அவையாவன:

* பிள்ளைகளின் விருத்திமீது எப்பொழுதும் திறந்த பார்வையைக் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வளவு வேலைப்பளு இருந்தபோதிலும், எவ்வாறான இக்கட்டான சூழலிலும் பிள்ளைகளின் மீதான கவனத்தை அசையாது வைத்திருத்தல் என்பது இதன் பொருளாகும்.

* பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக ஆசிரியர்களுடன் இணைந்த நம்பிக்கை மிகு ஒரு செயற்றிட்டத்தினை பெற்றோர் கொண்டிருத்தல் பெற்றோரியத்தின் இரண்டாவது இலக்காகும். பிள்ளைகளின் கற்றலை நடத்தையை ஆசிரியர்கள் கவனித்துக் கொள்வார்கள் என ஒதுங்கியிருத்தல் அல்லது ஆசிரியர்கள் மீது அவநம்பிக்கை கொண்டு ஆசிரியர்கள் உடனான தொடர்பை வெறுத்திருத்தல் பொருத்தமான பெற்றோரியமாக இருக்கமாட்டாது. பிள்ளைகளின் ஆசிரியர்களுடன் நல்ல உறவை பேணுவதோடு தொடர்ச்சியான கலந்துரையாடலுக்கும் பெற்றோர்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

* பிள்ளைகள் சமூகப் பொருத்தப்பாடுடையவர்களாகவும், சமூக தேர்ச்சிகளைக் கொண்டவர்களாகவும் வளர்வதற்குரிய வசதிகளை, வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் பெற்றோரியத்தின் பிரதானமொரு இலக்காகும். சமூக நிகழ்வுகளில் பிள்ளைகளுடன் சேர்ந்துக் கலந்துக்கொள்ளல், மனித உரிமைகளை பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தல், பிள்ளைகள் தலைமைத்துவம் ஏற்பதற்கான சூழலை திட்டமிட்டு ஏற்படுத்தல், சமூக ஏற்புடைய நடத்தைகளை விதிகளை , சட்டங்களை, பிள்ளை வீட்டிலும் பாடசாலை யிலும் பின்பற்றி நடப்பதை உறுதிப்படுத் தலும், பரிச்ச யமாக்குதலும் பெற்றோரியத்தின் சிறப்பானதொரு இலக்ககாகும்.

* பிள்ளைகள் தனித்துவமானவர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும், தன்னிறைவு மிக்கவர்களாகவும், உறுதிப்பாடும் சுயமதிப்பும் உடையவர்களாகவும் விருத்தியடையக்கூடிய வீட்டுச்சூழலை ஒழுங்கமைத்து அதில் பிள்ளை ஈடுபாட்டுடன் வாழ்வதற்குரிய வழிகாட்டுதல் பெற்றோரியத்தின் மற்றுமொரு முக்கிய இலக்காகும். பிள்ளைகள் தமக்குரிய தேவைகளை கேட்டுப்பெறுதல்,தமது கடமைகளை தானே செய்துக்கொள்ளல், மற்றவர்களின் உதவியில் பெருமளவுக்கு தங்கியிருப்பதை குறைத்தல், வீட்டு வேலைகளில் பெற்றோருக்கு முன்வந்து உதவும் மனப்பாங்கினை வெளிகாட்ட ஊக்குவித்தல் என்பவற்றை இவ்விலக்கின் உதாரணமாகக் கொள்ளலாம்.

* பிள்ளைகள் எப்பொழுதும் திறந்த தொடர்பாடலுடன் வாழ்வை ஒருமித்துக்கொள்ள உதவுதல் பெற்றோரியத்தின் இலக்காகும். பயமின்றி கருத்துக்களை வெளிப்படுத்தல். தனது தேவைகளை துல்லியமாக முன்வைத்தல், தன்னை வெளிப்படுத்த கிடைக்கும் சந்தர்ப்பங்களை பொருத்தமாக பயன்படுத்தல், தனது பிரச்சினைகள் பற்றி பெற்றோர் களுக்கு வெளிப்படுத்தல், பொருத்தமான தொனியில் உரையாடுதல், மனவெழுச்சிக் கட்டுப்பாட்டுடன் தொடர்பாடல், பொருத்தமான மொழிப்பிரயோகம் என்பன அடங்கிய திறந்த தொடர்பாடல் பிள்ளை களின் கல்விவிருத்திக்கும், எதிர்கால வாழ்க்கை விருத்திக்கும் அவசிய மானது என்பதால் பெற்றோரியத்தின் ஒரு முக்கிய இலக்காக பிள்ளை களின் திறந்த தொடர்பாடலை ஊக்குவித்தல் அமைகின்றது.

**பெற்றோரியத்தின் நடையியல்கள்**

பெற்றோரியம் பற்றி நோக்கும்போது பெற்றோரிய நடையியல்கள் பின்வருமாறு அமைகின்றது. அவையாவன:

**1. அதிகாரமுள்ள பெற்றோர்**

அதிகாரமுள்ள பெற்றோர் பிள்ளைகளின் மீது அதிக எதிர்பார்ப்புக ளைக் கொண்டவர்களாகவும், கடுமையான சட்டவிதிகளால் பிள்ளைகளை கட்டுப்படுத்துபவர்களாகவும் இருப்பார்கள். பிள்ளைகள் தொடர்பான எல்லா முடிவுகளையும் பெற்றோர்களே எடுப்பார்கள். பிள்ளைகளுக்கும் பெற்றோர்க ளுக்கும் இடையிலான தொடர்பாடல் இங்கு குறைவாகவே காணப்படும்.

**2. ஆதரவளிக்கின்ற பெற்றோர்**

ஆதரவளிக்கின்ற பெற்றோர்கள் பிள்ளைகளின் நண்பர்கள் போன்று நடந்துகொள்வார்கள். பிள்ளைகளின் செயற்பாடுகளில் இவர்களது பங்கு பற்றுதல் தவறாது இருக்கும். சினேகபூர்வமான உறவாடல் அங்கு காணப்படும்.

**3.தயவு காட்டுகின்ற பெற்றோர்**

தயுவுகாட்டுகின்ற பெற்றோர்கள் பிள்ளைகளின் தேவைகளுக்கு அதிக முன்னுரிமை கொள்வார்கள். கிட்டத்தட்ட பிள்ளைகளுக்கு அடங்கி நடக்கின்ற பெற்றோர்களாக இருப்பார்கள். இங்கு பிள்ளைகளின் சில பொருத்தமற்ற நடத்தைகள் கூட பெற்றோரால் விரும்பி ஏற்கப்படும் அபாயம் காணப்படும்.

**4. தலையிடாத பெற்றோர்**

தலையிடாத பெற்றோர்கள் பெரும்பாலும் தமது தேவைகளை முன்னிறுத்தி பிள்ளைகளின் தேவைகள், பிள்ளைகளின் விருத்தி என்பவற்றை கவனத்தில் எடுக்காமல் இருப்பார்கள். இந்நிலைமை பிள்ளைகளின் விருத்தியில் பாரிய எதிர்தாக்கங்களை உருவாக்கும்.

பிள்ளைகளின் மீதான பெற்றோர்களின் கரிசனை முற்று முழுதாக கட்டுப்படுத்துவதாகவோ அல்லது முற்றாக புறக்கணிப்பதாகவோ அமையாது. பிள்ளைகளின் தேவைகளுக்கும், பெற்றோர்களது இலக்குகளுக்கும் இடையில் சமநிலையை பேணுவதாக அமைய வேண்டும். பொதுவாக பிள்ளைகளின் மீதான தொடர் கண்காணிப்பு, அர்த்தமுள்ள அன்பு, பிள்ளைகளுக்கு முன்மாதிரி காட்டும் பெற்றோர் நடத்தை, பிள்ளைகள் விரும்பி ஏற்கின்ற கட்டுப்பாடுகள், பிள்ளைகளின் சுயாதீனத்தைப் பாதிக்காத கண்டிப்பு, முரண்பாடுகள் குறைவான தொடர்பாடல், பரஸ்பர மரியாதை, என்பவை தவறாத பெற்றோரிய நடையியல் பிள்ளைகளின் விருத்திக்கு உதவக் கூடியதொன்றாகும்.

**பிள்ளைகளின் கல்வி விருத்தியில் பெற்றோரியம் ஓர் திறவுக் கோல்.**

பொதுவாக கல்வியில் ஊக்கமுள்ள பிள்ளைகளிடம் பின்வரும் பண்புகள் காணப்படும். அவையாவன:

1. எதிலும் சிறப்பான கவனம்
2. சாவால்களை ஏற்று தொழிற்படல்
3. இலக்குகள் அமைத்து செயற்படல்
4. பாடசாலை பற்றிய உடன்பாடான மனப்பாங்கு
5. நேர முகாமைத்துவம்
6. சுய கற்றல்
7. அடைவுமட்டம் பற்றிய தீவிர ஈடுபாடு என்பவையாகும்.

ஆகவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கல்வியில் ஊக்குவிப்பதற்கு மேற்கண்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படல் வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி விருத்தியில் பெற்றோர்கள் ஓர் திறவுக் கோலாக அமைவதற்கு பின்வரும் வகையில் பெற்றோர்கள் முயற்சித்தல் வேண்டும்.

**1. கல்வி பற்றி பிள்ளைகளிடம் தெளிவான எதிர்பார்ப்புக்களை கட்டியெழுப்புதல் வேண்டும்.**

இதற்காக பிள்ளைகளிடம் தொடர்ந்து உரையாடுதல், அவர்களது சந்தேகங்களை தீர்த்துவைத்தல். பிள்ளைகளின் தற்போதைய கல்வி மட்டம் தொடர்பாக திறந்த மனதுடன் கதைத்தல். தமது எதிர்பார்ப்புக்கள் பற்றி பிள்ளைகளுக்கு தெரிவித்தல். பிள்ளைகளிடம் சுயமதிப்பீட்டை உருவாக்குதல் போன்ற விடயங்களில் பெற்றோர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். தேவையேற்படும் போது கடந்த காலத்தில் பிள்ளைகளின் கல்வி பெறுபேறுகளை நிகழ்காலத்துடன் ஒப்பிட்டு ஆராய பிள்ளைகளுக்கு பழக்குதல் வேண்டும். இது எதிர்கால இலக்குகளை நிர்ணயிப்பதற்கு பிள்ளைகளுக்கு உதவியாக அமையும்.

**2. பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பிள்ளைகளுக்கு உணர்த்துதல் வேண்டும்.**

பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பிள்ளைகளுக்கு உணர்த்துவதற்கு பெற்றோர்கள் தமது பிள்ளைகள் படிக்கும் பாடசாலை தொடர்பாக எப்பொழுதும் நேர்நிலை மனப்பாங்குடன் இருத்தல் வேண்டும். அத்துடன் பாடசாலைக்கு உதவுபவர்களாகவும், பாடசாலையின் செயற்பாடுகளில் பங்கேற்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இல்லாவிடின் பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி பிள்ளைகளுக்கு உணர்த்தும் பெற்றோரின் தகுதி விமர்சனத்திற்குரியதாகும்.

ஆசிரியர் கூறும்போது மட்டும் பிள்ளைகளின் கல்வியில் அக்கறைக் காட்டுவதை விடுத்து பிள்ளைகள் படிப்பதற்கென குடும்பம் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கும்போது கற்றலுக்கு குடும்பம் மதிப்பளிக்கின்றது என்பதை பிள்ளைகள் அறிந்து கொள்கின்றார்கள். எனவே தினமும் குறிப்பிட்ட நேரம் படித்தலும் குடும்ப வாழ்க்கையின் இயற்கையான ஓர் அம்சமாகி விடுகின்றது. குடும்பத்தினால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குள் செயற்படும் போது பிள்ளைகள் சிறப்பாக இயங்குகின்றார்கள் என்பது ஆய்வுகளின் முடிபாகும்.

**3. பிள்ளைகளின் பாடசாலை ஆசிரியர்களுடன் பிள்ளைகளின் கல்வி விருத்தி கருதிய நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.**

பிள்ளைகளின் பாடசாலை ஆசிரியர்களுடன் பிள்ளைகளின் கல்வி விருத்தி கருதிய நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளுவதற்காக பெற்றோர்கள் பின்வரும் விடயங்களில் கவனஞ் செலுத்துதல் வேண்டும். பொருத்தமான வசதியான சந்தர்ப்பங்களில் எல்லாம் பிள்ளையின் ஆசிரியர்களை பெற்றோர் சந்திக்க வேண்டும். பொதுவாக வருட ஆரம்பத்தில் பிள்ளைகளின் ஆசிரியர்களையும் பெற்றோர்கள் சந்திப்பதால் பின்வரும் விடயங்களில் தெளிவினைப் பெற்றோர்கள் அடைய முடியும் அவையாவன:

* பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் பற்றிய விளக்கம் பெறல்.
* கடந்த வருடத்தில் பிள்ளைப் பெற்ற பெறுபேறுகளை மேலும் உயர்த்திக் கொள்வதற்கு பெற்றோர் உதவக்கூடிய வழிமுறைகள் பற்றி அறிதல்.
* எதிர்காலத்தில் பிள்ளை கற்பதற்காக பெற்றோர் வழங்க வேண்டிய உதவிகள், கற்றல் உபகரணங்கள் தொடர்பான விடயங்களை அறிந்துக்கொள்ளல்.
* பெற்றோர்களிடமிருந்து பாடசாலை எதிர்பார்க்கப்படும் உதவிகள் பற்றிய விபரம்.
* நடப்பாண்டில் பிள்ளையின் கல்வி தொடர்பாக பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள விசேட செயற்றிட்டங்கள் பற்றிய விபரங்களை அறிதல்.

* தமது பிள்ளை தொடர்பாக ஆசிரியர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள், அபிப்பிரயாங்கள் என்பவற்றை அறிந்துக்கொள்ளல்.

* தமது பிள்ளைகளின் கல்விருத்திக்காக பாடசாலைகளும் ஆசிரியர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளல்.

* பிள்ளைக்கு பாடசாலையில் வழங்கப்படவுள்ள உதவிகள், புலமைப் பரிசில்கள் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளல் என்பனவாகும்.

*பெற்றோர்கள் பாடசாலை தவணைகளின் முடிவில் ஆசிரியர்களைச் சந்திப்பதால் பின்வரும் பயன்களை பெற்றுக்கொள்ள முடியும். அவையாவன:*

* தமது பிள்ளைகளின் அடைவு மட்டம் பற்றி அறிந்துகொள்ள முடியும்.

* தமது பிள்ளை பரீட்சைகளுக்கு முகம்கொடுக்கும்போது விட்ட தவறுகள், எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகள், பிள்ளைகளின் கவனயீனத் தால் ஏற்பட்ட தவறுகள் என்பவற்றை அறிந்து எதிர்காலத்தில் அது தொடர்பாக பிள்ளைக்கு உதவ முடியும்.

* தமது பிள்ளை பாடசாலை மட்டத்தில் இணைப்பாடவிதான செயற்பாடு களில் பங்குபற்றிய விடயங்கள் இணைப்பாடவிதான செயற்பாடுகள் தொடர்பாக கிடைத்த சந்தர்ப்பங்களை பயன்படுத்திய விதம் என்பவற்றை துல்லியமாக அறிந்துகொள்ள முடியும்.

* தமது பிள்ளை வகுப்பறையில் வெளிக்காட்டும் சமூகரீதியான, மனவெழுச்சி ரீதியான நடத்தைகளின் தன்மைகள் பற்றி அறிந்துகொள்ளல் என்பன வாகும்.

**4. கல்வி சார்பாக பிள்ளைகளுக்கு உதவுதல்**

கல்வி விருத்திக்காக பிள்ளைகளுக்கு பெற்றோர் உதவும்போது பின்வரும் விடயங்களை கருத்தில்கொள்ள வேண்டும். முதலில் பிள்ளையின் கல்வி அடைவு மட்டம் எந்த நிலையில் உள்ளது பாடசாலைச் செயற்பாடுகளில் பிள்ளை வெளிக்காட்டும் சிறப்பாற்றல்கள் எவை இடர்படும் விடயங்கள் எவை என பெற்றோர் கண்டறிந்துகொண்டால் பிள்ளைக்கு கல்வி விருத்தி தொடர்பாக மேலதிகமாக உதவுவதற்கு இலகுவாக இருக்கும். ஏனைய பிள்ளைகளோடு தமது பிள்ளைகளை ஒப்பிட்டுப் பார்த்தல் கூடாது என்னும் அடைவுமட்டம் தொடர்பாக பிள்ளையின் வகுப்பிலுள்ள ஏனைய பிள்ளைகளின் இடை வெளியை அறிந்துகொள்வதால் தமது பிள்ளையின் தற்போதைய நிலையை துல்லியமாக அறிந்து கொள்ளமுடியும்.

பிள்ளையின் அடைவு மட்டத்தினை அறிந்துகொண்டதன் பின்னர் பிள்ளைக்கு தேவையான விசேட உதவி, விசேட வழிகாட் டல்கள் பிரத்தியேக வகுப்பு தேவைகள் பற்றி பெற்றோர்கள் சிந்தித்தல் வேண்டும். வழங்க வேண்டிய விசேட உதவி, விசேட வழிகாட்டல்கள் தொடர்பாக பிள்ளையின் பாடசாலை ஆசிரியரோடும் பெற்றோர்கள் கலந்துரையாடி முடிவெடுத்தல் வேண்டும்.

பிள்ளையின் கல்வி விருத்தியில் ஒரு முக்கிய விடயமாக அமைவது பிள்ளை பின்தொடர் வேலைகளில் அக்கறையுடனும் கிரமமாகவும் ஈடுபடுதலாகும். அதாவது பிள்ளை ஆசிரியரால் பணிக்கப்படும் வீட்டுவேலைகளை ஒழுங்காக உரிய நாட்களில் செய்துமுடிக்க உதவுதல் வேண்டும்.

பாடசாலையில் பிள்ளைகளுக்கு தரப்படும் வீட்டில் செய்வதற்கான பின்தொடர் வேலைகள் மாணவர்களின் கற்றலில் மூன்றுமடங்கு தாக்கத்தை ஏற்படுத்துவதாக பெற்றோரும் கல்வியும் பற்றிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உண்மைகள், எண்ணக்கருக்கள், என்பன பற்றி மாணவர்கள் பாண்டியத்தியம் பெறுதல், அவர்களின் திறனாய்வுப்பாங்கான சிந்தனை, ஆக்கத்தன்மை வாய்ந்த மனப்பாங்குகள், பழக்கங்கள் என்பவற்றை உருவாக்குதல் தொடர்பாக, மாணவர்களைப் பொறுத்தவரையில் பாடசாலையில் வழங்கப்படும் பின்தொடர் வேலைகள் பயனுறுதி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. வீட்டில் அதிகம் கற்கும் மாணவர்கள், வீட்டுவேலைகளில் அக்கறையுடன் ஈடுபடும் மாணவர்கள் பாடசாலை கணிப்பீடுகளில், மதிப்பீடுகளில் உயர்ந்த புள்ளிகளைப் பெறுகின்றனர் என கலாநிதி ஜெரே ப்ரோபி சர்வதேச கல்வி மன்றத்தின் ஆய்வாளர் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக பிள்ளைகள் வீட்டு வேலைகளில் ஈடுபடுவதற்கு இடையூறாக இருக்கும் காரணிகளாக பெற்றோர்களின் தொலைக்காட்சி பாவனை, தொலைபேசியில் அதிகநேரம் உரையாடுதல் நண்பர்கள் உறவினர்களை வீட்டிற்கு அழைத்து அவர்களுடன் உரையாடிக் கொண்டிருத்தல் அடிக்கடி வீட்டில் விருத்துபசாரம் நடத்துதல் என்பன உள்ளடங்குகின்றன.

பிள்ளைகள் வீட்டுவேலைகளை செய்வதற்கென தனியான பொருத்தமான இடத்தை அமைத்துக்கொடுத்தல், ஒவ்வொரு நாளும் உரிய நேரத்தில் பிள்ளைகள் வீட்டு வேலைகளை செய்து முடித்தலை மேற்பார்வை செய்தல், பிள்ளைகள் இடர்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு உதவுதல் என்பன வீட்டுவேலைகள் தொடர்பாக பெற்றோர்களின் கடமையாகும்.

சில பெற்றோர்கள் பிள்ளைகள் கற்கும் பாடவிடயங்கள் பற்றிய அறிவு தமக்கில்லை தமக்கு பிள்ளையளவு அறிவில்லை என்ற காரணத்தை முன்னிட்டு பிள்ளைகளின் கல்வி விடயத்திலிருந்து ஒதுங்கியிருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமை பிள்ளைகளின் கற்றலில் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் பெற்றோர்கள் தங்களால் முடிந்தவரை பிள்ளைகளுடன் அவர்களுடைய கல்வி விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுதல் வேண்டும். அத்துடன் சில விடயங்களை பிள்ளைகளிடமிருந்து கற்கும் ஆர்வத்தை பெற்றோர் வெளிப்படுத்துவதால் பிள்ளைகளின் கற்றலை பெற்றோர்க்கு தெரிவிக்கும் விருப்பம் அதிகரிக்கும்.

படிப்பதற்காக பிள்ளைகளை அதிகாலையில் எழுப்பிவிடுதல், இரவில் பிள்ளைகள் படிக்கும் போது அவர்களின் அருகில் இருத்தல் தேவையான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்கு உணவு, பாணம் என்பவற்றை வழங்குதல்.

பிள்ளைகள் படிப்பதற்கு இடையூறுகள் ஏற்படாவிடினும் பாதுகாத்தல், பிள்ளைகள் குறிப்பிட்டளவு நேரம் மேசையில் இருந்து படிப்பதை ஊக்குவித்தல் என்பனவும் பெற்றோர்களின் கடமையாகும்.

இத்தகைய உதவிகள் பரீட்சை காலங்களில் பிள்ளைகளுக்கு மிகவும் தேவையானதொன்றாகும் நான் இரவு படித்து முடிக்கும் வரை எனது அம்மா என்னுடன் இருந்து ஏதாவது புத்தகங்கள் வாசித்துக் கொண்டிருப்பார்.

"எனது அப்பா நான் பரீட்சைகளுக்கு ஆயத்தமாகும்போது எனது மற்ற வேலைகளில் எனக்கு உதவுவார். உதாரணமான எனது சைக்கிளை துடைத்து தருதல், எனது அறையை துப்பரவுச் செய்தல்" என்பனவாகும்.

மேற்கண்ட கூற்றுகள் இரண்டு மாணவர்கள் தமது பெற்றோர்களின் கற்றலுக்கான உதவி பற்றியதாகும். பிள்ளைகளின் கல்வி விருத்தியில் பெற்றோரியம் ஒரு மறைமுக வளம். பிள்ளைகளின் பாடசாலைச் செயற்பாடுகளுடன் இணைந்து உதவுதல், பாடசாலைகளினால் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள், பெற்றோர்களுக்கு வழங்கப்படும் கடிதங்கள், அழைப்பிதழ்கள், பிரசுரங்கள், சஞ்சிகைகள் என்பனவற்றை பெற்றோர்கள் அக்கறையுடன் வாசித்தறிந்துக் கொள்ளல் வேண்டும்.

பாடசாலையின் விசேட நிகழ்வுகள், பாடசாலைக்கு பிந்திய வகுப்பு செயற்பாடுகள், விளையாட்டு நிகழ்வுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்படும் நேரம் போன்ற விடயங்களை பெற்றோர்கள் அறிந்து கொண்டால் பிள்ளைகளின் கற்றலை அதற்கேற்ப நெறிப்படுத்த முடியும். அத்துடன் பாடசாலை நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தமது பிள்ளைகளின் கற்றலை திட்டமிடவும் வேண்டிய ஒழுங்குகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

ஆசிரியரின் கற்பித்தலின் வழியாக பூரணமான நன்மைகளை அடையும் பொருட்டு மனப்பாங்கு, பழக்கவழக்கம், திறன் என்பவற்றுடன் ஒரு பிள்ளை பாடசாலைக்கு வந்தால் ஆசிரியரின் பயனுறுதிதன்மை அதிகரிக்கும். பிள்ளைகளின் கற்றல் தொடர்பான நிகழ்ச்சி நிரலை பெற்றோர் முன்கூட்டியே பாடசாலை செயற்பாடுகளுடன் இணைத்து திட்டமிடுவதால் பிள்ளையின் கல்வி பாதிப்படையாமல் பாதுகாக்க முடிவதோடு, பிள்ளையின் கற்றல் தேர்ச்சியையும் அதிகரிக்க முடியும்.

## முடிவுரை

பிள்ளைகளின் கற்றலுக்கு பாடசாலை, ஆசிரியர், நூல்கள் என்பன நேரடி வளங்களாக இருக்கும்போது பெற்றோர் முழுமையான ஒரு மறைமுக வளமாக உள்ளனர். பெற்றோர் என்ற மறைமுகவளம் பிள்ளைகளின் சிறு வயது தொடக்கம் பிள்ளைகளின் உயர்வகுப்புகள் வரை எந்நேரமும் உடனிருந்து உதவும் ஒரு வளமாகும்.

குடும்பத்தோடு கற்றல் இணையும்போது பெற்றோர்கள் கற்பிப்பவர் களாகவும், கற்றலுக்கான மனப்பாங்கினை பிள்ளைகளிடத்து தூண்டுபவர்க ளாகவும், கற்றலுக்கான வளங்களை ஒன்று திரட்டி வழங்குபவர்களாகவும், வழிகாட்டிகளாகவும் பெற்றோர்கள் மாறும்போது பிள்ளைகளின் கற்றல் உயர்மட்டத்தை அடைகின்றது. ஒன்றும் இல்லாதிருப்பதை விட கொஞ்ச மாவது இருப்பது நல்லதென்பார்கள். ஆகவே பெற்றோர்கள் பிள்ளைகளின் கற்றலில் முடிந்த வரை பங்கெடுக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் எதிர்பார்ப்பாகும்.

*56ம் பக்கத் தொடர்ச்சி*

கல்விச் செயல்முறை பல பரிமாணங்களைக் கொண்டது. கலைத்திட்டம், கற்றல் கற்பித்தல், கல்விக்குரிய உள்ளீடுகள், ஆசிரிய வாண்மைநிலை, முகாமைத்துவம், என்றவாறு பல பரிமாணங்கள் கல்விச் செயல்முறையிலே உள்ளடங்குகின்றன.

அவை ஒவ்வொன்றும் மீள்வாசிப்புக்கு உரியவை. அவை ஒவ்வொன்றி லும் உள்ளடங்கியுள்ள மேலாதிக்க மையமும், ஒதுக்கித் தள்ளப்பட்ட ஓரங்களும் நோக்கப்பட வேண்டியுள்ளன. மையங்கள் சுமந்து நிற்கும் ஒற்றை அர்த்தங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளன.

தெரிதாவின் செயற்பாடு பிரச்சினைகளை முன்வைத்தலோடு நின்று விடுகின்றது. அதற்கு மேல் அவரால் நகர முடியவில்லை. ஆனால் மார்க்சியம் பன்முகமாகிய பிரச்சினைகளைக் கண்டறியும் தருக்கத்தை முன்வைத்தது. அவற்றின் தீர்வுக்குரிய தருக்கத்தையும் முன்வைத்துள்ளது.

அடிப்படையிலே தெரிதா ஒரு பின் அமைப்பியல்வாதி. மொழி வழியான அமைப்பியல் மீது அவர் வினாக்களை முன்வைத்தார். அறிவு அனைத்தும் மொழிவழியாக ஆக்கம் பெற்ற நூலியம் என்பதே அவரின் முடிபு. மனிதருக்குக் கிடைக்கப்பெறும் அறிவு அனைத்தும் மொழி வழியாக உருவாக்கம் பெற்றவைதான். அந்நிலையில் மொழி என்பது தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் வேளை பல புதிய புலக்காட்சிகள் கல்வி நிலையிலே தோற்றம் பெறத் தொடங்கியுள்ளன.

மட்டுப்பாடுகள் பல இருந்தாலும் தெரிதாவின் கட்டுமானக் குலைப்பு அணுகுமுறை கல்வியியலிலே மாற்று வகையான தரிசனங்களை ஏற்படுத்தவல்லது.

# 40

# தேர்ச்சி மையக் கலைத்திட்டமும் அதிபர்களின் வகிபாகமும்

■ கி.புண்ணியமூர்த்தி

இருபத்தியோராம் நூற்றாண்டில், இலங்கையில் முதல் தடவையாக இடைநிலைப் பாடசாலைக் கலைத்திட்டம் சீரமைப்புச் செய்யப்பட்டது 2007ம் வருடத்திலேயேயாகும். கோளமயமாக்கத்தின் விளைவாகத் தோற்றம்பெற்ற நவீன தகவல் யுகத்தை வெற்றிகொள்ளச் செய்யும் வகையில் மாணவர்களைப் பாடசாலைகளில் ஆயத்தப்படுத்தித் தேசத்துக்கு வழங்கும் தூரநோக்கிலேயே இக்கலைத்திட்டச் சீரமைப்பு இடம்பெற்றது.

இடைநிலைப் பாடசாலைகளுக்காக இக்கலைத்திட்டத்தை அறிமுகப் படுத்தும் போது ஏற்கெனவே இருந்த பல பாடங்கள் நீக்கப்பட்டுப் புதிய பாடங்கள் சேர்க்கப்பட்டன. அத்துடன் அனைத்துப் பாடப்பரப்புக்களும் இற்றைப்படுத்தப்பட்டன. தேர்ச்சி, தேர்ச்சிமட்டம், செயற்பாடு, செயற் பாட்டுத் திட்டம் போன்ற பல புதிய பதங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. பல்வேறு மட்டங்களில், பல்வேறு அடிப்படைகளில் மதிப்பீடு, கணிப்பீட்டு முறையியல்களில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டே 2007ம் ஆண்டு தேர்ச்சி மையக் கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுவதாகக் குறிப்பிடப் பட்டது. குறிப்பாகப் பாடசாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்களது சிந்தனை, ஆற்றல் தேவையான மட்டத்துக்கு விருத்தியடையாமை, அதிலும் தர்க்க ரீதியாகவோ, ஆக்க ரீதியாகவோ, விமர்சன ரீதியாகவோ சிந்திக்க முடியாமை முக்கிய குறைபாடாகக் காட்டப்பட்டது. இதனால் பாடசாலையி லிருந்து வெளியேறும் ஒரு மாணவர் சிக்கலான சமூகத்துக்கு முகங்கொடுக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டே தேர்ச்சி மையக் கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும் இக்கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுப் பல வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் மாணவர்கள் மத்தியில் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங் கள் குறிப்பிட்ட அளவாவது ஏற்பட்டுள்ளதா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. இதற்குக் காரணம் இக்கலைத்திட்டத்தில் உள்ள குறைபாடா? இல்லை இதனை அமுல்படுத்துபவர்களின் குறைபாடா? என்பது விவாதத்துக்குரிய விடயமாக உள்ளது.

கட்டுரையாளர்
மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்

தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தினை ஒரு பாடசாலையில் வினைத்திற னுடனும், விளைதிறனுடனும் அமுலாக்குவதில் ஒரு அதிபரின் பங்கு அளப் பரியதாக உள்ளது. எனினும் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள், வரையறுக்கப் பட்ட வளங்கள், பாண்டித்தியம் குறைந்த பணியாளர்கள், வினைத்திறனோ, விளைதிறனோ அற்ற மேற்பார்வை முறைமைகள் போன்றவை காணப்படும் போது இக்கலைத்திட்டத்தினை எவ்வாறு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்துவது எனப் பல அதிபர்கள் குறைப்படுவதைக் காணமுடிகின்றது.

மாணவர்களில் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை விருத்தி செய்வதற் கேற்ற வகையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கேற்ற வகையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

இன்று மாணவர்கள் மனனம் செய்பவர்களாகவும், ஞாபகத்தில் வைத்துப் பரீட்சை எழுதுபவர்களாகவுமே செயற்படுகின்றார்கள். ஞாபகத்தை அடிப்ப டையாக வைத்தே கணிப்பீடு, மதிப்பீடு இடம்பெற்று வருகின்றது. மனனம் செய்தவற்றை மீட்பதாகவே பரீட்சை வினாத்தாள்களும் தயாரிக்கப்படு கின்றன. தரம் 1 இல் இருந்து க.பொ.த உயர்தரம் வரை இந்நிலையே காணப்படுகின்றது. நன்கு ஞாபகத்தில் இருத்தும் மாணவர்களே பரீட்சை களில் ஜெயிப்பவர்களாக உள்ளனர்.

அறிவு வெடித்துப் பிரவாகிக்கும் இக்காலகட்டத்தில் நமது மாணவர்கள் புதியவற்றைத் தேடுவதற்குப் பதிலாக இருப்பவற்றைப் பாதுகாப்பதற்கே பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். இங்கு சமயம், பண்பாடு, இலக்கியம், வரலாறு போன்றவை மாற்ற முடியாதவைகளாகும். அவற்றை அவ்வாறே பாதுகாக்க வேண்டும். எனினும் மாற்றமடையச் செய்ய வேண்டியவற்றைக் கூட மாற்றமடையச் செய்யாமல் அதே போன்றே பேணுகின்றமை வருந்தத் தக்கதாகும். புதிய, புதிய விடங்களை ஆக்குபவர்களாகவும், தம்மால் தேடியறிய முடியாதவற்றைத் தேடியறிபவர்களாகவும், தற்போது பின்பற்றுபவற்றில் பொருத்தமற்றவற்றை மாற்றியமைப்பதற்கு முயற்சிப்பவர்களாகவும் மாணவர்கள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

எதிர்காலத்துக்குத் தேவையானவற்றை இப்போதே கண்டுபிடித்தல் வேண்டும். மேலைத்தேய நாடுகளில் அதிலும் ஐரோப்பிய நாடுகளில் புதிய, புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளப் பல்வேறு ஆய்வுகள் பாடசாலை களிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. கல்வியினூடாகவே இவ்ஆய்வுகள் இடம்பெறுகின்றன. ஆனால் எமது வகுப்பறைகளில் ஆசிரியரால் மேற்கொள் ளப்படும் குழுச் செயற்பாடுகளின்போது அமைக்கப்படும் குழுக்களில் ஓரிருவர் ஆசிரியரால் வழங்கப்படும் வினாக்களுக்கு விடைகளை எழுதி முன்வைப்பதுடன் புத்தாக்கச் செயற்பாடுகள் முற்றுப்பெற்று விடுகின்றன.

தேசிய ரீதியில் எடுத்துக்கொண்டால் எமக்குத் தேவையான அனேகமான பொருட்களைப் பாடசாலைகளில் நாமே உற்பத்தி செய்ய முடியும் பாடசாலைகளைப் பண்ணைகளாகவோ, தொழிற் கூடங்களாகவோ மாற்ற

முடியும். பாடசாலைகளில் தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தினூடான மணவர்களின் புதுமையாக்கம் தொடர்பாக, ஒரு தேசிய பாடசாலை அதிபரிடம் வினவியபோது "ஒரு வேளை உணவுக்கே அல்லல்படும் மாணவர்கள் வயிற்றுக்கு உணவு தேடுவதைத் தவிர்த்து எவ்வாறு புதுமையாக்கத்தில் ஈடுபடுவார்கள்?" எனக் கேட்டார்.

மற்றொரு வகை 2 பாடசாலை அதிபர் *(Type-II)* 'பெருமளவு மாணவர்கள் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளால் துன்பப்படுகின்றனர். பெருமளவு பெற்றோர்களும் தமது குழந்தைகளின் கல்வி தொடர்பாக ஊக்குவிப்பதாகத் தெரியவில்லை. முறையான வீடுகளற்ற, நல்ல பொருளாதாரப் பின்னணி அற்ற குழந்தைகளுக்கு ஆறுதலாகப் பாடசாலை செயற்பட வேண்டும் எனவும்; கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின்போது ஆசிரியர்களால் வழங்கப்படும் வீட்டு வேலைகள் நிறுத்தப்படுதல் வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். 'முறையான ஒரு வீடு இல்லாத ஒரு பிள்ளை எவ்வாறு வீட்டு வேலைகளைச் செய்யும்?' என அவர் கேள்வி எழுப்பினார். அதனால் 'பாடசாலைகளிலேயே மேலதிக பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும். இதில் அதிபர் தற்றுணிவுடன் செயற்படுதல் வேண்டும்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேர்ச்சி மையக் கலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டபோது எத்தனை அதிபர்கள் *"SWOT"* பகுப்பாய்வு செய்தார்கள்? என ஒரு உதவிக் கல்விப் பணிப்பாளர் கேள்வி எழுப்பினார். அதாவது தனது பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், சவால்கள் என்பன தொடர்பாக எத்தனை அதிபர்கள் பகுப்பாய்வு செய்தார்கள், ஒரு புதிய கல்விச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும்போது *SWOT* பகுப்பாய்வு செய்தல் அவசியமானது என அவர் குறிப்பிட்டார்.

புதிய கலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்போது ஆசிரியர்களை அதற்கேற்ப இற்றைப்படுத்தும் பொறுப்பும் அதிபரைச் சார்ந்ததாகும். இன்று கூட தேர்ச்சி மையக் கலைத்திட்டம் பற்றியோ 5E மாதிரி பற்றியோ முறையாக அறியாத எத்தனையோ அதிபர்களும், ஆசிரியர்களும் எம் மத்தியிலுள்ளனர். எனவே முதலில் தேர்ச்சி மையக் கலைத்திட்டம் தொடர்பாக ஒரு அதிபர் பூரண விளக்கம் பெறுதல் வேண்டும். பின்னர் ஆசிரியர்களுக்கு அது தொடர்பாகப் பயிற்சியளித்தல் வேண்டும். இதற்காகக் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் ஏற்பாடு செய்தல் வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

வாரத்துக்கு ஒரு தடவையாவது ஒரு ஆசிரியருக்குத் தான் பெற்றுக் கொண்ட புதிய விடயங்கள் தொடர்பான முன்வைப்பினில் (Presentation) ஈடுபடவோ அல்லது புதிய கண்டுபிடிப்புத் தொடர்பான கருத்துக்களை முன்வைக்கவோ சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். இதற்கான முன்னாயத்தங்களில் ஈடுபட ஆசிரியர்களை ஒரு அதிபர் தூண்டுதல் வேண்டும். இவற்றை முன் வைக்கும்போது தமது சகபாடிகளின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளச் செய்தல் வேண்டும். அதேபோல் மாணவர்களுக்குத் தாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை முன்வைப்பதற்கும், தமது ஆசிரியர்களின் வினையாற்றல்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதற்கும்

சந்தர்ப்பமளித்தல் வேண்டும். இதனால் மாணவர்கள் மாத்திரமன்றி ஆசிரியர்களும் தூண்டப்படுவார்கள் என அவர் தெரிவித்தார்.

மற்றொரு உதவிக் கல்விப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கும் போது, மாதமொரு முறையோ அல்லது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட ஒரு தினத்திலோ ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையில் நேர்காணல் ஒன்றை அல்லது விவாதம் ஒன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். இதனால் மாணவர்களுக்குக் கூச்ச உணர்வு விலகுவதுடன் ஆசிரியர்களுக்கும், மாணவர் களுக்கும் சிறந்த இடைத்தொடர்பு ஏற்படும் என அவர் தெரிவித்தார்.

பெருமளவு மாணவர்கள் தமிழ் எழுத்துக்களை இனங்கண்டு எழுதுவதில் இடர்படுகின்றனர். குறைந்தது தனது தாய்மொழியில் எழுதுவதற்காவது முறையான பயிற்சிகளைப் பாடசாலையால் வழங்க முடிகிறதா? என ஒரு பெற்றார் கேட்டார். இதற்கு முழுப் பொறுப்பையும் ஒரு பாடசாலை அதிபரே ஏற்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார். தாய்மொழியே முறையாக எழுதாத ஒரு பிள்ளை ஏனைய மொழிகளை எவ்வாறு எழுதும் என அவர் வினா எழுப்பினார்? முறையாக எழுதவே பழக்காத ஆசிரியர்களுக்கு எவ்வாறு ஒரு அதிபர் வருடாந்த சம்பள ஏற்றத்துக்குச் சிபார்சு செய்ய முடியும் என அவர் வாதிட்டார்?

பொதுவாக வருடாவருடம் 50%மான மாாணவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடையாமல் வீடு செல்கின்றனர். இவர்கள் தொடர்பாக விடைகூற வேண்டியவராகவும் அதிபரே உள்ளார். ஏனெனில் அந்த மாணவர் களின் பணத்திலேயே பாடசாலை நடாத்தப்படுகின்றது. தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் கீழ் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின்போது கற்பித்தல் சந்தர்ப்பங்களைக் குறைத்து கற்றல் சந்தர்ப்பங்களை அதிகரித்தல் வேண்டும். அதற்கேற்ற வகையில் கற்றல், கற்பித்தல் முறையியல்கள் மாற்றியமைக்கப் படுதல் வேண்டும். அதேபோல் வகுப்பறைச் சூழலும் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். மதிப்பீட்டு, கணிப்பீட்டு முறையியல்களிலும் மாற்றங்கள் செய்யப் படுதல் வேண்டும். இன்றும் அனேகமான பாடசாலைகளில் விரிவுரைகளே நிகழ்த்தப்படுகின்றன. உள்ளக மேற்பார்வைகளினூடாக ஒரு அதிபர் ஆசிரியர் களில் போதனைசார் நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.

இடைநிலை வகுப்புகளுக்குக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது விரிவுரை முறையே சிறந்தது என ஒரு பிரத்தியேக வகுப்பு நடாத்தும் ஒரு பிரபலமான ஆசிரியர் குறிப்பிட் டார். தாம் பிரத்தியேக வகுப்புகளில் விரிவுரை முறையையே பின்பற்றுவதாகவும் தம்மிடம் கற்கும் பெருமளவு மாணவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் உச்ச பெறுபேறுகளைப் பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார். மாணவர்கள் பரீட்சைகளில் உச்ச அடைவுகளைப் பெறுவதையே பெற்றோரும், கல்வி அதிகாரிகளும் எதிர்பார்க்கின்றனர். சமநிலை ஆளுமையுள்ள மாணவர்கள் தோற்றம் பெறுதல் வேண்டும் என எவரும் எதிர்பார்ப்பதில்லை. சமநிலை ஆளுமை யுள்ள மாணவர்கள் சமூகத்தால் அங்கீகரிக்கப்படுவதுமில்லை. சிறந்த

சித்திகளைப் பெறுவதானால் மாணவர்கள் மாதிரி வினாக்களுக்கான விடைகளை மனனம் செய்தல் வேண்டும் எனவும், அதிகளவு குறிப்புக்களை எடுத்து அவற்றை ஞாபகத்தில் வைத்திருத்தல் வேண்டும் எனவும், அதிகளவு பயிற்சிகளைச் செய்தல் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். அதற்குத் தேர்ச்சி மையக் கலைத்திட்டம் எந்த வகையிலும் பொருத்தமாக அமையாது என அவர் வாதிட்டார் 5E முறைமையை விட சீர்திருத்தங்களுக்கெல்லாம் முன்பிருந்த முறைகள் மிகவும் பொருத்தமானவை என அவர் வாதிட்டார்.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தில் ஆசிரியர்கள் நிலை மாற்று வகிபாகம் *(Transformation)* தொடர்பாக வலியுறுத்தப்பட்ட போதும் இன்றும் ஆசிரியர்கள் கடத்தல் வகிபாகத்தையே பின்பற்றுகின்றனர். மாணவர்கள் மனனம் செய்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் போது தர உள்ளீடுகளாகப் பெருமளவுக்கு வெண்கட்டி, கரும்பலகை முறையியலே பின்பற்றப்படுகின்றது.

புதிய கல்விச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் போது அதிபரின் வகிபாகத்தில் விசேட அவதானம் செலுத்தப்படுகிறது. பாடசாலைக் கொள்கைகளையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதனூடாகவே இக்கலைத்திட்டத்தை வெற்றிய டையச் செய்ய முடியும் எனக் கருதப்படுகின்றது.

விசேடமாக இணைந்த பாடங்களுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் போது இணைக்கப்பட்டுள்ள பாடங்கள் அனைத்திலும் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர்களைத் தெரிவு செய்வது அவசியமாகும். அது தவிர இணைந்த பாடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்குத் தொடர்ச்சியான பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும். உதாரணமாக வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும், கலையும் கைப்பணியும், விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும், வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் போன்ற பாடங்களைக் குறிப்பிடலாம். உதாரணமாக வடிவமைப்பும் தொழில்நுட்பவியலும் என்ற பாடத்தில் நிர்மாணத் தொழில்நுட்பம், இயந்திர தொழில்நுட்பவியல், மின்னியலும் இலத்திரனியலும் ஆகிய பாடங்கள் உள்ளடங்கியுள்ளன. இவை யாவற்றிலும் பயிற்சி பெற்ற ஒரு ஆசிரியரே இப்பாடத்தினைக் கற்பிக்க முடியும் இவ்வாறான ஆசிரியர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருப்பதாக ஒரு அதிபர் தெரிவித்தார்.

கல்விக் கல்லூரிகளிலிருந்து கட்டுறுபயில்வுக்காக வரும் மாணவர்களுக்காக இப் பாடங்களை நாம் பாடசாலைகளில் ஆரம்பிக்கின்றோம் ஆனால் அடுத்த வருடம் அவர்கள் வராவிட்டால் அப்பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமல் அப்பாடத்தைக் கைவிட வேண்டிய சூழ்நிலை ஏற்படுவதாக வகை 1 *(Type I)* பாடசாலை அதிபர் குறிப்பிட்டார். இந்நிலையில் தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட பாடத்தைக் கற்பிக்க முடியுமா? என்பதை உறுதிப்படுத்திய பின்னரே ஒரு அதிபர் அப் பாடத்தை ஆரம்பிக்க வேண்டும்.



Computer Institute of Sri Lanka
REG: HA/04/CAO/102
SINCE 2000
V TECH
"Arise! Awake! and Stop not till the Goal is Reached."
Institute of Information Technology
VYAS
COMPUTER DIVISION
SOCIETY FOR CHARITY
A training institute registered with the Tertiary and Vocational Education Commission under P 01/0448
PROVIDE COURSES
Computer Basics
Kids Computing
Genius Kids
Graphic Masters
Web Masters
Visual Masters
3D Masters
National ICT & GIT
MS Office 2013
Type Setting
Desktop Publishing
Graphic Designing
Programming
Accounting
Hardware
Web Development
Video Editing
3D Modeling & Animation
Hardware Engineering
Software Engineering
Multimedia Engineering
Computer Engineering
Job Training
Instructor Training
LEARN NEW VERSIONS 3DS MAX, MAYA 2014
COURSE LEVELS
Basics - Certificate - Diploma - Adv. Diploma - Engineering
OUR NATION OUR DUTY
- LECTURERS -
P. Pragash B.Com.
Y. Kaarthipan Bsc. (UK)
P. Keerthi Bsc (IT)
M. Satheswararn M.M.Engr. (IT)
S. Sundareswaran Dip. in IT
S. Alageswaran Dip. in IT
S. Siva Dip. in Accounting
V TECH INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
13th YEARS
2000-2013
WE ARE PROUD TO BE SRILANKAN
309, Christy Perera Mw, Colombo-13. TP: 0115 230 717, 0115 920 717. Website: vivekananthar.org

Vivekam
Education Centre
CLEAR KNOWLEDGE IS GOD




309, Christy Perera Mawatha (Jampettah St.),
Colombo-13. TP: 0112 445 058

தொழில்நுட்பப் பாடத்துக்குரிய செயற்பாட்டறைகளை அதிபர்கள் ஏற்பாடு செய்து கொடுக்காததாலேயே தொடர்ந்தும் அப்பாடசாலைகளுக்குக் கட்டுறு பயிற்சி மாணவர்களை அனுப்ப முடியாமலுள்ளதாக கல்விக் கல்லூரி விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார். அது தவிர தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பாடங்கள் தொடர்பாகப் போதிய தெளிவற்றவர்களாகப் பல அதிபர்கள் உள்ளனர் உதாரணமாகத் தொழில்நுட்பப் பாடங்களைப் பொறுத்தவரையில் பழைய தொழில்நுட்பப் பாடங்களைப் போன்றே தற்போதைய பாடங்களையும் பல அதிபர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். புதிய பாடங்களின் உள்ளடக்கங்களைப் பற்றி எவ்வளவு தெளிவுபடுத்தினாலும் அவர்களுக்கு விளங்குவதாக இல்லை என தொழில்நுட்பப் பாடத்துக்குரிய விரிவுரையாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

5E முறையின் கீழ் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும்போது செய்முறைப் பயிற்சிகளைச் செய்வதற்கு நேரசூசியில் 80 நிமிடங்கள் ஒதுக்கப்படுதல் வேண்டும். ஆனால் அவ்வாறு ஒதுக்குவது தொடர்பாகப் பாடசாலைகளிடையே முரண்பாடுகள் காணப்படுவதாக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்ச்சி மையத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளினூடாக மாணவர்களில் பல்வேறு ஆற்றல்கள் விருத்திபெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தனது பாடசாலையில் பின்பற்றப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினூடாக மாணவர்களின் ஆற்றல்கள் விருத்தி பெறுகின்றதா? இல்லையா? என்பதை அதிபரே தீர்மானித்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிட்ட ஆற்றல் விருத்தி பெறாவிட்டால் இது தொடர்பாக யாது செய்யலாம்? என்பதையும் அவரே தீர்மானித்தல் வேண்டும். இது தொடர்பாகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். இச்சந்தர்ப்பங்களின்போது பாடசாலையில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குரிய வகை கூறலையும் அதிபரே ஏற்க வேண்டும்.

வகுப்பறைகளிலே செயற்படுத்தப்படும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போதும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் போதும் தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் அடிப்படையில் திட்டமிடுவதற்கு அதிபர் முயற்சித்தல் வேண்டும். எவ்வளவுதான் கலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுகின்ற போதும் கல்விப் பணிகளில் ஈடுபடுபவர்களதும், பெற்றோர்களதும் அடிப்படை மனநிலை மாற்ற மடையாவிட்டால் அச்சீர்திருத்தங்கள் யாவும் பின்நோக்கிய விஸ்தரிப்பாகவே அமையும்.

46

# ஆசிரியர்கள் : இணைந்து பணியாற்றுதல் – அணி நுட்பங்கள்

■ க.சுவர்ணராஜா

கட்டுரையாளர்

வவுனியா தேசிய கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

### அறிமுகம்

இணைந்து பணியாற்றுதல் என்பது ஒன்றுக்கு மேற்பட்டோர் ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக ஒண்றிணைந்து பணியாற்றுதலைக் குறிப்பதாகும். செயற்றிட்டங்கள், குழு வேலைகள், சிறப்புச் செயலணியாக இயங்குதல், அணியாக நின்று செயற்படல் என்பவற்றை இணைந்து பணியாற்றுதல் எனலாம்.

இணைந்து பணியாற்றுதல் என்பது சமூக நிறுவனங்களினதும், கல்விச் செயற்பாடுகளினதும் வெற்றிக்கு மிக முக்கியமானதாகும். இக்கட்டுரையானது பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வி விருத்திக்காக, சுய வாண்மை விருத்திக்காக இணைந்து பணியாற்றுதல் என்பதில் அணியாக நின்று செயற்படுதல் பற்றி நோக்குகின்றது.

அணியாக செயற்படல் என்பது ஒருங்கிசைந்த ஓர் அலகாக மனிதர்கள் ஒருவரோடொருவர் இணைந்து செயற்படும் ஒரு முறையாகும். அணிகளை அமைத்து செயற்படுவதில் சிறப்பானதொரு தலைமைத்துவம் அவசியமாகும். அணியாக இணைந்து செயற்படுவதால் செயற்பாடுகளின் வினைத்திறன் அதிகரிக்கின்றது.

அணி என்பது தரம் வாய்ந்த ஒரு குழுவாகும். பல்வேறு நிறுவனங்கள் பாடசாலைகள் குறிப்பான அணிகளை உருவாக்கி தமது நிறுவனத்தின் இயக்கத்தினை சீர்ப்படுத்துகின்றன. அணிகள் மூலமான நிறுவனச் செயற்பாடுகள் தரம் வாய்ந்தவையாகவும் நிறுவன உறுப்பினர்களிடையே அக ஊக்குவிப்பை விருத்தியாக்கி தரமான வெளியீட்டினை தருவதற்கு அடித்தளமிடுகின்றன. தரமான நிறுவனச் சுற்றாடலை உருவாக்குவதற்கு அணிகள் மூலமான நெறிப்படுத்துகை உதவுகின்றது.

அணிகள் நிறுவனமொன்றின் மாற்றத்திற்கான இதயமாக விளங்குகின்றன. வினைத்திறன்மிகு அணிகள் நிறுவனத்தின் அதிசக்தி வாய்ந்த இயக்கத்திற்கான குணவியல்புகளைக் கொண்டிருக்கின்றன.

அணிகள் தனியாட்களிடம் காணப்படும் ஆற்றல்கள், திறன்கள், சக்தி, அனுபவம், பெறுமானங்கள் தீர்ப்புக்கள் என்பவற்றை ஒன்று திரட்டி நிறுவனத்தின் இலக்கினை முனைப்புடன் அடைய உதவுகின்றன. அத்துடன் நெகிழ்ச்சியான முறையிலும், உற்பத்திதிறன் சார்ந்த வகையிலும் தனிமனித செயலாற்றல்களை ஒருங்குவிப்பதில் அணிகளின் தேவை இன்றியமையாததாகும்.

**ஆசிரியர்கள் இணைந்து பணியாற்றுதலில் எழும் நன்மைகள்**

ஆசிரியர்கள் இணைந்து பணியாற்றுதலில் எழும் நன்மைகள் பின்வருமாறு அமைகின்றன. அவையாவன:

* வாண்மைத்துவ விருத்தி.
* சிக்கனமாகச் செயற்படல்: பொருளாதார நன்மைகள் அதிகரித்தல்.
* வினைத்திறன்மிகு வேலை முறைமை உருவாகுதல்.
* சிறந்த வேலையனுபவங்களைப் பகிர்தல்.
* நெருக்கமான புரிந்துணர்வுடன் கூடிய தொடர்பாடல்.
* நவீனமான சமூகம் உருவாகுதல்.
* பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறுதல்.
* இணைந்த தந்திரோபாயங்கள் உருவாகுதல்.
* ஒன்றை திரும்ப திரும்பச் செய்தலை தவிர்த்தல்.
* ஆக்கதிறன் விருத்தி.
* நேரத்தை, நிதியை சேமித்தல் என்பனவாகும்.

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பாடசாலை ஆசிரியர்கள் இணைந்து பணியாற்றுவதற்கு அணிமுறைமை மிகவும் பயனுடையது. எனினும் பாடசாலைகளில் காணப்படும் பின்வரும் இயல்புகள் ஆசிரியர்கள் அணியாக இயங்குவதற்குத் தடையாக உள்ளது.

**1. பாடசாலைகளின் சீரற்ற ஒழுங்கமைப்பு**

பாடசாலைகளின் சீரற்ற ஒழுங்கமைப்பு ஆசிரியர்கள் அணியாக இயங்குவதற்கு தடையாக உள்ளன. அதிபர், உபஅதிபர், பிரதிஅதிபர் என்றவாறு காணப்படும் ஒழுங்கமைப்பில் உள்ள அங்கத்தவர்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமையின்மை, பாடசாலை தொலைநோக்கு பற்றிய வேறுபட்ட கண்ணோட்டங்கள் என்பன ஆசிரியர்கள் ஆக்கப்பூர்வமான அணியாக செயற்படுவதை தடுக்கின்றன. அத்துடன் ஆசிரியர்களிடையே பொருத்தமான தொடர்புக் கோலங்களை கட்டியெழுப்பவும் தவறுகின்றன. இதனால் ஆசிரியர்கள் அணியாக இயங்குதல் இல்லாதுபோதல் அல்லது வினைதிறன்மிகு அணியாக இயங்கமுடியாமை போன்ற விளைவுகள் ஏற்படுகின்றன.

**2. ஆசிரியர்கள் பாட நிபுணத்துவத்தோடு தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளல்.**

ஆசிரியர்கள் பாட நிபுணத்துவத்தோடு தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளல், தனித்து வகைக்கூறலைக் கொண்டுள்ளமை என்பனவும் ஆசிரியர்கள் பாடசாலையில் அணியாக நின்று செயற்படுவதில் குறைவினை ஏற்படுத்துகின்றது. ஆசிரியர்களின் வகைக்கூறலானது பெருமளவில் மாணவர்களின் அடைவுமட்டம் தொடர்பானதாக இருப்பதால் அவர்கள் தனது பாடங்களை தனித்து நின்று கற்பிப்பதில் காட்டும் அக்கறையை வேறு செயற்பாடுகளில் இணைந்து பணியாற்றும் விடயங்கள் என்பவற்றில் காட்ட முன்வருவதில்லை. பெரும்பாலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள், நிர்வாக விடயங்கள், விசேட செயற்றிட்டங்கள் என்பவற்றில் அணியாக பங்கேற்கும் ஆசிரிய நடத்தைகள் மட்டுப்பாடாகவே உள்ளன.

**3. பாடசாலை தவிர்ந்த நாட்களில் ஆசிரியர்கள் பாடசாலையுடன் கொண்டுள்ள தொடர்பு குறைவானதாக உள்ளமை**

பாடசாலை விடுமுறைகளின்போது ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பாடசாலையுடன் தொடர்பற்ற நிலையிலேயே உள்ளனர். இதனால் பாடசாலை நடைபெறும் காலங்களில் முன்வைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் அற்றுப் போகக்கூடிய நிலை உருவாகுகின்றது, அல்லது செயற்றிட்டங்களில் பங்கெடுத்த சில ஆசிரியர்கள் மட்டும் சமூகம் தந்து செயற்றிட்டங்களில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு சேர்ந்து இயங்குதல் தொடர்பான கசப்பான அனுபவங்களே கிடைப்பதால் அணியாக இயங்குவதில் நம்பிக்கை இழக்கின்றனர்.

அணி உணர்வு என்பது அறிவு, நேர்மை, அர்ப்பணிப்பு, தியாகம், புரிந்துணர்வு என்பவற்றோடு தொடர்ச்சியான தன்மையையும் பேணுவதாக அமைய வேண்டும்.

**4. ஆசிரியர்கள் வெளிக்காட்டும் தனித்த போக்கு**

ஆசிரியர்கள் சிலர் தமது திறமைகளை தம்மளவில் மட்டும் வைத்துக் கொள்பவர்களாகவும் மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்ள விருப்பம் இல்லாதவர்களாகவும் உள்ளனர். மற்றவர்களுடன் சேர்ந்து இயங்குதல் தங்களது தனித்துவத்தைப் பாதிக்கும் என்ற மனநிலையில் செயற்படும் ஆசிரியர்கள் ஏனையோர் அணியாக இயங்குவதற்கு தடையாக உள்ளனர். சில ஆசிரியர்கள் தான் வினைத்திறனுடன் இயங்கமுடியாத நிலையில் தலைமைத்துவம் மற்றும் செயற்பாட்டு அணிகளின் மீது குறைகாண்பதை வழக்கமாகக் கொண்டுள்ளதுடன், செயற்பாட்டு அணிகளை விமர்சிப்பதிலும், அணிகளை பிரிப்பதிலும் காட்டும் தீவிர நிலையும் அணிகளாக ஆசிரியர்கள் இயங்குவதற்கு தடைகளாக உள்ளன.

எந்த ஒரு நபரும் பரிபூரணமானவரல்லர். ஒவ்வொருவரிடமும் பலங்களும் பலவீனங்களும் கலந்து காணப்படுகின்றன. அணிமுறையில் ஆசிரியர்கள் இயங்குவது பலமான விடயங்களை கவனத்திற் கொள்வதாகவும் பலவீனமான விடயங்களை ஒதுக்கிவைப்பதாகவும் அமைகின்றது. அணிமுறையின் இத்தகைய போக்கு தனிநபர் கூட்டு வலிமைகளுக்கு சிறந்த பெறுபேறுகளை பெற்றுத் தருவதாக அமைகின்றது.

**5. பகிர்ந்தளிக்கப்படாத பொறுப்புக்கள்**

பாடசாலைகளில் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படாத நிலை அல்லது ஒரு சிலரிடம் மட்டும் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலை ஆசிரியர்கள் அணியாக இயங்குவதற்குத் தடையாக உள்ளன. பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதில் காணப்படும் குறைபாடுகள் ஆசிரியர்களின் சேர்ந்து இயங்குதலில் சோர்வினை ஏற்படுத்தும் காரணிகளாக உள்ளன.

எம்மோடு ஒருவர் நூறு வீதம் இணங்கிப் போனால் மட்டுமே அவரோடு சேர்ந்து பணியாற்ற முடியும் என்ற தவறான உணர்வு ஊடுருவிக் காணப்படுவதால் அணிரீதியான வேலைகள் பெரிதும் தடைப்படுகின்றன. எவரும் முழுமையான அளவில் ஒத்துழைப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. பாடசாலைகளின் பெரும்பாலான குழுவேலைகளில் தனியொருவர் ஆதிக்கம் செலுத்திக்கொண்டு தனது சிந்தனை முறையையும் அணுகுமுறையையும் குழுவின்மீது திணித்துக் கொண்டிருக்கும் நிலை அதாவது தனிநபர் முகாமைக்கு பாடசாலையின் செயற்பாடுகள் பலியாகிக் கொண்டிருப்பது அணிரீதியான ஆசிரியர்களின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளன.

**பாடசாலைகளில் ஆசிரியர்கள் அணியாக இணைந்து செயற்படுவதினால் எழும் வாண்மைத்துவ விருத்தி அம்சங்கள்.**

பாடசாலைகளில் ஆசிரியர்கள் அணியாக இணைந்து செயற்படுவதினால் பின்வரும் வாண்மைத்துவ விருத்தி அம்சங்கள் உருவாகுகின்றன. அவையாவன:

* ஆசிரியர்களுக்கிடையிலான நட்புறவு அதிகரிக்கின்றது.
* ஆசிரியர்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக பரஸ்பரம் கலந்துரையாடுவதற்கான சூழல் இயல்பாகவே கட்டியெழுப்படுகின்றது.
* ஆசிரியர்கள் தமது பிரச்சினைகள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறவும், பிரச்சினைகளிலிருந்து மீளவும் ஒருவொருக்கொருவர் உதவும் நிலை உருவாகுகின்றது.
* ஆசிரியர்கள் அணியாக செயற்படும்போது ஒருவொருக்கொருவர் முன்மாதிரியாக திகழ முடிகின்றது.
* பெரும்பாலான கற்றல்கள் ஒன்றிணைதல் மூலமே நிகழ்வதால் அணியாக இயங்குவதன் மூலம் ஆசிரியர்கள் நிறைய கற்றுக்கொள்ளும் வாய்ப்பு எற்படுகின்றது.

* அணியாக இயங்கும்போது ஆசிரியர்களிடையே சமூக உறவுகள் பலமடைகின்றன. சமூக உறவுகள் பலமடையும் போது தலைமைத்துவ ஆற்றல்கள் வழிகாட்டும் ஆற்றல்கள், பின்பற்றும் மனப்பக்குவம் என்பன செம்மையாக விருத்தியடைகின்றன.

* ஆசிரியர்கள் கறறல் - கற்பித்தல் செயற்பாடுகளை அணிமுறையில் திட்டமிட்டு செயற்படுத்துவதால் துறைசார்பான ஆற்றல்கள் ஒன்று திரண்டு ஆக்கம், புத்தாக்கம் என்பன அடங்கிய வினைத்திறன்மிகு கற்றல் கலாசாரம் உருவாகுகின்றது.

* ஆசிரியர்கள் தனித்து தமது புலக்காட்சியுடன் மட்டும் மட்டுப்பட்டிருப் பதைவிட ஏனைய ஆசிரியர்களின் புலக்காட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படல், அதாவது ஏனைய ஆசிரியர்களின் இதய உணர்வுகளுடனும், சிந்தனைகளுடனும் கலந்துச் செயற்படல் யதார்த்த நிலையினை நன்கு விளங்கிக்கொள்ள உதவும். சுய அனுபவங்களை ஏனையோரின் அனுபவங் களோடு கலக்கும்போது வெளிப்படும் பெறுபேறுகள் உயர்வானதாக அமையும்.

* ஆசிரியர்கள் அணியாக செயற்படுதல் அவர்களிடம் கற்கும் மாணவர்களி டையே, ஒன்றிணைந்து பணியாற்றும் மனப்பாங்கினை உருவாக்குகின்றது.

**ஓர் அணியில் ஒரு உறுப்பினராக செயற்படல்**

***ஓர் அணியில் ஆசிரியர்கள் ஒரு உறுப்பினராக செயற்படுவதற்குப் பின்வரும் பண்புகளை தன்னகத்தே வளர்த்துக்கொள்ளல் வேண்டும். அவையாவன:***

* தகவல்களை பரிமாறுவதற்காக அணி உறுப்பினர்களிடையே சுயாதீனமான திறந்த தொடர்பாடலை மேற்கொள்ளல்.

* அணியின் இலக்கினை நிறைவேற்றுவதற்கான ஆக்கப்பூர்வமான பங்களிப்பினை வழங்குதல்.

* அணியில் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளில் உங்களது ஆலோசனை களை தயங்காது முன்வைத்தல்.

* அணியில் தீர்மானமெடுத்தலுக்காக ஒத்துழைத்தல்.

* அணியினால் உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பணியினை உரிய காலத்தில் நிறைவேற்றுதல்.

* அணியின் இலக்கை அடைவதற்காக உங்களது நேரத்தை திட்டமிட்டு ஒதுக்கிக்கொள்ளல்.

* அணியின் புதிய அங்கத்தவர்களை விருப்புடன் வரவேற்றல், உங்களை ஆர்வத்துடன் அறிமுகப்படுத்திக்கொள்ளல்.

* அணியின் அங்கத்தவர்களுக்கு உங்களது ஒழுங்குமுறையான செயற்பாடு களின் ஊடாக முன்மாதிரியாக திகழுதல்.

* அணியின் செயற்பாடுகளின்போது வெளிப்படும் உங்களது பலம் பலவீனங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனஞ் செலுத்துதல்.

* அணி அங்கத்தவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக ஆக்கப் பூர்வமாகக் கருத்துத் தெரிவித்தல்.

* வினாக்கள் தொடுத்தல், கலந்துரையாடுதல் மூலம் அணியின் செயற்பாடுகள் பற்றிய சந்தேகங்களை தெளிவாக்கிக் கொள்ளல்.

* அணி அங்கத்தவர்களின் கருத்துக்களை உன்னிப்பாக செவிமடுத்தல்.

* அணி அங்கத்தவர்களின் பின்னூட்டல்கள் ஆலோசனைகள் என்பவை பற்றி கவனஞ் செலுத்துதல்.

* அணி அங்கத்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்.

* அணி அங்கத்தவர்களின் தேவைகள் பற்றி கவனஞ் செலுத்துதல்.

* அணி அங்கத்தவர்களுடன் இணைந்து மதிப்பிடலில் ஈடுபடல்.

என்பனவாகும்.

**ஓர் அணியில் சுயாதீனமாக இயங்குதல்**

ஓர் அணியில் சுயாதீனமாக இயங்குவதன் ஊடாகவே தன்னாலான பங்களிப்பினை அணியின் வெற்றிக்காக ஆசிரியர்கள் வழங்கமுடியும். சுயாதீனமாக இயங்குதல் என்பது பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக அமையும். அவையாவன:

* நாளாந்த செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டுக்கொண்டு நடைமுறைப் படுத்துவதோடு தினமும் ஆற்றிய செயற்பாடுகள் தொடர்பாக சுயமதிப் பீட்டில் ஈடுபடல்.

* நாளாந்த செயற்பாடுகளை முன்னுரிமை ரீதியில் அமுலாக்குதல்.

* பெரிய வேலைகளை சிறுசிறு கூறுகளாக்கி முகாமைத்துவம் செய்தல்.

* செயற்பாடுகளில் ஏற்படக்கூடிய இடையூறுகளை அறிந்து அவற்றை இழிவாக்கிக்கொள்ளல்.

* நேரத்தை பொருத்தமாக முகாமைத்துவம் செய்தல்.

* தொடர்ச்சியாக செயற்பாடுகளை மீளாய்வு செய்தல்.

* செய்து முடிக்க வேண்டிய செயற்பாடுகள், செய்து முடிக்கத் தவறிய விடயங்கள் தொடர்பாக உரிய கால அட்டவணையைத் தயாரித்து செயற்படல்.

* ஆற்றிய பணிகள் தொடர்பாக நாளந்தம் சம்பவ திரட்டு எழுதுதல்.

* செயற்பாட்டு அறிக்கைகளை உரிய காலத்தில் தயாரித்தல்.

* செயற்பாடுகளின் தரம்,பொருத்தப்பாடு தொடர்பாக சகபாடிகளின் கருத்தைக் கேட்டறிதல்.

* தேவையான செயலமர்வுகள், கலந்துரையாடல்கள் முதலானவற்றில் தவறாது பங்குகொள்ளல்.

* செயற்பாடுகள் தொடர்பாக உதவிகள் தேவைப்படுமிடத்து சகபாடிக ளிடம் தயங்காது கேட்டல் என்பனவாகும்.

**தலைமைத்துவ வகிப்பங்கு ஏற்றுச் செயற்படல்**

ஆசிரியர்கள் தாம் சார்ந்த அணிச் செயற்பாடுகளுக்கு தலைமைத்துவம் ஏற்க வேண்டிய சந்தர்ப்பங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உயரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

* அணியின் இலக்குகளை தெளிவாக அங்கத்தவர்களுடன் இணைந்து வரையறுத்தல்.

* அணி அங்கத்தவர்களுக்கான வகிபங்குகளையும், பொறுப்புக்களையும் தீர்மானித்தல்.

* அணியின் இலக்குகளை அங்கத்தவர்கள் விருப்புடன் ஏற்பதையும், தெளிவாக விளங்கிக்கொண்டதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

* அணியின் கூட்டங்களில் அணியின் முன்னேற்றம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடல்.

* அணியின் கூட்டங்களில் ஒவ்வொரு அங்கத்தவர்களினதும் செயற்பாட்டு முன்னேற்றம் தொடர்பாக புதிதுபடுத்தல்.

* உங்களது அனுபவம் ஆலோசனைகள், புதியவிடயங்கள் பற்றி அங்கத்த வர்களுடன் பகிர்ந்துக்கொள்ளல் மூலம் அவர்களது செயற்பாடுகளுக்கு உதவுதல்.

* நல்ல நடத்தைகள், தரமான செயற்பாடுகள் மூலம் அங்கத்தவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழுதல்.

* உங்களது செயற்பாடுகள் பொருத்தமானவையென அங்கத்தவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செயற்படல்.

* அங்கத்தவர்களின் செயற்பாடுகளுக்குப் படிப்படியாக 'பின்னூட்டல் வழங்குதல்.

* அடுத்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து ஊக்குவித்தல்.

* அங்கத்தவர்கள் ஒவ்வொருவரையும் தீர்மானமெடுத்தலில் பங்குக் கொள்ளச் செய்வதுடன், திறந்த மனதுடன் அவர்கள் தமது கருத்துக்களைக் தெரிவிக்க ஆர்வமூட்டடல்.

* அங்கத்தவர்களின் கருத்துக்களை முதற்தடவையிலேயே நிராகரித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

* அங்கத்தவர்கள் அணியின் செயற்பாடு பற்றிய விளக்கமில்லாத போது போதிய நேரமெடுத்து அவர்களுக்கு விளக்குதல்.
* அணியின் செயற்பாடுகளில் தீவிரமாக இருப்பதுடன் பொருத்தமான கவின்நிலையையும் உருவாக்குதல்.
* அணியின் செயற்பாடுகளை உடன்பாடான மனப்பாங்குடன் நோக்குதல்.

என்பனவாகும்.

(தொடரும்...)

64ஆம் பக்கத் தொடர்ச்சி....

3. இணையப்பாவனை

இணையம் என்பது மிகப்பெரிய கற்றல் வளம். இணையம் பற்றிய எதிர்வினைகளும் இல்லாமல் இல்லை. எனினும் இணையத்தை தகுந்த முறையில் திட்டமிட்டுப்பயன்படுத்துவதன் மூலம் அதனை வினைத்திற னுள்ளதாக்கலாம். உலகெங்கும் உள்ள தகவல்களை உங்கள் முன்வைக்கும் சாதனம். உங்களை புதிய உலகிற்கு அழைத்துச் செல்ல தயாராக இருக்கின்றது. இணையத் தளங்களுக்குள் நீங்கள் பிரவேசித்தால் இதுவரை நீங்கள் அறிந்திராத, அனுபவித்தறியாத புதிய உணர்வையும், அனுபவத்தை யும் தருவதுடன் வாண்மை விருத்தியில் தன்னம்பிக்கையையும் தோற்றுவிக் கும். தகவல்களைத் தேடுதல், தகவல்களை ஒப்பிடுதல், நேரடித் தகவல் களைப் பெறுதல், தகவல்களை இணையத் தளத்தில் பிரசுரித்தல் என்பவற்றின் மூலம் கற்றல் கற்பித்தலை மேம்படுத்த முடியும். இணையப் பாவனைக்கு இணையத்தளங்களின் முகவரிகளைப் பயன்படுத்தலாம். அல்லது தேடல் இயந்திரங்களைப் (*Google, Msn, yahoo, Ask, altavista* போன்ற) பயன்படுத்தி தேவையான தகவல்களையும், பட, ஒலி வடிவங்களையும், காணொலிக் காட்சிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் வன்பொருள் சார்ந்த கருவிகளின் உதவியுடனும், மென்பொருட்களின் உதவியுடனும், புதிய கல்வி நுட்பங்களைக் கொண்டுதான் கல்வி கற்பிக்கப்படுகின்றது. எல்லா கல்வி நிறுவனங்களிலும் புதிய கல்வி நுட்பக்கருவிகளான கணினி, தொலைக்காட்சி, வானொலிகளையும், எறிகருவிகளையும் பல்வேறு வகையான கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்துகின்றனர். தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் மூலம் சிறந்த கல்வி நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு, எளிதில் செய்திகளை கொண்டு செல்கின்றனர். இவை மாணவரின் அறிவு வளர்ச்சியில், முக்கிய அளவுகோலாக விளங்குகின்றது. இந்த கல்வி நுட்பங்களைப் பயன்படுத்தி கல்வி கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் எளியமுறையில் அறிந்து அவற்றை செயற்படுத்தவும், விரிவுபடுத்தவும் முற்படுகின்றனர்.

54

# தெரிதாவின் கட்டுமானக் குலைப்பின் கல்வியியற் பிரயோகம்

■ சபா.ஜெயராசா

கட்டுரையாளர்
கல்வியியல்துறைப் பேராசிரியர், பன்னூல் ஆசிரியர்

நவீன இலக்கியத் திறனாய்வுகளில் ஒரு முக்கியமான எழுபொருளாகக் கட்டவிழ்ப்பு அமைந்துள்ளது. ஓர் இலக்கியப் படைப்பை வாசிக்கும் பொழுது வாசிப்பவரின் அனுபவ வீச்சுக்கு ஏற்ப அர்த்தம் கொள்ளலும் வேறுபடும். அது வாசிப்பின் பன்முகப்பாடு எனப்படும்.

தமிழ் மரபிலே உரையாசிரியர்கள் தமது அனுபவ வீச்சுக்கு ஏற்றவாறு பனுவல்களுக்கு உரைகளை எழுதியுள்ளனர். வேறு வேறுபட்ட வாசிப்புக்கு அவை உதாரணங்கள். அவற்றைக் கட்ட விழ்ப்பு என்ற நவீன வரையறைக்குள் கொண்டுவர முடியாது. ஆய்வு நிலையிற் கட்டவிழ்ப்பைக் *(Deconstruction)* குறிப்பதற்குத் தமிழிலே பல்வேறு சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. "தகர்ப்பு", "கட்டுடைப்பு", "கட்டுமானக் குலைப்பு", "நிர்மாணக்குலைப்பு", "நிர்மாணச் சிதைப்பு" போன்ற பல தொடர்கள் வழக்கில் உள்ளன.

ஒரு நூலியத்தை *(Text)* வாசித்தல் பன்மை நிலைக்கு உட்பட்டது. பன்மை வாசிப்புக்கும் மேலான ஓர் அர்த்தத்தை கட்டவிழ்ப்பு என்ற எண்ணக்கரு கொண்டுள்ளமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. கட்டவிழ்ப்பு தொடர்பான நவீனமானதும், தனித்துவமானதும் மாற்று வகையானதுமான முன்மொழிவை தெரிதா முன்வைத்தார். தெரிதாவின் கருத்துப்படி கட்டவிழ்ப்பு என்பது நடுவன் நிலையை அல்லது மையத்தை உடைத்துத் தகர்த்துவிடும் செயற்பாடாகக் கொள்ளப்படுகின்றது. மையம் என்பது ஒவ்வொரு காலகட்டங்களிலும் மேலோங்கி எழுந்த கருத்தியலாகும்.

பனுவல்கள் ஒவ்வொன்றும் அவ்வாறு மேலோங்கிய கருத்தியலை மையப்பொருளாக வைத்து உருவாக்கப்பட்டிருக்கும். அவை வினாக்களுக்கும், விமரிசனங்களுக்கும் அப்பாற்பட்டவையாக நியதிப்படுத்தப்பட்டிருக்கும். அந்த மையப்பொருள் உன்னதமானதாகவும் உயர் நிலையான நம்பிக்கைக்கு உரியதாகவும் மீள வலியுறுத்தப்பட்டிருக்கும்.

நூலியங்கள் மொழியினால் ஆக்கப்பட்டவை. மொழிக்கு உன்னதவடிவம் கொடுத்தல் வாயிலாக மொழியால் எடுத்தியம்பப்படும் மையப் பொருள் உன்னத வடிவாக்கப்படுகின்றது. இந்திய மரபில் மொழியை இறைவனின் வடிவம் என்று கொள்ளும் மரபு நிலவியது. வடமொழி "தேவ பாஷா" எனப்பட்டது.

மையப் பொருளை மேன்மைப்படுத்தும் செயற்பாட்டை "மையவாதம்" என்று தெரிதா குறிப்பிடுகின்றார். நூலியங்கள் மையவாதத்தை நிறுவும் செயற்பாட்டையும் நம்ப வைக்கும் தொழிற்பாட்டையும் மேற்கொண்டு வந்துள்ளன. பெரும் இலக்கியங்களும் கலைப் படைப்புக்களும் மையவாதத்தை நிறுவி நிற்கின்றன. அவை வினாக்களுக்கு அப்பாற்பட்ட மேலான பொருட்களாக சித்திரிக்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்தை மேலும் நீட்சிகொள்ளச் செய்த மிசேல் பூக்கோ அவை அதிகாரத்தின் வடிவங்கள் என விளக்கினார்.

அதிகாரத்தைத் தாங்கி நிற்கும் அவற்றால் முன்மொழியப்படும் கருத்துக்கள் மேலோங்கியவையாக அமைந்துள்ளன. அவை அதிகார பூர்வமான அர்த்தத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும். அதனை வேறு விதமாகக் கூறுவதனால் அவை ஒற்றை அர்த்தத்தை அல்லது ஒற்றைப் பரிமாணத்தையே கொண்டிருக்கும். அத்தகைய ஒற்றைப் பரிமாணத்தை *(Single Dimension)* அல்லது ஒற்றை அர்த்தத்தைத் தகர்ப்பதே கட்டுடைப்பு அல்லது கட்டுமானக் குலைப்பு என்று கூறப்படும்.

அக்கருத்து நூலியங்களுக்கு மட்டுமல்ல நிறுவனங்களுக்கும் கல்விச் செயற்பாடுகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படத்தக்கது. கல்வி நிறுவனங்களும் கல்விச் செயற்பாடுகளும் ஒற்றை அர்த்தத்திலேதான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதாவது கல்விச் செயல்முறையானது குறிப்பிட்டவர்களுக்கு நலன் செய்யும் ஒற்றை அர்த்தத்தில் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேலோங்கியோரின் நலனை மையப் பொருளாக வைத்து ஏனையவற்றைப் புறந்தள்ளி விடுதல் மிகுந்த நுட்பமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கல்விச் செயல்முறையால் புறந்தள்ளப்படுவோர், "மற்றையோர்" *(Other)* அல்லது ஒதுக்கி வைக்கப்பட்டோராகின்றனர். இன்றைய பரீட்சை முடிவுகளிலே தாழ் அடைவுகளைப் பெறுவோர் ஒதுக்கி வைக்கப்படும் "மற்றையோராகின்றனர்". அவர்கள் ஓரங்கள் அல்லது விளிம்புகளை நோக்கித் தள்ளப்படுகின்றனர். கவனிப்பாரற்றோராக மாற்றப்படுகின்றனர்.

மையத்துக்கும் விளிம்புக்குமிடையே முரண்பாடுகள் மேலெழுந்த வண்ணமுள்ளன. மையத்தில் உள்ளோர் விதந்து பாராட்டப்படுகின்றனர். பல்வேறு விதமான வெகுமதிகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அரச மட்ட வெகுமதிகள் மிகுந்த கவர்ச்சியுடன் தரப்படுகின்றன. அந்நிலையில் மையமும் விளிம்பும் கல்விச் செயற்பாடுகளிலே தெளிவாக மேலெழுந்த வண்ணமுள்ளன.

மையத்தைத் தகர்த்தல் மொழியின் வாயிலாக நிகழ்த்தப்படக் கூடியது என்பதை தெரிதா வலியுறுத்தினார். இலக்கியம் மட்டுமல்ல குறியீடுகளால் ஆக்கப்படும் அனைத்தையும் அவர் "நூலியம்" என்ற அமைப்புக்குள் கொண்டு வந்தார். கட்டுமானக் குலைப்பில் மேலோங்கிய மையம் என்பதும் ஒதுக்கப்பட்ட விளிம்பு என்பதுமான இரண்டு முரண் நிலைகள் காணப்படுகின்றன.

மையப் பொருளாகிய ஒரு தலைப்பட்சமான கல்வி ஒருவருக்குக் கிடைக்கப் பெறும் பொழுது அதிகாரம் தமக்குக் கிடைத்துவிட்டது என்ற அகங்காரத்தையும் ஏற்படுத்தி விடுகின்றது. கல்வி நிறுவனத்தை ஒரு பிரதியாகப் பார்க்கும் பொழுது அவற்றுள் இரட்டை அர்த்தங்கள் உட்பொதிந்திருத்தலை அவதானிக்க முடியும். ஒன்று மையப்பொருள் தாங்கி நிற்கும் அர்த்தம் மற்றையது விளிம்பும் பொருள் அல்லது ஓரங்கட்டப்பட்ட பொருள் தாங்கி நிற்கும் அர்த்தம்.

தெரிதா மார்க்சியக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை. சமூக இயல்பையும் இருப்பையும் அடியொற்றியே பனுவல்களும் நிறுவனங்களும் கட்டமைப்புச் செய்தலை மார்க்சியம் தெளிவாக வலியுறுத்துகின்றது. ஆனால் தெரிதா சமூக இருப்பை நிராகரித்துவிட்டு மொழியின் இருப்பை மட்டும் கேள்விக்கு உள்ளாக்கிக் கட்டுமானக் குலைப்பு என்பதை முன்வைத்தார்.

மொழி சார்ந்த நிலையில் உருவாக்கப்பட்ட கட்டுமானக் குலைப்பு கலை இலக்கியங்களில் மாத்திரமன்றி சமூகம் தொடர்பான புலக்காட்சியிலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. சமூகத்தின் இயல்பைத் தனித்துவமான கண்ணோட்டத்தில் நோக்குவதற்குரிய மாற்றுவழி ஒன்றினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மார்க்ஸ் முன்வைத்த சமூக முரண்பாடு திட்டவட்டமான முறையில் சமூகத்தின் முழுமையான இயல்பை அடியொற்றி உருவாக்கப்பட்டுள்ளது. அதேவேளை தெரிதா "இருநிலை எதிர்ம்மை" *(Binary Opposition)* என்ற எண்ணக்கருவைப் பயன்படுத்தியுள்ளார். கட்டுமானக் குலைப்பு என்பது மட்டுப்பாடுகளுக்குரிய ஓர் அணுகுமுறை. அதேவேளை அது மாற்றுப் புலக்காட்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் நிராகரிக்க முடியாது. அனைத்தையும் ஒரேநிலையில் அல்லது ஒற்றைப் பரிமாணத்தில் நோக்கிப் பழக்கப்பட்ட கல்விப்புலத்தில் கட்டுமானக் குலைப்பு அணுகுமுறை ஒருவகையிலே தேவையாகவுமுள்ளது.

கற்பித்தலியல், கல்வி நிர்வாகம் அனைத்திலும் மாற்றுவகையான நோக்கு அவசியமாகின்றது. மாற்றுவகையான நோக்கு ஆக்கத்திறனுடன் இணைந்தது. மாற்று அணுகுமுறைகள் வளர்க்கப்படாமையால் மாணவரின் ஆக்க மலர்ச்சி பாதிப்புக்கு உள்ளாதல் கண்டறியப்பட்டுள்ளது. ஆக்க மலர்ச்சியிலே பின்னடைவை எதிர்கொள்ளல் கல்விச் செயல்முறையிலே பாரிய பின்னடைவை ஏற்படுத்தும்.

*தொடர்ச்சி 39ம் பக்கம்....*

# பயன்தரு கற்பித்தலில் வன்பொருள் அணுகுமுறை

■ சு.பரமானந்தம்

பாடசாலைச் சமூகத்தை பொறுத்தவரையில் தற்போது கலைத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்டு வரும் மாற்றங்கள் சரியாக பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்ற வினாவை எழுப்புகின்றது. அதேவேளை மரபு ரீதியான கற்பித்தல் முறைகள் மாணவர்களிடத்திலும் சமூகத்திலும் பலவிதமான பின்னடைவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் தொடர்பாடல் நுட்பவியல் குழுவினரின் அறிக்கையில் "தகவல் தொடர்பு தொழில்நுட்பம், மாணவர்களின் ஆராய்தல், பிரச்சினை தீர்த்தல், தேடுதல், முன்வைத்தல், சுயகற்றல், போன்ற திறன்களை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துவதற்கு ஒரு ஊக்கியாகத் தொழிற்படுவதாகக் குறிப்பிடப்படும். அதேவேளை பாடசாலைக் கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப உபகரணங்களின் பாவனை, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கல்வி வழங்குவது எதிர்கால சவால்களை முறியடிக்கக்கூடிய சமுதாயத்தை உருவாக்குவதற்கும் உதவும் செயன்முறையாகும்" எனக் குறிப்பிட்டுள்ளது.

கல்வித்தொழில்நுட்பம் தொடர்பான வரைவிலக்கணங்களின் அடிப்படையில், விளைதிறனுள்ள கற்றல் கற்பித்தலுக்கான முறையியல் களையும் நுட்பங்களையும் விருத்திசெய்வதிலும், கற்றல் நோக்கங்களையும் வினைத்திறனுள்ள வகையில் மாற்றீடு செய்வதற்கு வேண்டிய கற்றல் சூழலை ஒழுங்கமைப்பதற்கும், கற்றல் விளைவுகளை அளவிடுவதற்கும், அவ்வாறு அளவிடுவதற்கு வேண்டிய கருவிகளை வடிவமைப்பதற்கு வேண்டிய வழிமுறைகளையும், தொடர்பாடலுக்கான முக்கிய மொழிமூலமாகவும் தகவல் தொடர்பாடல், நவீன கற்பித்தல் (வன்பொருள், மென்பொருள்) சாதனங்கள் விளங்குகின்றன. கற்றல் செயல்முறையினை *(Style)* இருவேறு வகைக்குள்ளே கொண்டுவரமுடியுமென கொல்ப் என்பார் கற்றல் நடைமுறை இருப்பியம் பற்றி விளக்கும் போது குறிப்பிட்டுள்ளார் *(Kolb (1976) Learning Style Inventory)* அவை:

கட்டுரையாளர்
வவுனியா தேசிய கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

1. தகவல்கள் எவ்வாறு உள்வாங்கப்படுகின்றன என்பவை தொடர்பான புலக்காட்சி கொள்ளல்.

2. பெறப்பட்ட தகவல்கள் எவ்வாறு உள்வாங்கி நிரலாக்கம் செய்யப்படுகின்றது என்பது தொடர்பான செயன்முறை.

மேற்படி இரு செயன்முறைகளிற்கும் வன்பொருள், மென்பொருள் வளங்களின் பிரயோகமே முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

**வன்பொருள் அணுகுமுறை**

அறிவுறுத்தல் நோக்கங்களுக்காக இலத்திரனியல் - இயந்திரவியல் தத்துவங்களின் பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்டது. தற்போதைய நூற்றாண்டில் விஞ்ஞானத்திலும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினதும் விருத்தியின் மோதுகையின் விளைவாக இவ்வணுகுமுறை காணப்படுகின்றது. இது உயர் எண்ணிக்கையான மாணவர்களுக்குக் குறைந்த செலவில் ஆசிரியர் ஒருவர் கற்பித்தல் செயற்கிரமத்தை ஆற்றுவதற்கு இயலக்கூடியதாக்கும் ஒரு செயன்முறையாகும். அதாவது, பலபேர் செய்ய வேண்டிய வேலையை ஒருவரால் மிக இலகுவாக செயற்படுத்தி விடயங்களை பல மாணவர்களுக்கு முன்வைக்கக்கூடியதாக காணப்படும்.

வன்பொருள் உபகரணங்கள்:

1. கணினியும் அதனோடிணைந்த உபகரணங்களும்
2. எறிகருவிகள்
3. வானொலி, அதனோடிணைந்த கருவிகள்
4. படச்சுருள் எறியிகள்
5. ஒளி, ஒலிப்பதிவுக் கருவிகள்
6. மொழி ஆய்வுகூடங்கள்
7. தொலைக்காட்சி, அதனோடிணைந்த கருவிகள்
8. காணொளி முன்வைப்புக்கருவி

**வன்பொருள், மென்பொருள் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம்**

1. மாணவர்களது தனியாள் வேறுபாட்டிற்கு ஏற்ப சிந்திப்பதற்கு இடமளிக்கின்றது. அதாவது பல்லூடகங்களையும் பயன்படுத்தக்கூடிய நிலையும், ஒவ்வொருவரும் தான் பெற்றுக்கொண்ட அனுபவத்திலிருந்து புதுவிடயங்க ளைக் கற்பதற்கான வாய்ப்புக்களும் காணப்படும்.

2. ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வளங்களையும் சக்தியையும் நேரத்தையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கும், சிக்கனப்படுத்துவதற்கும் தருகின்றது.

3. தெளிவான விளக்கத்தையும் உயிரோட்டமான நிகழ்வுகளையும் பாட விடயத்திற்கு தருகின்றது.

4. வன்பொருளினதும், மென்பொருளினதும் பொருத்தமான உபயோகம் மாணவர்களுக்கு கற்றலின்பால் ஆர்வத்தையும், சுயஊக்கலையும் வழங்க உதவுகின்றன.

5. நிலைத்திருக்கக்கூடியதும் விருத்திசெய்யக் கூடியதுமான மாணவர் விருப்பபுக்களினூடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவியளிக்கின்றது.

6. கற்றல் - கற்பித்தலை கவர்ச்சிகரமாக, விளைத்திறனுள்ளதாக, ஊக்கத்தை அளிப்பதாக ஆக்க உதவுகின்றது. கற்றலுக்கு தேவையான வளங்களை மிக இலகுவாக இனங்காணவும், கண்டுபிடிக்கவும் ஏதுவான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது.

7. பாடவிடயத்தை நிஜவாழ்க்கை அனுபவங்களுடன் அல்லது உண்மைக்கு கிட்டிய அனுபவங்களுடன் மிக இலகுவாக தொடர்புபடுத்தக்கூடிய வளங்கள் காணப்படுகின்றது.

8. பாடத்தில் மாணவர்கள் பங்களிக்க தாராளமாக வளங்கள் காணப்படுவ துடன், விளைவை உடனடியாக அறியக்கூடிய மதிப்பீட்டு முறைகளும், சில சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டின் பின்பான பின்னூட்டல்களும் உடனடியாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது.

9. சிந்தனை, எண்ணக்கரு, பிரச்சினைத் தீர்த்தல் ஆகிய அறிவுசார், கல்விசார் செயலொழுங்குகளை நோக்கி மாணவர்களை வழிப்படுத்தவும் அதில் உறுதிப்படுத்தவும் உதவுகின்றது.

10. கற்றல் அனுபவங்களை, கருத்துள்ளதாகவும், வினைத்திறன் உள்ளதாக வும் மாற்றி, கற்றல் அனுபவங்களை சமூகச் செயற்பாட்டுகளுடன் தொடர்புபடுத்த உதவும்.

வகுப்பறைச் செயற்பாடுகளின் போது வாய்மொழிச் செயற்பாடுகளி னூடாக மட்டும் மாணவர்களின் கவனத்தைப் பேணுதல் சிரமமான விடயமாகும். இதனால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், வினைத்திறன் குறைந்துபோக சந்தர்ப்பம் உண்டு. ஆனால் கல்வித் தொழில் நுட்பத்தை உபயோகிப்பதனால் பல நன்மைகளை அடைவதுடன், கற்றல் கற்பித்தலில் மேலும் வினைத்திறனை அதிகரிக்கலாம். எனினும் இவ்வாறான கருவிசார் வளங்களைப் பயன்படுத்துவதில் வளம் குறைந்த பாடசாலைகளில் சில பிரச்சினைகளை எதிர்நோக்கலாம். எனினும் ஒரு வகுப்பறையை வானொலி, தொலைக்காட்சி, கணினி, பல்லூடாக எறிகருவி, தலைமேலெறி கருவி போன்ற உபகரணங்களை ஒரு அறையில் ஒழுங்குபடுத்தி அவற்றினைப் பாவிப்பதற்கு வழிப்படுத்துவதன் மூலம் படிப்படியாக பாடசாலை மட்டத்தில்

உபகரணப் பாவணையை மேம்படுத்தலாம். இவ்வுபகரணங்களின் பயன்பாடு பற்றிய அறிமுகம் இக்கட்டுரையில் முன்வைக்கப்படுகின்றது.

**வானொலி, ஒலிப்பதியி**

*1920* இல் கேட்டல் கருவிகளும், *1920* இற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் திரைப்படமும் கல்வியில் பயன்படத் தொடங்கின. வானொலி கல்வி நிகழ்ச்சி கள் என்று தனியொரு நிகழ்ச்சி குறிப்பிட்ட காலங்களில், ஒலிபரப்பப்படு கின்றன. ஆசிரியர் வகுப்புக்களில் கற்பிக்கும் பாடங்களை வலியுறுத்தவும், தெளிவுபடுத்தவும் இவை பயன்படுகின்றன. கல்வி ஒலிபரப்பின் முக்கிய நோக்கம், மாணவர்களை உற்சாகப்படுத்தி மேலும் சரியான கருத்துக்களை தெரிந்துகொள்ளச் செய்வதாகும். நாடகங்கள், கதைகள், கவிதைகள், ஒப்புவித்தல், புத்தகங்களில் இருந்து படித்தல், மற்றும், இனிமையான இசை ஒலித்தல் முதலியன மாணவர்களின் மன வளர்ச்சிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வழிசெய்கின்றன.

**வானொலிப் பயன்பாடு:**

அவதானிப்புத்திறன், பேச்சுத்திறன், உச்சரிப்பு, நேர்காணல், தகவல் சேகரிப்பு, இசை, தாளம், நடனத்துக்கான பாடல்இசை, நேரடி ஒலிபரப்பு, விபரிப்பு, பிறமொழிச் செய்திகள், வானொலி நிகழ்ச்சிகள், பேச்சசுகள், செய்திகள், பாடல்கள், நாடகங்கள், வினாவிடைப்போட்டிகள், விவாதங்கள் போன்றவற்றினை கற்றல் சந்தர்ப்பங்களுக்குப் பயன்படுத்தல். அதாவது மேற்படி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் போது நேரடியாக மாணவர்களை கேட்க வழிப்படுத்தலாம். அல்லது அவ்வாறான நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து தேவையான போது அவற்றைப் போட்டுக்காட்டலாம். அத்துடன் உயிரினங்களின் ஒலிப்பதிவு செய்து தேவையானபோது அவற்றைப் போட்டுக்காட்டலாம்.

அத்துடன் உயிரினங்கள் ஒலிகள் (காலையில், பகலில், மாலையில் - மனிதன், குழந்தைகள், பறவைகள், விலங்குகள், பிராணிகள்) சமூகத்தில் தொழிலில் ஈடுபடுவோரின் ஒலிகள் (அங்காடி வியாபாரிகள்) இயற்கையி னால் உருவாகும் ஒலிகள் (புகையிரதம், விமானம்), சமூகநிறுவனம், அமைப்புக்களில் இருந்து வரும் ஒலிகள் (வணக்க ஸ்தலங்கள், தொழிற்சாலைகள்) போன்ற ஒலிகளை ஒலிப்பதிவு செய்து மாணவர்களுக்கு போட்டுக்காட்டுவதன் மூலம் மாணவரிடையே கற்றலின் அளவை மேம்படுத்தலாம். இச் செயற்பாடானது மாணவரின் மொழிசார்ந்த நுண்மதி, எண்சார்ந்த நுண்மதி, சங்கீதம் சார்ந்த நுண்மதி, ஆள்சார்ந்த நுண்மதி (சுயவிளக்கம், சுய பிரதிபலிப்பு), ஆளிடைத் தொடர்புசார் நுண்மதி, இயற்கைசார் நுண்மதி எனப் பல்வேறு வகையான நுண்மதித் திறன்களுடன் கற்றலைத் தொடர்புபடுத்த உதவுகின்றது. உதாரணமாகப் பாடல் ஒன்றினைப் போட்டுக்காட்டுவதன் மூலம் அப்பாடலிலுள்ள மொழி, இசை, பாடலின் கருத்துக்கள், கருத்துள்ள தனிச்சொற்கள், வினைச்சொற்கள், பெயர்ச்சொற்கள்,

கணித எண்ணக்கருக்கள், பாடுபவரின் எண்ணிக்கை, பாடல் வரிகளின் எண்ணிக்கை, சத்தங்கள், கருவிகளின் இசைகள் எனப் பல்வேறு வகையான விடயங்களை மாணவர்களிடத்தில் கற்றல் செயன்முறைக்காக வழிப்படுத்த லாம். கற்றலின் நோக்கத்தையும், பாடவிடயத்தையும் பாடலோ அல்லது வேறு நிகழ்ச்சிகளுடனோ தொடர்புபடுத்தும் ஆற்றல், ஆசிரியரின் இயலுமை, புத்தாக்கச் சிந்தனை, அர்ப்பணிப்பு, தியாகம், உபகரணப்பாவனை தொடர்பான ஆர்வம் போன்ற பண்புகளிலேயே தங்கியுள்ளது. மொழி ஆய்வு கூடங்களில் இவற்றின் பயன் அதிகமாக உள்ளது. பேச்சுத்திறனில் பயிற்சி அளிக்கவும், உச்சரிப்புக்களைத் திருத்தவும் இவை பயன்படுகின்றன.



**தொலைக்காட்சி:**

கல்வியியல் பயன்படுத்தக்கூடிய மிகவும் பிரபல்யமான சாதனங்களில் தொலைக்காட்சியும் ஒன்றாகும். மாறிவரும் ஆசிரியர் வகிபங்குகளில், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும், செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. கட்புல செவிப்புல சாதனமாக இருப்பதுடன், அசையும் படங்களையும் பார்க்கக் கூடியதாக இருப்பதனால், மாணவரிடையே தொலைக்காட்சி பெரிதும் விரும்பப்படுகின்றது. அதாவது கண், காது ஆகிய இருபுலன்களையும் தூண்டுவதனால் இவை சிக்கலான எண்ணக்கருக்கலையும், செயற்பாடு களையும் மிக இலகுவில் விளங்கக்கூடியதாக உள்ளது. பெரும்பாலான ஆசிரியர்கள் தொலைக்காட்சியினை ஒரு சவாலாகப் பார்க்கின்றனர். இவற்றை எவ்வாறு திறமையாகவும் தொடர்புடையதாகவும், முறையான தகவல்களுடன் பயன்படுத்தலாம் என்று திட்டம் அவசியமாகின்றது. தொழில்நுட்ப வளர்ச்சியில் செவிப்புலன் என்ற ஒருவழிச் செயற்பாட்டில் மட்டும் நிகழ்ந்துவந்த கல்வியை ஐம்புலன்களின் செய்பாட்டிற்கும் மாற்றம் செய்ய இக்காட்சிக் கேள்விக்கருவிகள் பெரிதும் உதவின. இதன்மூலம் மாணவர் சலிப்படையாது உயிரோட்டமான அனுபவம்சார் கல்வியைப் பெறவழி ஏற்பட்டது.

**தொலைக்காட்சிப் பயன்பாடு**

வானொலிப்பயன்பாடு கேட்டலோடு மட்டும் தொடர்புடையது. இங்கு கேட்டலுடன் பார்த்தல் செயன்முறையும் காணப்படுவதால் மனவெழுச்சிகள் தூண்டப்பட கற்றலின் அளவு அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. அதாவது மாணவர்களினால் உண்மைக்கு மிகக் கிட்டிய அனுபவங்களைப் பெறக்கூடியதாகவுள்ளது. வானொலியைப் பயன்படுத்தக்கூடிய பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொலைக்காட்சியையும் பயன்படுத்தலாம். அதனால் அதனை இங்கு திரும்பவும் குறிப்பிடாமல், தொலைக்காட்சியைப் பயன் படுத்தி கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், எட்டுவகையான நுண்மதி திறன்களுக்கும் ஏற்ப கற்றல்- கற்பித்தல் சூழல் கட்டியெழுப்பப் படுகின்றது. கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பொறுத்தளவில் குறிப்பாக தொலைக்காட்சியை நான்கு வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. நேரடியாக ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை மாணவருக்கு போட்டுக் காட்டுதல்.

2. ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை பதிவு செய்து மாணவருக்குப் போட்டுக்காட்டுதல்.

3. ஆசிரியரினால் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகளை மாணவருக்குப் போட்டுக்காட்டுதல்.

4. கல்வி நிறுவனங்களினாலும். ஏனைய நிறுவனங்களினாலும் தயாரிக்கப் பட்ட ஒளி நாடாக்கள், இறுவட்டுக்களைப் போட்டுக்காட்டுதல்.

பல்வேறு வகையான ஒளிநாடாக்களும், இறுவட்டுக்களும் தற்போது பெருமளவில் வெளிவருகின்றன. அவற்றைக் கொள்வனவு செய்து வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு கற்றலுக்காக தொலைக்காட்சியைப் பயன்படுத்தும்போது ஆசிரியரின் முன்ஆயத்தம் அவசியமாகும். முன்பு குறிப்பிட்டது போல கற்றலின் நோக்கத்தையும், பாடவிடயத்தையும் தொலைக்காட்சி அல்லது வீடியோ அல்லது இறுவட்டு நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தும் ஆற்றல், ஆசிரியரின் இயலுமை, புத்தாக்கச் சிந்தனை, அர்ப்பணிப்பு, தியாகஉணர்வு, உபகரணப்பாவனை தொடர்பான ஆர்வம், வளங்களின் கிடைப்பளவு போன்ற பண்புகளிலேயே தங்கியுள்ளது.

**தலைமேறி கருவி: கற்றல் மாதிரிகளைத் தயாரித்தல்**

நவீன கற்றல் - கற்பித்தல் துணைச் சாதனங்களில் மிக எளிமையானது, கட்புலச்சாதனமாகும். பாவிப்பதற்கு மின்சாரம் தேவைப்படினும், இது இலகு தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டது. இரண்டாம் நிலைக்கல்வி நவீன மயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் *(SEMP-Secondary Education Modernization Project)* அரசாங்கம் சகல 2 ஆம் நிலைப் பாடசாலைகளுக்கும் *OHP* யினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

முதலில் என்ன பாடத்தை முன்வைப்பது, எத்தனை ஒளிபுகவிடு தாள்களைப் பயன்படுத்துவது, எவ்வாறு தயாரிப்பது போன்ற விடயங்களை ஆசிரியர் திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும். ஒளிபுகுவிடு தாள்களை எவ்வாறு தயாரிப்பது, OHP பாவனை தொடர்பில் சில விடயங்களை நோக்குவோம். இச் செயற்பாடுகளின் வெற்றியும் பயன்தருமளவும் ஆசிரியரின் ஆளுமை, தனித்துவப் பண்புகளிலேயே தங்கியுள்ளது.

1. தேவையான விடயங்களை OHP பேனையால், எழுதுவது, போட்டோக் கொப்பி எடுத்தல், கணினியில் *Print* எடுத்தல் என 3 வகையாக ஒளிபுகவிடுதாள்களை தயாரித்துக் கொள்ளலாம்.

2. நிழற்பயன்பாடு மூலம் மாதிரியுருக்களை, பல்வேறு கோலங்களைப் பெறுதல் (உ + ம்: பிறிஸ்ரல் அட்டையில் வெட்டப்பட்ட பல்வேறு

வகையான உருவங்கள், வட்டம், சதுரம், பிளாஸ்ரிக் வடிவங்கள், குச்சிகள், நூல்கள், கை அசைவுகள், சிறிய தாவரத்தின் பகுதிகள், போன்வற்றினை OHP யின் கண்ணாடி மேடையில் வைத்துப் பயன்படுத்தி ஆக்கிக் கொள்ளலாம்).

3. மேற்பொருந்துகை *(Overly)* நுட்பத்தின் மூலம் ஒன்றிற்கு மேற்பட்ட ஒளிபுகவிடு தாள்களைப் பயன்படுத்தி கற்றல் மாதிரிகளை உருவாக்கலாம். (உ +ம்: சமவுயரக் கோட்டுப் படங்கள், தரைத்தோற்றம், நாடுகளின் பிரிவுகள்)

4. மெல்லிய அசைவுகளை ஏற்படுத்துவதன் மூலம் உயிர்ப்பான மாதிரிகளை காட்டலாம். (உ +ம்: நூல், சிறிய பூச்சிகள் (ஆபத்தற்ற) எறும்புகள்)

5. ஒளிபுகவிடும் கண்ணாடி, பிளாஸ்டிக் பொருட்களுடன் இணைத்து முப்பரிமாண மாதிரிகளை ஆக்கலாம். (உ +ம் : கண்ணாடி குவளை யொன்றினை வைத்து திரவங்களில் நிறமாற்றத்தினை பரமங்கனேற்றைப் போடும் போது ஏற்படும் மாற்றம்)

6. சிறிய, சிக்கலான சிக்கலான படங்களை பெரிய படங்களாக உருப் பெருப்பித்துக் கீற இதனைப் பயன்படுத்தலாம். (உ +ம்: கரும்பலகையில், சுவர்களில், தேவையான இடங்களில்)

**கணினி:**

இலங்கைப் பாடசாலைகளில் கணினிக் கல்வியுடன், கணினியை எவ்வாறு கற்றல் கற்பித்தலுக்குப் பயன்படுத்தலாம் என்ற விழிப்புணர்வும் செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இரண்டாம் நிலை கல்வி நவீனமயப்படுத்தல் செயற்றிட்டத்தின் கீழ் 2000 பாடசாலைகளுக்கு கற்றல் வள நிலையங்கள் *(LRC - Learning Resourse Centre)* ஒவ்வொரு வலயங்களுக்கும் கணினி வளநிலையங்களுக்கும், *(CRC- Computer Resource Center)* 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு இணைய வலையமைப்பு வசதிகளும் *(Schoolnet Project)* செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை ஆசிரியருக்கு தேவையான கணினி அறிவை வழங்குவதில் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது. இதன் செயற்றிறன் தொடர்பான ஆய்வுகளுக்கு அப்பால் இச்செயற்றிட்டத்திற்கு வழங்கப்பட்டுவரும் முக்கியத்துவம் ஆசிரியர்கள் கணினி அறிவை பெறவேண்டுமென்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.

தனிமனிதன் கல்வி கற்றுக்கொள்ளவென்று 50ற்கு மேற்பட்ட வழிமுறைகள் கையாளப்படுகின்றது. அதாவது ஒவ்வொருவரும் கற்றுக்கொள் ளும் விதம் வித்தியாசமானது.

1. சிலருக்கு வாசித்தால் நிறையக் கற்றுக்கொள்ள முடியும்.
2. சிலருக்கு கவனமுடன் கேட்கவேண்டும்.

3. சிலருக்கு மற்றவர் செய்வதை பாரத்து கற்க வேண்டும்.

4. சிலருக்கு தாங்களே செய்து பார்த்து புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த முறைகளால் தான் நாமும் கற்றுக்கொள்ளுகின்றோம். கணினியைப் பொறுத்தளவில் மேற்சொன்ன 4 முறைகளிலும் கற்கக்கூடிய வசதிகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதாவது மென்பொருட்கள் மூலமாகவும், இணையம் மூலமாகவும் நாம் விரும்பிய முறைகளில் கற்பிக்கவோ, கற்றுக்கொள்ளவோ முடியும்.

கணினியானது கேட்டல், பார்த்தல், செய்துபார்த்தல் என ஐம்புலன்களையும் கற்றலிலும் காணப்படுகின்றது. கணினியின் வருகையானது கற்றல் கற்பித்தலில் விவரணமுறை, கண்டறிமுறை, சுயகற்றல் முறை, தொலை ஒத்துழைப்புக்கற்றல், பிரச்சினை தீர்த்தல் என பல கற்றல் கற்பித்தல் செயன்முறைகளில் தாக்கம் செலுத்தி வருகின்றது. இங்கு கற்றல் சந்தர்ப்பங்களில் எவ்வாறான செயற்பாடுகளை கணினியைப் பயன்படுத்தி மேற்கொள்ளலாம் என்பது தொடர்பாக சில விடயங்கள் மட்டும் குறிப்பிடப்படுகின்றது.

**1. மென்பொருட்களின் பாவனை:**

இங்கு மென்பொருட்களில் முக்கியமாகக் கொள்ளப்படுவது *Presentation Software* ஆகும். அதாவது *Power point* மூலம் தகவல்களை மாணவர்களுக்கு முன்வைக்கலாம். அதேபோல சில *Word, Pagemaker, Spread Sheet , Access* போன்ற மென்பொருட்கள் மூலம் மாணவர்களுக்கு தேவையான கற்றல் மூலங்களைத் தயாரிப்பதற்கும், மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரிப்பதற்கும், வகுப்பறை முகாமைத்துவ கருமங்களிற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். பொதுவாக *Word* மூலம் ஆங்கில பாட போதனைக்கு பல வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**2. இறுவட்டுக்களின் பாவனை**

இன்று பல்வேறு வகையான கல்வியியல், விளையாட்டு, விநோத நிகழ்ச்சிகள், கலைக்களஞ்சியங்கள், சினிமாபாட்டுக்கள், புதிர்க் கணக்குகள், விண்வெளிப் பயணங்கள், புவியியல், விஞ்ஞானம், இயற்கை வளங்கள் எனப் பெரும்பாலும் எல்லாத் துறைகளுடனும் தொடர்புடைய இறுவட்டுக்கள் வெளியிடப்படுகின்றன. இவற்றினைப் பயன்படுத்தி மாணவரின் கற்றலுக்கு, சுயகற்றலுக்கும் மாணவரை வழிப்படுத்தலாம்.

தொடர்ச்சி 53ஆம் பக்கம்...

# நமது பிரச்சினைகளுக்கு ஆசிரியத்தில் தீர்வுகள்...

■ அன்பு ஜவஹர்ஷா

கடந்த பல மாதங்களாக ஆசிரியத்தில் நூற்றுக்கு மேற்பட்ட உங்களது பிரச்சனைகளுக்கு விடையளிக்கப்பட்டுள்ளது. முதல் முறையாக கடந்த இதழில் முதலாவது, ஐந்தாவது வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விளக்கம் தொடர்பாக பலர் கருத்து தெரிவித்துள் ளார்கள். வினாக்களையும் தொகுத்துள்ளார்கள். இது வரவேற்கத் தக்க விடயமாகும். ஆசிரியர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக விழிப்புணர்வு பெற்று இயங்க வேண்டும் என்பதே இந்த பகுதியை தொடர்ந்து செய்யும் பிரதான நோக்கமாகும்.

கடந்த இதழில் இடம்பெற்ற முதலாவது வினாவிற்கான பதிலில் கல்வி பின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றமையால் 2-II தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்ட ஒருவர் முதல் நியமனம் தொடக்கம் 2-II பதவி உயர்வு வரை உழைத்துக்கொண்ட புள்ளிகள் 2-I தர பதவி உயர்வின் போது கருத்தில்கொள்ளப் படும் என கூறப்பட்டு இருந்தது.

கல்வியமைச்சின் சுற்றறிக்கைகள், விளக்கக் கடிதங்கள், வலயக் காரியாலயங்களுக்கு அனுப்பப்படும் தனிப்பட்ட கடிதங்கள் போன்ற வற்றின் அடிப்படையிலேயே இவ்விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் முன்சேவைக் காலம் அடுத்த பதவிஉயர்வுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. பட்டதாரி ஆசிரியர்கள் கல்வி டிப்ளோமா சான்றிதழைப் பெற்றபடியால்தான் 2-II தர பதவி உயர்வை பெற்றுக் கொண்டுள்ளார்கள். இவர்களின் உழைத்த சேவைக் காலத்தின் அடிப்படையில் இது வழங்கப்பட வில்லை. ஆகவே கவனத்தில் கொள்ளாத இந்த சேவைக் காலத்தை கணக்கில் எடுத்து 2-I தர பதவி உயர்வை பல வலயங்கள் வழங்கியுள்ளன.

2000.03.27 திகதிய 2000/14 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் 05ஆம் பக்கத்தில் உள்ள 'C' என்ற உதாரணத்தில் இதற்காக ஏற்பாடு உள்ளது.

95.01.01 தொடக்கம் உழைத்துக்கொண்ட புள்ளிகள் என்ற வாசகமே குழப்பத்தை உண்டாக்கியுள்ளது.

இந்த இதழில் வெளியாகியுள்ள "வெளியிடப்படாத சுற்றறிக்கை இடைநிறுத்தம்" என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள 2010/38ஆம் இலக்க சுற்றறிக்கையில் உள்ள பல உதாரணங்களில் இவ்வாறு புள்ளி வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட் டுள்ளது. முன்னாள் கல்வி அமைச்சர் ஆசிரியர்களின் கேள்வி களுக்கு "ரவிர" என்ற வாரப்பத்திரிகையில் அளித்த பதில்களில் இவ்வாறு புள்ளிகளை கணக்கில்கொண்டு வழங்கலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. இவைகளை அடிப்படையாகக் கொண்டே அந்தக் கேள்விகளுக்கான பதில் வழங்கப்பட்டது.

வலயக் கல்விக் காரியாலயங்கள் இவ்வாறு புள்ளிகளை கணக்கில் எடுத்து பதவி உயர்வு வழங்க மறுத்தால் ஆசிரியர் தாபனப் பிரிவுக்கு கல்வி அமைச்சில் பொறுப்பாக இருக்கும் சிரேட்ட உதவிச் செயலாளருக்கு விண்ணப்பம் செய்தே நிவாரணம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**?** *தொழிற்றகைமை மிக்க விஞ்ஞான பட்டதாரிகளுக்கு முதல் நியமனம் பெற்றது தொடக்கம் இரண்டு புள்ளிகளை வருடமொன்றுக்கு வழங்கி பதவி உயர்வு வழங்கலாம் என அட்டவணையோடு கடந்த மாதம் தினக்குரலில் எழுதியிருந்தீர்கள். எமது கல்வி வலயம் சிறப்பு பட்டதாரிகளுக்கே அது உரியது நீங்கள் பொதுப்பட்டதாரி என்ற வகுதிக்குள்ளேயே வருகின்றீர்கள். அவ்வாறு புள்ளி வழங்க முடியாது என மறுக்கின்றார்கள். 1984.08.05 தொடக்கம் என்னுடன் நியமனம் பெற்ற பலருக்கு நீங்கள் எழுதியுள்ளவாறு உள்ளீர்ப்பு நடைபெற்று பதவி உயர்வு கிடைத்துள்ளது. இது தொடர்பாக தெளிவாக சுற்றறிக்கை எதுவும் உண்டா?*

1982.01.01 தொடக்கம் செயல்படுத்தப்பட்ட 197 இலக்கம் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையிலேயே விஞ்ஞான/ கணித பட்டதாரி ஆசிரியர்கள் விசேட பட்டதாரி ஆசிரியர்களாகக் கொள்ளப் பட்டு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. 01.01.1985 முதல் செயல்படுத்தப் பட்ட தயாரத்ன சம்பள மாற்றத்தின்படியும், 327, 387(iv) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் படியும், சிறப்புப் பட்டதாரிகளுக் கான 11-04 இலக்க வகுதி சம்பளமே விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. 1994.10.06 திகதிக்கு

முன்னர் நீங்கள் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்று இருந்தால் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 37/92 இலக்கத்தின்படி கல்வியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமாவுடன் கூடிய சிறப்பு பட்டதாரிகளுக்கான 11-5 வகுதிச் சம்பளம் உங்களுக்குரியது.

ஆகவே 1994.10.06 முன்னர் சேவைக் காலத்து வருடமொன்று 2 புள்ளிகள் உங்களுக்கு வழங்கப்பட வேண்டும். 2005.05.19 திகதியிடப் பட்ட 2005/4 இலக்கச் சுற்றறிக்கையில் 02(v) பிரிவில் இதற்கான ஏற்பாடு உள்ளது. இதைவிட மிகத் தெளிவாக 2006.03.21 அன்று கல்வியமைச்சால் வெளியிடப்பட்ட 2005/04 இலக்கச் சுற்றறிக்கை யைச் செயற்படுத்துவதற்காக பொது ஆலோசனைக் குறிப்பில் 1:3 பிரிவில் பின்வருமாறு மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1994.10.06ஆம் திகதியன்று சேவையிலிருந்த விஞ்ஞானம்/ கணிதம்/ விவசாயம்/ ஆங்கிலம் மற்றும் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா ஆசிரியர்கள் அன்று கௌரவ பட்டதாரி தரத்தில் சம்பளம் பெற்றவர்களாவர். 2005/04 சுற்றறிக்கைக்கு அமைய அவர்களது உள்ளீர்ப்பு செயற்பாடு மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டியுள்ளது. இதனடிப்படையில் இவர்களை 97/5 இலக்க சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளுக்கமைய கௌரவ பட்டம்பெற்ற ஆசிரியர்களாகக் கருதி மீண்டும் உள்ளீர்ப்பு செய்ய வேண்டியதுடன் அது தொடக்கம் அவ்வவ் ஆசிரியரின் பதவி உயர்வுகள் மீண்டும் மறுசீரமைக்கப்பட வேண்டு மென்பதைக் கருத்தில் கொள்ளவும்.

மேல்சொல்லப்பட்டவாறு சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கும்போது 1991ஆம் ஆண்டு கல்வி டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுள்ளபடியால் அவ்வாண்டே 2-I தரத்தில் உச்ச புள்ளிக்கு வந்து விடுவீர்கள். இதனடிப்படையில் 1994.10.06 தொடக்கம் முதலாம் வகுப்பு பதவி உயர்வு வழங்கப்பட்டு 1,09,800 சம்பள படிநிலையில் வைக்கப்பட வேண்டும். பல கல்வி வலயங்கள் 97/5 இலக்கச் சுற்றறிக்கையிலேயே தொங்கி நிற்பதால் நூற்றுக்கணக்கான வர்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள். நான் அடிக்கடி குறிப்பிடுவது போல வலயக் கல்விக் காரியாலயத்தில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்களோ நிர்வாக உத்தியோகஸ் தர்களோ இறுதி முடிவை எடுப்பவர்கள் அல்ல. சரியான கோரிக்கைக்கு செவி சாய்க்க மறுத்தால் முறையிட எத்தனையோ மேலிடங்கள் உண்டு. உரிமைகளை வென்றெடுக்க பூரண விளக்கமும் துணிவும் ஆசிரியர் களுக்கு வேண்டும். மேல்சொல்லப்பட்ட சுற்றறிக்கையில் கௌரவ பட்டதாரிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்புப் பட்டதாரி களையே ஆகும்.

? *1979.04.20 அன்று தராதரப் பத்திரமற்ற ஆசிரியராக நியமனம் பெற்ற நான் 1987.03.01 தொடக்கம் செயல்படும்படியாக ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றுள்ளேன். இன்று முதலாம் வகுப்பில் 2013.03.01 தொடக்கம் 27,450 ரூபா சம்பளம் பெற்று வருகின்றேன். இது சரியான சம்பளமா?*

உங்களுக்கு 1998.03.01 முதல் இலங்கை ஆசிரியர் சேவையின் 2-I பதவி உயர்வும் 2003.03.01 முதல் 1ஆம் வகுப்பு பதவி உயர்வும் கிடைக்க வேண்டும். அதன்படி பார்த்தால் 2003.03.01 தொடக்கம் உங்களுக்கு பின்வருமாறு சம்பளம் கிடைத்திருக்க வேண்டும். மேல்சொல்லப்பட்ட சுற்றறிக்கையில் கௌரவ பட்டதாரிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறப்புப் பட்டதாரி களையே ஆகும்.

? *1979.04.20 அன்று தராதரப் பத்திரமற்ற ஆசிரியராக நியமனம் பெற்ற நான் 1987.03.01 தொடக்கம் செயல்படும் படியாக ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றுள்ளேன். இன்று முதலாம் வகுப்பில் 2013.03.01 தொடக்கம் 27,450 ரூபா சம்பளம் பெற்று வருகின்றேன். இது சரியான சம்பளமா?*

உங்களுக்கு 1998.03.01 முதல் இலங்கை ஆசிரியர் சேவையின் 2-I பதவி உயர்வும் 2003.03.01 முதல் 1ஆம் வகுப்பு பதவி உயர்வும் கிடைக்க வேண்டும். அதன்படி பார்த்தால் 2003.03.01 தொடக்கம் உங்களுக்கு பின்வருமாறு சம்பளம் கிடைத்திருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| 2003.03.01 | - | 9,830/- |
| 2004.03.01 | - | 11,540/- |
| 2005.03.01 | - | 14,500/- |
| 2006.03.01 | - | 20,569.75 |
| 2007.03.01 | - | 23,925/- |
| 2008.03.01 | - | 24,870/- |
| 2009.03.01 | - | 25,515/- |

2010.03.01 - 26,160/-

2011.03.01 - 26,805/-

2012.03.01 - 27,450/-

2013.03.01 - 28,095/-

உங்களது தகவலின்படியும், கிடைக்க வேண்டிய சம்பளத்தின் படியும் ஒரு படிநிலை வித்தியாசப்படுகின்றது. பதவி உயர்வுகளில் ஒரு வருடம் விடுபட்டு இருக்க வேண்டும். சில சமயம் 1979.04.20 தொடக்கம் 1987.02.28 வரையிலான 7 வருடம் 9 மாத பயிற்றப்படாத சேவைக் காலத்துக்கு நான்கு புள்ளிகளுக்கு பதிலாக மூன்று புள்ளிகள் கிடைத் திருக்க வேண்டும். உங்களுக்கு கிடைத்துள்ள பதவி உயர்வு கடிதங்க ளைச் சரிபார்த்து வலயக் கல்விக் காரியாலயத்துக்கு விண்ணப்பித்து சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

**?** *நான் கடமையாற்றும் பாடசாலையில் 1-11 வரை வகுப்புக்கள் உள்ளன 124 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். சராசரியாக ஒரு வகுப்பில் 11 பிள்ளைகள் கற்கின்றார்கள். 7 ஆசிரியர்களே உள்ளார்கள். இப்பாடசாலைக்கு 6 ஆசிரியர்கள் போதும் என்று வலயக் கல்வி அதிகாரிகள் கூறுகின்றார்கள். எனது அபிப்பிராயத்தின்ப 12 ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். இது பற்றி விளக்க முடியுமா?*

இலங்கையில் உள்ள 9731 பாடசாலைகளில் 2,19,886 அதிபர் களும் ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றார்கள். மாணவர் தொகை 39,73,847 ஆகும். பொதுவாக ஆசிரியர் - மாணவர் வீதம் 1:18 என உள்ளது. நகரப்புறப் பாடசாலைகளில் மேலதிக ஆசிரியர்களும் கிராமப்புற பாடசாலைகளில் அல்லது அதிகஷ்ட அல்லது கஷ்ட பிரதேச பாடசாலைகளில் குறைவான ஆசிரியர்களும் உள்ளார்கள். உங்கள் பாடசாலை கஷ்ட பிரதேச பாடசாலையாக இருக்க வேண்டும். வலயக் கல்விக் காரியாலய அதிகாரிகள் எப்படிக் கணக்குப் பார்த் தாலும், உங்களது பாடசாலைத் தேவை எப்படியாக இருந்தாலும் கல்வி அமைச்சின் 2003.11.07 திகதிய 2003/38 இலக்க "ஆசிரியர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்" என்று சுற்றறிக்கையின் படிதான் பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களைக் கணிப்பீடு செய்ய முடியும்.

1-5 வரை 55 பிள்ளைகள் இருந்தால் ஆரம்பக் கல்விக்கு 3 ஆசிரியர்களும் ஆங்கில பாடத்திற்கு 1 ஆசிரியரும் 6-11 வரை 66 பிள்ளைகள் இருந்தால் விஞ்ஞான, கணித பாடத்திற்கு 1 ஆசிரியரும் ஆங்கில பாடத்திற்கு 1 ஆசிரியரும் பொது என்ற அடிப்படையில் 2 ஆசிரியர்களும் அதிபர்

ஒருவருமாக ஒன்பது பேர்களே உங்களது பாடசாலைக்கு உரித்தானவர்கள் ஆவர். 11 வகுப்புக்கள் உள்ள உங்களது பாடசாலைக்கு இது போதுமானதல்ல. ஆயிரக்கணக்கான பாடசாலை களில் இந்த நிலையே காணப்படுகின்றது. வகுப்புகளில் மாணவர் தொகை குறைவாக இருப்பதால் பல்தர கற்பித்தல் முறையையே கைக்கொள்ள வேண்டியுள்ளது. எப்படியிருந்தாலும் வலயக் கல்விக் காரியாலய அதிகாரிகளின் வாதம் பிழையானதாகும்.

**?** *நான் கடந்த ஆண்டு "உம்றா" மார்க்க கடமையை நிறைவேற்றுவதற்காக வெளிநாட்டு லீவு அனுமதி பெற்று சவூதி அரேபியாவுக்குச் சென்று இருந்தேன். இதற்காக 11 நாட்கள் லீவு பெற்று இருந்தேன். ஐந்து நாட்கள் பாடசாலை லீவு காலத்திலும் ஆறு நாட்கள் பாடசாலை நடைபெறும் காலத்திலும் அந்த லீவு அடங்கியிருந்தது. இந்த 11 நாட்களையும் சம்பளமற்ற லீவாகக் கொண்டு சம்பளத்தை வெட்டியுள்ளார்கள். இது சரியா?*

இத்தகைய குறுகியகால வெளிநாட்டு லீவு எடுக்கும் ஆசிரியர்கள் பாடசாலை தவணை விடுமுறை நாட்களில் இப்படியான லீவை பெற்றால் அது சம்பளத்துடன் கூடிய லீவாகும். அதற்காக சம்பளத்தைக் குறைக்க முடியாது. பாடசாலை தவணை விடுமுறை தவிர்ந்த ஆறு நாட்களுக்கே சம்பளமற்ற லீவாகக் கருதப்பட்டு சம்பளத்தைக் கழிக்க வேண்டும். கழிக்கப்பட்ட ஐந்து நாட்களுக்குரிய சம்பளத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமையுண்டு.

**?** *1993 முதல் பல்கலைக்கழக அனுமதி பெற்று உள்வாரியாக பட்டப் படிப்பை மேற்கொண்டு 1998.11.16 பட்டச் சான்றிதழைப் பெற்றுள்ளேன். இதற்கிடையில் 01.01.1996 அன்று ஆசிரியராக நியமிக்கப்பட்டு 1997.04.28 முதல் 1999.12.31 வரை ஆசிரிய கலாசாலையில் உள்வாரியாக பயிற்சி பெற்று 2000.05.01 முதல் செயல்படும் வகையில் ஆசிரிய பயிற்சி சான்றிதழையும் பெற்றுள்ளேன். 2003.09.09ல் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும் 2007.08.16 முதல் செல்லுபடியாகும் வகையில் முதுகல்விமாணி பட்டத்தையும் பெற்றுள்ளேன். 09.09.2003 தொடக்கம் இலங்கை ஆசிரியர் 2-II தர நியமனத்தைப் பெற்று 2006.05.04 முதல் கடமை நிறைவேற்று அதிபராகவும் கடமை யாற்றி வருகின்றேன். 2011 ஜூன் ஆசிரியம் இதழில் உங்களால் விளக்கப்பட்ட 2011/08 இலக்கச் சுற்றறிக்கைப்படி எனக்கு நன்மை கிடைக்குமா?*

உங்களது கல்வித் தகைமை, ஆசிரிய சேவை தொடர்பாக தகவல் கள் ஆச்சரியமாக இருந்தாலும் நீங்கள் கல்வியில் காட்டியுள்ள ஆர்வம் பாராட்டத்தக்கது. ஆனால் சட்டபூர்வமாக இவ்வாறு எப்படி செய்ய முடிந்தது என்ற விடயம் எனக்கே ஆச்சரியமாகவுள்ளது.

2011/08 சுற்றறிக்கையில் 1996/1997 கல்வி வருடங்களுக்கு முன்னர் உள்ள கல்வியாண்டுகளில் கல்விக் கல்லூரிகளில் அல்லது ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் போது பல்கலைக்கழக மாணவர் தகைமை பெற்று உள்வாரி மாணவராக பட்டச் சான்றிதழ் பெற்றுள்ள ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளின்படி குறிப் பிட்ட பதவி உயர்வுக்காகத் தகைமை பெற்று இருந்தால் அந்த பதவி உயர்வை வழங்கலாம் என உள்ளது.

1996/1997 கல்வி வருடங்கள் என்ற விடயம் உள்நுழைவு வருட மாக இருந்தால் பட்டப்படிப்புக்கு பொருந்தும். ஆனால் பயிற்சி கல்லூரிக்குப் பொருந்தாது ஏன்னென்றால் 1997.04.28 அன்றே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்கின்றீர்கள். இதை 1996/1997 கல்வி வருட மாகக் கொள்ள முடியாது. இந்த சுற்றறிக்கையில் சில மயக்கங்கள் இருந்தாலும் இதன்படி உள்ள நன்மைகள் உங்களுக்கு கிடைக்க ஏற்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. பயிற்சிச் சான்றிதழைக் கருத்தில் கொள்ளாமல் கல்வி டிப்ளோமா சான்றிதழை கவனித்தே 200.309.09 தொடக்கம் 2-II பதவி உயர்வு தந்துள்ளார்கள். புதிய பிரமாணக் குறிப்பில் உங்களது கல்வித் தகைமைகளுக்குச் சலுகைகள் உண்டு. கடமை பார்த்த வகையில் 2012 தொடக்கம் 2-II தர அதிபர் பதவி கிடைக்கும். அது 2-I தர ஆசிரியர் சேவைக்குச் சமமானது.

ஆனாலும் இந்தச் சுற்றறிக்கையில் இன்னொரு பந்தியில் அதன்படி 1996/ 1997 கல்வி ஆண்டுகளுக்கு முன்னர் கல்வியாண்டு களில் பல்கலைக்கழக மொன்றில் உள்வாரி மாணவராகப் பதிவு செய்து பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கும்போது ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் அல்லது கல்விக் கல்லூரியில் பயிற்சி பெற்று தற்போது ஆசிரியர் சேவையில் இருக்கும் ஒரு ஆசிரியர் பெற்றுள்ள பட்டம் ஆசிரியர் சேவை பதவி உயர்வுக்கும் சம்பள மாற்றியமைக்கும் பாவித்துக்கொள்ள முடியும் என உள்ளது.

ஆகவே உங்கள் தகவல்களின் அடிப்படையில் பார்க்கும் போது இந்தச் சுற்றறிக்கையில் சில மயக்கங்கள் உள்ளதை இங்கு குறிப்பிட வேண்டும்.

**?** *இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த நான் 645 ரூபா வருடாந்த சம்பள ஏற்றத்தைப் பெற்றுக் கொண்டிருந்தேன். 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 3ஆம் வகுப்பு அதிபர் பதவி கிடைத்தமையால் 330 ரூபா வருடாந்த சம்பள உயர்ச்சியே கிடைக்கின்றது. எங்களுக்கு விமோசனம் கிடைக்காதா?*

ஆசிரியம்

இந்த சம்பள முரண்பாடு பற்றி பலமுறை விளக்கப்பட்டுள்ளது. தொழில் சங்கங்களின் கோரிக்கையின்படி இந்த முரண்பாட்டுத் தீர்வு காண தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழுவின் அனுமதியோடு கல்வி அமைச்சால் புதிய அமைச்சர் அவைப் பத்திரமொன்று தயாரிக் கப்பட்டுள்ளது. இது அனுமதிக்கப்பட்டு தெளிவான சுற்றறிக்கை வெளியிடப்பட்டால் உங்களைப் போன்றவர்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

645 ரூபா வருடாந்த சம்பள ஏற்றம் 330 ரூபாவாக குறையும் போது 315 ரூபா குறைகின்றது. இத்தொகையை சீராக்கல்படியான தனியாக வழங்கவே அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2-II தர அதிபர்களுக்கு இது 245 ரூபாவாக இருக்கும். இது சகல விடயங்களிலும் சம்பளத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் உங்களுக்கு பாதிப்பு உண்டாகாது. அமைச்சர் அவையின் அனுமதி கிடைக்க வேண்டும் என்பதே முக்கியமான விடயமாகும்.


**?** *பயிற்றப்பட்ட கணித ஆசிரியரான நான் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான இளமானி பட்டப் படிப்புக்குரிய கற்கை விடுமுறைக்கு 1994ம் ஆண்டில் சுற்றறிக்கைப்படி விண்ணப்பித்தேன். ED/04/40/40/1/23 இலக்க 2010.06.30 ஆம் திகதி சுற்றறிக்கையின் பிரகாரமே எனக்குரிய கற்கை லீவை அனுமதித்துள்ளதாக கடிதம் அனுப்பியுள்ளார்கள். இரண்டு பற்றியும் விளக்குவீர்களா?*

1994.08.12 திகதியிடப்பட்ட கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கையொப்பம் இட்ட கடிதத்தின்படி பின்வருமாறு லீவு வழங்கப்படலாம்.

1. திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் விரிவுரை/ செய்முறை என்பவற்றில் கலந்துகொள்வதற்கு 10 தினங்களும்,
2. பரீட்சைகளுக்கு 10 நாட்களும் என்ற வகையில் வருடத்துக்கு 20 நாட்களுக்கு படிப்பு விடுதலை அனுமதிக்கப்படுகின்றது.

என்ற விடயமே அந்தச் சுற்றறிக்கையில் உள்ளது. இது தொடர்பாக இதைவிட வேறு சுற்றறிக்கைகள் வெளிவந்ததாகத் தெரியவில்லை. நீங்கள் குறிப்பிடும் 2010.06.30 திகதிய கடித வாசகங்களைப் பார்தாலேயே மேலதிகத் தகவல்களைத் தரமுடியும்.

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




விலை: 500.00




விலை: 300.00


# CHEMAMADU BOOK CENTRE

**U.G.50, People's Park, Colombo -11**
**Tel: 011-2472362, Fax:011-2448624**
**E=Mail:chemamadu@yahoo.com**
**Website:www.chemamadu.com**




பாடசாலை கற்றல் உபகரணங்கள் மற்றும் கொப்பிகள், புத்தகங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

Importers Office/School Stationary

# CHEMAMADU BOOK CENTRE

UG.50 People's Park, Colombo -11
Tel:011-2472362, 2321905 Fax: 011-2448624
Mob:077 7279983, 077 3147442, 077 8323561
E-Mail:chemamadu@yahoo.com Website:www.chemamadu.com